www.tamilarangam.net

THAYAGAM

# தாயகம்

13 . 5 . 94

உண்மை: 75¢
தேடல்: 4$

## இலங்கைக்கான ஆயுத விற்பனையை நிறுத்தும்படி மண்டேலாவிடம் புலிகள் கோரிக்கை

சிறிசேன கூரேயின் கையாளான பாதாள உலக கும்பல் தலைவன் பிடிபட்டான்

திருமலையில் தமிழ் கட்சிகள்

இழந்த செல்வாக்கை பெற ஜனாதிபதி பகீரதப் பிரயத்தனம்

நகரின் மத்தியில்
துரித பணமாற்றுச் சேவை
CDவிற்பனையாளர்

SENDURAN & CO
584 A, PARLIAMENT ST, TORONTO
(416) 962 7397

Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®
Niru Brand®

தரத்தின் சின்னம்

நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®
நிரு பிராண்ட்®

Niru

Niru

# தரத்தின் சின்னம்
# நிரு பிராண்ட்®
# Niru Brand®

நிரு பிராண்ட் தயாரிப்புகளுக்கு நிகர்
Niru Brand® தயாரிப்புகளே.

உங்கள் கைகளில் கிடைப்பது தரமான
நிரு பிராண்ட் தயாரிப்புகளா? என்பதை
உறுதிப்படுத்துங்கள்

## போலிகளை வாங்கி ஏமாறுதீர்கள்

Niru Enterprises Inc,
**Tel:(416) 299-4202**

நிரு பிராண்ட் தயாரிப்புக்கள் எல்லா இலங்கை
வர்த்தக நிலையங்களிலும் விற்பனையாகின்றன.
உங்கள் ஏமாற்றத்தைத் தவிர்ப்பதற்கு எம்முடன்
தொடர்பு கொண்டு எமது தயாரிப்புகள்
எப்பொழுதும் கிடைக்கக் கூடிய
வர்த்தக நிலையங்களை அறியலாம்

www.tamilarangam.net

Second class mail Registration No:8435




# இலங்கைக்கு ஆயுத விற்பனை செய்ய வேண்டாம் மண்டேலாவிடம் புலிகள் கோரிக்கை

இலங்கைக்கு ஆயுத விற்பனை செய்ய வேண்டாம் என்று புலிகள் தென்னாபிரிக்க ஜனாதிபதி நெல்சன் மண்டேலாவைக் கேட்டுள்ளனர். புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி மண்டேலாவுக்கு அனுப்பிய வாழ்த்துச் செய்தியிலேயே புலிகள் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளனர்.

புலிகளின் லண்டன் அலுவலகத்திலிருந்து கடந்த செவ்வாய்க்கிழமை அனுப்பப்பட்ட இந்த செய்தியில் 'இலங்கை அரசுக்கு கவச வாகனங்களையும் ஆயுதங்களையும் விற்பதற்கான முடிவை நிறுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மேன்மை தங்கிய ஜனாதிபதியவர்களைக் கேட்டுக் கொள்கிறோம்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் ஈழ மக்களின் சமாதானத்திற்கும் சுதந்திரத்துக்குமான அபிலாசைகளுக்கு எதிராக இந்த ஆயுதங்கள் இலங்கை அரசினால் பயன்படுத்தப்படுகின்றன. பெரும்பான்மை சிங்கள அரசுகளின் கரங்களில் இன அழிப்புக்கு ஒத்த அராஜகங்களையும் அவமானங்களையும் தமிழர்கள் எதிர்கொள்ள வேண்டி வந்தது என்று குறிப்பிட்ட புலிகள், எல்லா தடைகளையும் மீறி தனது மக்களுக்கு சமாதானத்தையும் சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுத்த மண்டேலாவை பாராட்டியுள்ளனர். 'உலகெங்கும் அடிமைத்தனத்திலிருந்து விடுபட பாடுபடும் அடக்கப்பட்ட மக்களின் விடயங்களில் உங்கள் நாடு பெரும் பங்கெடுக்கும்' என்றும் அச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# கொழும்பில் பாதாள உலக கும்பல்களுக்கு இடையில் மோதல்

கொழும்புப் பகுதியில் பாதாள உலக குற்றக் கும்பல்களை அடக்கும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டுள்ளனர். கடந்த வாரங்களில் கொழும்பில் இரண்டு எதிர்க்கும்பல்களுக்கு இடையில் கடும் துப்பாக்கிச் சமர்கள் நடைபெற்றன. இது தொடர்பாக இரண்டு குழுக்களையும் சேர்ந்த பதினைந்து பேர் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். இவர்களுக்கு பெரிய அரசியல்வாதிகளுடன் தொடர்புகள் இருப்பதாக கூறப்படுகிறது. ஒரு குழுவின் தலைவர் தற்போது தேடப்பட்டு வருகிறார். சொத்தி உபாலி, சிந்தகா என்ற இரு குழுவினருக்கு இடையில் இந்த மோதல் நடைபெறுகிறது. இப்போது சொத்தி உபாலி என்பவர் தேடப்பட்டு வருபவர் ஆவர்.

நீர்கொழும்பில் நீதிமன்றத்தில் வைத்து கடந்த செவ்வாய்க்கிழமை ஒரு குழுவின் தலைவர் சுட்டுக் காயப்படுத்தப்பட்டதை அடுத்து இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொலிஸ்மா அதிபர் பிராங் டி சில்வா உத்தரவிட்டார். நீதிமன்றத்தில் சுட்டவர் பொலிசாரால் உடனடியாக சுட்டுக் கொல்லப்பட்டார். இதன் பின்னர் இரண்டு இடங்களில் இந்தக் குழுக்களுக்கு இடையில் நடைபெற்ற சண்டையில் ஒருவர் காயமடைந்தார்.

கடந்த வாரம் ஐ.தே.கட்சி மேயர் ஒருவரின் வீட்டை முற்றுகையிட்ட பொலிசார் அங்கு இரண்டு துப்பாக்கிகள், சன்னங்களை கைப்பற்றினர். மேலிட உத்தரவின்படியே இந்த தேடுதல் நடந்ததாக நடத்திய தலைமைப் பொலிஸ் அதிகாரி தெரிவித்தார்.

இந்த வருடம் நடைபெறவிருக்கும் தேர்தல்களுக்கு முன்னதாக அரசியல்வாதிகளிடம் இருக்கும் ஆயுதங்களைக் களையும்படி பொலிசாருக்கு உத்தரவிடப்பட்டிருக்கிறது. ஜே.வி.பி காலத்தில் அரசியல்வாதிகளுக்கு இந்த ஆயுதங்கள் வழங்கப்பட்டன.

# பிரேமதாசாவின் கொள்கைகளை தொடரும் ஐ.தே.க

ஆளும் கட்சியின் செல்வாக்கை மீளப் பெறுவதற்காக முன்பு பிரேமதாசா நடத்திய சமூக உதவித் திட்டங்கள் திரும்பவும் அமுல்படுத்தப்படுவதற்கு பொருளியல் நிபுணர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர். இந்த செலவினத்தால் பணவீக்கம் ஏற்படலாம் என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

புதிய கொடுப்பனவுகளின் எண்ணிக்கை 180 கோடி ரூபாய்களாகும். இந்த பணத்தைக் கொடுக்க வரிகளைக் கூட்ட முடியாது. காரணம் விலைகள் அதிகரிக்கும். எனவே இந்தப் பணம் கடனாக வாங்கப்படுவதால் அதன் வட்டி காரணமாக பணவீக்கம் ஏற்படும் என்று அவர்கள் காரணம் காட்டுகின்றனர்.

ஆனால் இந்த வருட மழையின் பின்பான விவசாய வளர்ச்சியும் உறுதியடையும் ரூபாயின் பெறுமதியும் பணவீக்கத்தைக் குறைக்கும் என்றே மற்ற நிபுணர்கள் எதிர்பார்க்கின்றனர்.

2 ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிரேமதாசாவின் குடும்பம் ஐ.தே.கவில்?

ஐ.தே.கட்சிக்குள் பிரேமதாசாவின் மனைவியையும் மகனையும் கொண்டு வரும் முயற்சிகள் தொடர்கின்றன. பிரேமதாசாவின் சிலை திறப்பு விழாவில் ஜனாதிபதி கலந்து கொள்ளாத போதிலும் அரசியலில் நுழையும் ஆர்வமும் இருவருக்கும் இருப்பதாகவே தெரிவிக்கப்படுகிறது.

தமது தந்தையின் பாதையைப் பின்பற்றி, அவரால் தொடங்கப்பட்ட திட்டங்களை முன்னெடுத்தால் ஐ.தே. கட்சிக்கு தங்கள் குடும்பத்தின் ஆதரவு உண்டென்று மகன் சஜித் இந்து பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார். தந்தையின் விரோதியான காமினியுடன் சேர்ந்து செயற்பட முடியுமா என்று கேட்ட போது தனிநபர்கள் பற்றி தனக்கு பிரச்சினை இல்லை என்றும் கொள்கைகளே முக்கியமானவை என்றும் அவர் தெரிவித்தார்.

இதற்குள் சிலை திறப்பு விழாவிற்கு பிரேமதாசாவின் குடும்பத்தினரும் செல்லவில்லை. அத்துடன் சில பிரேமதாசாவின் அமைப்பில் இல்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். சிலைக்காக செலவிடப்பட்ட 25 லட்சம் ரூபாய்களும் பொதுப்பணத்தை வீணாக்கி செய்யப்பட்டது என்று அவர்கள் கூறியுள்ளனர். தற்போது மாகோவில் உள்ள பிரேமதாசாவின் பண்ணையில் ஒரு சிலையை அமைக்க அவர்கள் உத்தேசித்துள்ளனர்.

# எயர்லங்காவிற்கு புதுவிமானங்கள்

எயர்லங்கா நிறுவனம் எயர்பஸ் நிறுவனத்துடன் புதிய ஒப்பந்தம் ஒன்றுக்கு வந்துள்ளது. முன்னர் ஐந்து விமானங்கள் வாங்குவதாக செய்யப்பட்ட ஒப்பந்தத்தில் ஊழல் நடந்ததாக குற்றம் சாட்டப்பட்டது தெரிந்ததே. 91ல 64.3 கோடி டொலர்கள் செலவில் ஐந்து விமானங்கள் வாங்க திட்டமிடப்பட்டது. ஆனால் பொருளாதார நெருக்கடியால் மூன்று விமானங்கள் வாங்க திட்டமிட்ட போது எயர்பஸ் நிறுவனத்திற்கு நட்டஈடாக பத்துக்கோடி டொலர்களை வழங்க ஒப்பந்தத்தில் வழி இருந்தது. முன்னைய ஒப்பந்தத்திற்கு உலகவங்கி கடும் கண்டனம் தெரிவித்திருந்தது.

தற்போது மூன்று விமானங்கள் வாங்குவதற்கு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளது. அத்துடன் நட்ட ஈடு வழங்க வேண்டிய தேவையும் இல்லை.

எயர்லங்காவிடம் தற்போது ஐந்து லொக்ஹீட் ட்ரைஸ்டார் விமானங்களும் இரண்டு போயிங் 747 விமானங்களும் உள்ளன. அத்துடன் இரண்டு எயர்பஸ் விமானங்களும் உள்ளன.

# ஜேர்மனி தமிழ் தொலைக்காட்சிக்கு இலங்கை அரசு ஆட்சேபம்

ஜேர்மனியில் நடத்தப்படும் தமிழ் தொலைக்காட்சி நிகழ்ச்சி பற்றி ஜேர்மன் அரசு கண்காணிக்க வேண்டும் என்று ஜேர்மனியை இலங்கை கேட்டுள்ளதாக இலங்கையின் வெளிநாட்டமைச்சு பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்ச்சி முன்னாள் புலி உறுப்பினர் ஒருவரால் நடத்தப்படுவதாகவும் அரசுக்கு எதிராக பிரசாரங்கள் செய்யப்பட்டால் ஜேர்மனுடனான உறவுகள் பாதிக்கப்படுவதாகவும் ஐரோப்பிய நாடுகளில் பார்க்க கூடிய இந்த நிகழ்ச்சி மூலம் பிரிவினைப் போராட்டத்திற்கு ஆதரவு தேடப்படலாம் என்றும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

ஆனால் ஜேர்மன் மாநிலங்களின் அதிகாரத்தின் கீழேயே தொலைக்காட்சி விடயங்கள் வருவதால் மத்திய அரசு தலையிட முடியாது என்றும் அரசியல் பிரசாரங்களில் ஈடுபட்டால் மட்டுமே தலையிட முடியும் என்றும் ஜேர்மன் சார்பில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

# ஒப்சேர்வர் ஆசிரியர் ராஜினாமா வாபஸ்

பிரேமதாசா காலத்தில் பிரேமதாசாவிற்கு ஆதரவாக லேக் ஹவுஸ் பத்திரிகைகளில் இருந்து எழுதிய மகிந்தபால கடந்த வாரம் தனது பதவியை ராஜினாமா செய்தார். லேக் ஹவுஸ் தலைவர் சுனில் ரொட்றிகோவுடன் இவரும் ராஜினாமா செய்திருந்தார்.

ஆனால் புதிதாக நியமிக்கப்பட்ட சரத் அமுனுகம கேட்டுக்கொண்டதன் பேரில் தனது ராஜினாமாவை வாபஸ் பெற்று தொடர்ந்தும் ஒப்சேர்வரின் ஆசிரியராக கடமையாற்ற மகிந்தபால ஒத்துக் கொண்டுள்ளார்.

# புலி முக்கியஸ்தர் தற்கொலை

புலிகள் இயக்கத்திலிருந்து விலகிய நிச்சாட் என்பவர் சயனைட் அருந்தித் தற்கொலை செய்துள்ளதாக வெளிநாட்டு செய்தி முகவர் குறிப்புகள் தெரிவிக்கின்றன. புலிகள் இயக்கத்தின் உளவுப் பிரிவின் உதவித் தலைவரான இவர் கடந்த சனிக்கிழமை சயனைட் அருந்தினார். இவரைக் கைது செய்ய புலிகள் ஆணை பிறப்பித்ததை அடுத்தே இவர் தற்கொலை செய்ததாக கூறப்படுகிறது.

### பிரேமதாசாவின்...

பிரேமதாசாவின் திட்டங்களான இலவச சீருடை, இலவச உணவு, ஜனசவியத் திட்டம் போன்றன மீண்டும் அமுலாகுகின்றன. அத்துடன் அரச ஊழியர்களுக்கு சம்பள உயர்வு, மத்திய தர வர்க்கத்தினருக்கு வரிக் குறைப்பு, விவசாயிகளுக்கான கடன்கள் ரத்து, பதினையாயிரம் கிராமத் திட்டங்கள் போன்றன தொடர்ந்தும் அமுலாக்கப்பட உள்ளன.

இந்த புதிய செலவுகளால் 830 கோடி ரூபாய்கள் வரவுசெலவுத் திட்டத்தில் துண்டு விழலாம். இது வழமையான தொகையை விட 180 கோடி அதிகமாகும்.

அத்துடன் வரிக்குறைப்பால் 400 கோடி ரூபா இழக்கப்படும். இவற்றால் தற்போது 17 வீதமாக உள்ள பணவீக்கம் இருபது வீதமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐ.தே.கவுக்கு புதிய செயலாளர்

பிளவுகளால் பாதிக்கப்பட்டிருக்கும் ஐ.தே.கட்சி தனது கட்சியைப் புனரமைக்க உறுதி பூண்டிருக்கிறது. அடுத்த தேர்தல்களில் வெற்றி பெற வேண்டும் என்பதில் கட்சி உறுதியாயுள்ளது. 'கட்சியை புனரமைப்பதே எனது முக்கிய பாணி. உடைந்த பகுதிகளையும் வெடிப்புகளையும் புனரமைக்க வேண்டும். நாங்கள் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை எமக்குண்டு' என்று புதிய செயலாளர் டாக்டர் காமினி விஜேசேகர தெரிவித்துள்ளார்.

சிறிசேன கூரேக்கு பின்னர் பதவியேற்ற இவர் சமீபத்திய தேர்தல் கட்சிக்கு கிடைத்த வரப்பிரசாதம் என்கிறார். பதினேழு வருடங்களாக ஆட்சியிலிருந்தால் யதார்த்த நிலையுடன் தொடர்பு அற்றுப் போகிறது என்கிறார் அவர். இந்த தோல்வியால் கட்சி புதிய தோற்றம் ஒன்றை தேட வேண்டிய நிலை ஏற்பட்டது என்றும் மாவட்ட, மாகாண, தேசிய அளவில் புனரமைப்பு செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

சுதந்திர பொருளாதாரம், ஜனநாயகம், சட்டம், அடிப்படை மனித உரிமைகளின் அடிப்படையில் புதிய தோற்றம் பெற வேண்டும் என்றும் புனரமைப்பது பாரிய பணி என்றும் அவர் கூறினார். லலித்தின் கட்சியினரை மீண்டும் கட்சிக்குள் கொணடு வர முயலும் அவர் அவர்களின் கோரிக்கையான லலித்தின் மரணம் பற்றிய விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைக்கு அமைச்சரவை அனுமதியளிக்கும் எனக் கருதுவதாக தெரிவித்தார்.

அத்துடன் பிரேமதாசாவின் மனைவியையும் மகனையும் கட்சிக்குள் கொண்டு வரவும் முயற்சிகள் நடைபெறுகின்றன.

சுதந்திரக்கட்சி தற்போது செல்வாக்கு கொண்டிருந்தாலும் தேர்தலில் வெற்றி பெறாது என்றும் சுதந்திரக்கட்சியின் ஆதரவு இடதுசாரிக் கட்சிகள் சுதந்திரக்க கட்சியின் சுதந்திரப் பொருளாதாரம் குறித்து அதிருப்தி கொண்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

# இந்தியாவில் ஜெனரல் மோட்டோர்ஸ்

ஜெனரல் மோட்டோர்ஸ் நிறுவனம் இந்திய கார் உற்பத்தி நிறுவனமான இந்துஸ்தான் மோட்டோர்ஸ் நிறுவனத்துடன் சேர்ந்து வருடாந்தம் இருபதாயிரம் கார்களைத் தயாரிக்க உள்ளது. சுமார் நாற்பது வருடங்களுக்கு முன்னர் ஜெனரல் மோட்டோர்ஸ் நிறுவனம் இந்தியாவில் கார் உற்பத்தி செய்வதை நிறுத்தியிருந்தது.

இந்திய அரசின் அனுமதியுடன் நடந்த இந்த ஒப்பந்தம் மூலம் ஜெனரல் மோட்டோர்ஸ் பத்துக் கோடி டொலர்களை முதலீடு செய்கிறது. இரு நிறுவனங்களுக்கும் ஐம்பது வீத முதலீட்டைக் கொண்டிருக்கும்.

1928ம் ஆண்டு முதல் பம்பாயில் செவர்லட் கார்களை உற்பத்தி செய்த ஜெனரல் மோட்டோர்ஸ் அடுத்த 26 வருடங்களுக்கு ட்ரக்குகள், பஸ்கள் போன்றவற்றை உற்பத்தி செய்து ஏற்றுமதியும் செய்தது. பின்னர் 1954ல் நிறுவனம் மூடப்பட்டது. பின்னர் இந்துஸ்தான் நிறுவனத்துடன் சேர்ந்து பெட்போர்ட் லொறிகள், வொக்சோல் கார்கள் போன்றவற்றை உற்பத்தி செய்தது.

ஐரோப்பாவில் உற்பத்தி செய்யப்படும் ஒப்பெல் அஸ்ட்ரா கார்களே இங்கு உற்பத்தியாகவுள்ளன.

இந்துஸ்தான் மோட்டார் நிறுவனம் தொழிலதிபர் பிர்லாவிற்கு சொந்தமானது.

# தமிழகத்திலிருந்து அகதிகள் வருகை

இந்தியாவிலிருந்து மேலும் 5500 தமிழ் அகதிகள் இலங்கை வரவுள்ளனர். கடந்த வாரம் இலங்கை அதிகாரிகளும் இந்திய அதிகாரிகளும் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பின்னர் இவர்கள் திருப்பி அனுப்பப்பட உள்ளனர். இந்திய கப்பலான ராமானுஜம் சேவையில் ஈடுபட்டதும் உடனடியாக 1500 பேர் மன்னாருக்கு அனுப்பப்படுவார்கள். முன்பு 75 ஆயிரம் அகதிகள் திருப்பி அனுப்பப்பட்ட போதும் முதல் தடவையாக இருதரப்பு அதிகாரிகளும் பேசி முடிவுக்கு வந்தது இதுவே முதற்தடவையாகும்.

இந்தியாவில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 177 வள்ளங்களும் திருப்பி அனுப்பப்பட உள்ளன.

# தேர்தலுக்காக வரி குறைப்பு

அடுத்த தேர்தலை எதிர்பார்த்துள்ள இலங்கை அரசு கடந்த புதன்கிழமை டின்மீன், சீனி, துணிவகைகள் போன்றவற்றுக்கான இறக்குமதி வரிகளைக் குறைத்ததுடன் கருவாட்டின் இறக்குமதி வரியை நீக்கியுள்ளது.

உணவுப் பொருட்களின் விலையைக் குறைக்க வேண்டும் என்ற

4ம் பக்கம் பார்க்க..

# புதிய கர்ப்பத்தடைச் சாதனம் அறிமுகம்

இந்தியா புதிய கர்ப்பத்தடைச் சாதனம் ஒன்றை சந்தைப்படுத்தவுள்ளது. டிபோ புரொவீரா எனப்படும் ஊசி மூலம் உடலில் செலுத்தக் கூடிய இந்த சாதனத்தை அறிமுகப்படுத்துவதற்கு சமூக நலக் குழுக்கள், பெண்கள் அமைப்புகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இந்த மருந்து அமெரிக்க உணவு, மருந்து நிறுவனத்தால் அங்கீகரிக்கப் படவில்லை என்றும் சரியாக மருத்துவ ரீதியாக பரீட்சிக்கப்படவில்லை என்றும் அவர்கள் குற்றம் சாட்டியுள்ளனர். இந்த மருந்தினால் பக்க விளைவுகள் ஏற்படும் என்றும் அவர்கள் கூறுகின்றனர். சுவிஸ், சுவீடன், தாய்லாந்து, பர்மா, பாகிஸ்தான், ஹொங்கொங் போன்ற நாடுகளில் இவை பயன்படுகின்றன.

ஊசி மூலம் ஏற்றப்படும் இந்த மருந்து புரொஜெஸ்ரோனை உடலில் மெதுவாக சுரக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியாவில் வெளிநாட்டு ஆங்கிலப் பத்திரிகைகள்

இந்தியாவில் தற்போது வெளிநாட்டு பதிப்பகங்கள் புதிய சஞ்சிகைகளை வெளியிடவுள்ளன. ஏற்கனவே இந்தியாவில் ஐம்பது ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இந்தியாவில் நான்கு வீதமானவர்களே ஆங்கிலம் பேசக் கூடியவர்களாவர்.

வெளிநாட்டு பத்திரிகைகள் வெளியிடப்படுவதற்கு அனுமதிப்பது பற்றிய விடயம் தற்போது பெரும் சர்ச்சையைக் கிளப்பியிருக்கிறது. கருத்துச்சுதந்திரம், சுதந்திர வர்த்தகம் என்பதற்கும் அப்பால், தகவல் ஏகாதிபத்தியம், கலாசார காலனித்துவம் என்பன பற்றி தற்போது விவாதிக்கப்படுகிறது.

39 வருடங்களாக வெளிநாட்டுப் பத்திரிகைகளுக்கு இந்தியாவில் தடை விதிக்கப்பட்டிருக்கிறது. சர்வதேச செய்தி நிறுவனங்களின் வளங்களின் முன்னால் இந்திய செய்தி பத்திரிகைகள் போட்டியிட முடியும் என்பது பெரிய கேள்விக்குரியது. இந்தியாவின் எண்பது கோடி மக்களில் மூன்றரைக் கோடி மக்களே ஆங்கிலம் வாசிக்கக் கூடியவர்கள். இவர்களுக்கு 56 ஆங்கிலப் பத்திரிகைகள் வெளிவருகின்றன. இதில் புது டெல்லியில் மட்டும் பதினேந்து பத்திரிகைகள் வெளிவருகின்றன. அதிகமாக விற்பனையாகும் ரைம்ஸ் ஒப் இந்தியா ஆறு நகரங்களில் ஏழு லட்சம் பிரதிகள் விற்பனையாகிறது.

சர்வதேச சஞ்சிகைகளான ரைம், நியூஸ்வீக் என்பவற்றுடன் பைனான்சியல் ரைம்ஸ் ஒப் லண்டன், ஆசியன் வோல் ஸ்ட்ரீட் ஜேர்னல், இன்ரர்நஷனல் ஹெரால்ட் ட்ரிபியூன் போன்ற பல பத்திரிகைகள் இந்தியாவில் ஏற்கனவே கிடைக்கின்றன. ஆனால் இவை இறக்குமதி செய்யப்படுவதால் மறுநாளே கிடைக்கின்றன. அத்துடன் அவற்றின் விலையும் அதிகம். இந்தியப் பத்திரிகைகளை விட 250 மடங்கு அதிகமானவை.

பத்திரிகைத் தடையுடன் அசோசியேட்டட் பிரஸ், றெய்ட்டர் செய்தி நிறுவனங்களுக்கும் தடை உள்ளது. றீடர்ஸ் டைஜஸ்ட் மட்டுமே இந்த தடைக்கு முன்னதாக அச்சிடத் தொடங்கியதால் தொடர்ந்தும் வெளிவருகிறது.

தற்போது புதிய பொருளாதார சீர்திருத்தங்களின் பின்னர் ரைம் சஞ்சிகை இந்தியா ருடேயுடன் சேர்ந்து புதிய சஞ்சிகை வெளியிட விண்ணப்பித்துள்ளது.

அமெரிக்கா போன்ற நாடுகளில் பத்திரிகை வெளியிட அங்கு பிரஜையாக வேண்டும் என்ற விதி இருக்கும் போது இங்கே எப்படி வெளிநாட்டாரை அனுமதிக்கலாம் என்றுகேட்கிறார் பங்களூரில் இருந்து வரும் டெக்கான் ஹெரால் உரிமையாளர் ஹரிகுமார்.

ஆனால் தற்போதைய சட்டலைட் தொலைக்காட்சியின் வருகை இந்தியாவின் நிலையை மாற்றியுள்ளது. இந்த நிகழ்ச்சிகளைப் பார்க்க முடியும் என்றால் இந்த பத்திரிகைகளையும் அனுமதிக்க முடியும் என்கிறார்கள் மற்றவர்கள்.

## அமெரிக்க விஜயத்தை ஒட்டி பின்போடப்பட்ட ஏவுகணைப் பரிசோதனை

இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்கா செல்வதை ஒட்டி அமெரிக்காவில் அவரது பேச்சுவார்த்தைகளுக்கு சிக்கல் ஏற்படாத வண்ணம் இந்தியா ஏவுகணைப் பரிசோதனை ஒன்றைப் பின்போட்டுள்ளது. ராவ் வாஷிங்டனில் இருந்துமே 21ம்திகதி திரும்பும்வரை இந்த பரிசோதனைகளை நிறுத்துமாறு பிரதமர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தியாவின் பிருத்வி ஏவுகணைப் பரிசோதனைகள் பிரதமரின் விஜயத்தை முன்னிட்டு பின்போடப்பட்டதாக செய்திகள் வந்த போது பிரதமர் அலுவலகம் முதலில் அதை மறுத்தது. 'வெளிநாடு ஒன்றுக்கு செல்லும் போது ஒரு பிரதமர் தனது அரசாங்க கொள்கையை மாற்றுவாராயின் அவர் பெறுமதியற்றவர்' என்று ராவ் தெரிவித்திருந்தார்.

ஆனால் பிரதமரின் புதிய இந்தக் கொள்கை எதிர்க்கட்சிகள், பத்திரிகைகளின் கோபத்தைக் கிளறியுள்ளது.

## திருமலையில் தமிழ்க் கட்சிகள்

திருகோணமலையில் தற்போது கூட்டணியும் மற்றும் இயக்கங்களும் சேர்ந்து கடும் பிரசாரங்களில் ஈடுபட்டுள்ளன. கூட்டணி கிளை ஒன்று அமைக்கப்பட்டு அங்கு கட்சி அலுவல்கள் நடைபெறுகின்றன. வருகின்ற பொதுத்தேர்தல்களில் கூட்டணி போட்டியிடும் எண்ணத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. சமீபத்திய அரசியல் சூழ்நிலைகளால் ஒதுங்கியிருந்த போதிலும் மக்களோடு இணைந்து கொள்ள வேண்டிய நேரம் வந்து விட்டது என்ற பாணியில் கூட்டணியின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. கூட்டணிக் கூட்டங்களில் பலர் இவ்வளவு காலமும் எங்கே சென்றீர்கள் என்று காரசாரமாகக் கேள்விக் கணைகள் தொடுத்ததாகவும் கூறப்படுகிறது.

இதை விட கிழக்கில் கூட்டம் நடத்துகின்ற அமைப்புகள் திருவிழாக்களில் ஆட்சேர்ப்பது போன்று இசைநிகழ்ச்சிகள் நடத்தி மக்களை வரவழைக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கின்றன. இதை விட ஒவ்வொரு இயக்கமும் மற்றவர்களின் செயற்பாட்டை மழுங்கடிக்கவும் மேடைகளில் சேறு வாரவும்

9 ம் பக்கம் பார்க்க..

## தேர்தலுக்காக..

கோரிக்கைக்கு செவிமடுத்த ஜனாதிபதி இந்த முடிவை எடுத்துள்ளார் என்று ஜனாதிபதி செயலகம் விடுத்த அறிக்கை ஒன்று கூறுகிறது. இதனால் அரசுக்கு மொத்தம் முப்பது கோடி ரூபா வருமான இழப்பு ஏற்படும்.

முன்னைய சமூக உதவிக் கொடுப்பனவுகள் போதிய பணம் இல்லாததால் நிறுத்தப்பட்டிருந்தது. ஆதரவு குறைந்த காரணத்தால் மீண்டும் அவற்றை மீள அமுல்படுத்துவது பணவீக்கத்தை அதிகரிக்கும் என்று பொருளியலாளர்கள் கருத்துத் தெரிவித்திருந்தனர். இதன்பின்பே இந்தவரிகுறைப்பு நிகழ்ந்திருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மயக்கங்கள்

எம் நாட்டில் பரீட்சை முறையில் மட்டுமல்ல பாடநூல் ஆக்கத்திலும் கூட பிற்போக்குத் தனம் உண்டு.

சைவ சமய பாட நூல்களில் அப்பர் சமணரைத் தோற்கடித்தார், வாதம் புரிந்தார் வென்றார் என்றெல்லாம் பாடவிதானங்கள் உண்டு.

வேறோர் சமயத்தினை சைவம் வென்றது எனக் கூறும் போது இப்பாடத்திட்டம் சைவர்களை உள்ளீடாக சமய வெறியேற்றுகின்றது.

இதன் வெளிப்பாடகத் தான் எம் சக கிறிஸ்தவ மாணுக்கர்களுடன் இடைவேளைகளில் நாமும் தர்க்கம் புரிந்திருக்கின்றோம். அவர்கள் சமயத்தை இழிவாய் மதித்திருக்கிறோம்.

இஸ்லாம் மாணவர்களுடன் வாதாடியிருக்கிறோம். நையாண்டி செய்திருக்கின்றோம்.

இதே போல் தான் அவர்களும் சைவ சமயத்தை சாடியுள்ளனர். வசைகூறியுள்ளனர்.

இப்படியே ஆளுக்கு ஆள் சமய ரீதியாக பிளவுபட்டு கட்சி கட்டி வாதிட்டதில் கண்டது என்ன?

அடுத்தவர் மதத்தை மதிக்கச்செய்ய பிற மதத்தவரையும் அரவணைக்க எம் சமய பாட நூல்கள் எதுவும் செய்யவில்லை. மாறாக கிளறியுள்ளது.

இவ்வாறே பிற பாட நூல்களும் ஒற்றுமையை ஏற்படுத்தத் தவறியுள்ளன.

இன்றய இன முரண்பாடுகளுக்கு பாடத் திட்டங்களும் தூபமிட்டிருக்கின்றன. இது ஏன் கணிக்கப்படவில்லை.

★ ★ ★

எவர் பிராமணர் என வேதத்தில் சொல்ல மறந்தனரா? வம்ச(குல) வழியில் தான் பிராமணர் வரவேண்டுமென வேதத்தில் சொல்லப்படுகின்றதா? இல்லை எனும் இவற்றுக்கான பதில் பலருக்கு தெரிந்திருப்பதில்லை இன்றும் பிராமணர்கள் வாதிடுவது போல் அவர்கள் உண்மையில் சுத்தமானவர்களா?

இன்று கிரிகைகள், பூசைகள் செய்யும் அத்தனை பேரும் வேதம் சொல்லும் பிராமணருக்கான தகுதியினைப் பெற்றிருக்கின்றனரா?

வேதஆகமத்திற்கு ஒழுக நடக்கின்றார்களா? இவற்றுக்கான இல்லை எனும் பதிலை பிராமணர் எனச் சொல்லிக்கொண்டு கிரிகைகள் செய்து கொண்டிருப்போர் சொல்லப் போவதில்லை.

கோவில் பூசைகள் சமய கிரிகைகள் என்பன செய்தல் தொழிலே அல்ல.

வேதியர்களாக தம்மை அர்ப்பணம் செய்து கொண்டோரது கடமை.

ஆனால் நடப்பது என்ன? "அந்தியெட்டிக் கிரிகையா? அதற்கு 100 டொலர் தர வேண்டும். தானமாக இன்ன, இன்ன தரவேண்டும் அல்லது அதற்கு பதில் கூடுதல் பணம் தர வேண்டும்."

இப்படியும் பதில் சொல்லப்பட்டால் இது தொழிலினை உறுதி செய்யுதா? வேதம் சொல்லும் கடமையை உணர்த்துதா?

இங்கு எந்தப் புரோகிதரை அணுகினாலும் இப் பதில் சொல்லப்படும்.

தங்கள் படங்களையும் போட்டு விளம்பரம் செய்வது சேவையையா குறிக்கிறது?

மனம் விரும்பி இயன்றதைக் கொடுப்பதுதான் தானம்.

"பூசணிக்காய் வேண்டாம், பயத்தங்காய் வேண்டாம், கரட்டோ பீற்றூட்டோ தாருங்கள் அல்லது அதற்கு பணம் தாருங்கள்". இப்படிக் கேட்பது தானம் அல்ல.

அதைவிடக் கோயில்களில் இன்ன இன்ன பூசைகளுக்கு இவ்வளவு பணம் என பட்டியல்களும் உண்டு.

கோயில்கள் வழிபாடு நடத்தும் இடமா? இறைவன் கிருபைகளை விலை பேசி விற்கும் இடமா?

ஆராதனையோ, திருமண, சாந்தி, கிரிகைகளோ ஒவ்வொரு புரோகிதரும் ஒவ்வொரு முறைகளில் செய்து கொள்வது எதைக் காட்டுகிறது?

ஆளுக்கு ஆள் வேதப் புத்தகங்களை தாங்களே ஆக்கிக் கொண்டார்களோ!

நாற்பது வயது திருமணம் செய்து வைப்பது மனதை நெருடுவதாயில்லை?

அது சரி இந்தக் குருக்கள் பட்டம் எப்படி எடுத்தனர்?

வேதங்கள் உபநிடதங்கள் புராணங்கள் சாத்திரங்கள் போன்றன கற்றுத் தேறி பிரதம குருக்களிடமிருந்து பெற்றுக் கொண்டனரா? அல்லது கனடா வந்ததும் வராததுமாய் தாங்களே தங்களைக் குருக்கள் என்று பிரகடனப்படுத்திக் கொண்டனரா?

★ ★ ★

கோவிலில் கும்பாபிசேகம் செய்ய திருச்சிலைகள் பிரதிஷ்டை செய்ய என இன்ன பிற வைபவங்களை நடத்தி வைக்கும் குருவுக்கு மனைவி இருக்க வேண்டும் என்பது இன்றும் நடைமுறையில் உண்டு.

இக் காரணமாக கிழப் பிராமணர்கள் வயதில் மிகக் குறைந்த பெண்களை இரண்டாந் தரமாகவோ மூன்றாந் தாரமாகவோ அல்லது நான்காம் தாரமாகக் கூட மணம் செய்து கொள்ளும் கொடுமை இன்றும் உண்டு.

இப்படி வயோதிபர் குறைந்த வயதுப் பெண்களை மணந்ததால் மிகமிக இளம்வயதிலேயே தலை மழுங்கி முக்காடு போட்டு மூலையில் வாழும் இளம் விதவைகளின் கண்ணீர் இந்து தர்மத்தை களங்கமாக்குகிறது ஏன் இன்னும் கவனிப்பில்லாமல் உள்ளது?

**அருண்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமது செய்கைகளை நியாயப்படுத்த எங்கெல்லாம் தடயம் கிடைக்குமோ அங்கெல்லாம் தேடி எடுத்து கிடைப்பவற்றை எல்லாம் சார்புமயப்படுத்தி 'தாம் சொன்னால் சரி' என்று நினைத்த வண்ணம் வாழுவது தமிழர்களுக்கு அத்துபடி. அதில் பெருமையும் பட்டுக்கொள்வர். ஆனால் இத்தன்மை முன்னேற்றத்திற்கு தடையாக அமைந்துவிடுகிறது. சரியானதை நியாயப்படுத்த நினைக்காமல் தாம் நினைப்பதை தமக்குச் சாதகமானதை நியாயப்படுத்த முனையும் செய்கைகள் சுய கௌரவங்களை காப்பாற்றிக்கொள்ள உதவினாலும் தொடர்ச்சியான முன்னேற்றத்துக்கு வழிவகுக்காது.

# நியாயப்படுத்த முடியாதவைகள்?

## சிவப்பிரகாசம்

### கலாசாரப் பிறழ்வை ஊக்குவிக்கலாமா?

அண்மையில் 'தாயகத்தில்' பிரசுரிக்கப்பட்டிருந்த கேள்வி பதில் பகுதியில் காணப்பட்ட பதில் ஒன்று தவறான அர்த்தத்தை வாசகர்களுக்கு கொடுக்கக் கூடியதாக அமைந்ததை சிலர் அவதானித்திருக்கலாம்.

'கனடாவுக்கு வந்தபின் தமிழ்ப்பெண்கள் தண்ணியடிப் பதைப்பற்றி என்ன நினைக்கிறாய்?

'தண்ணியடிப்பதோ, புகைப பிடிப்பதோ பெரிய விஷயமா என்ன? ஊரிலேயே பெண்கள் கள்ளுக் குடிப்பதையும் சுருட்டு அடிப்பதையும் கண்டிருக்கிறேனே! நீர் காணவில்லையா?

பதில் நகைச்சுவையாக இருப்பதில் தவறில்லை. ஆனால் தப்பபிப் பிராயத்தை உருவாக்கக் கூடியமுறையில் உள்ளதுதான் வருத்தத்துக்குரியது. ஊரிலே அப்படியான சங்கதிகள் நடப்பதால் அதை இங்கே செய்வதும் தவறல்ல என்ற கருத்தா? அல்லது ஊரிலே நடப்பவை எல்லாம் கலாச்சாரத்துக்கு உடன்பாடானது என்ற அர்த்தமா? சாதிவெறி சீதனக் கொடுமை, துப்பாக்கிக் கலாச்சாரம், களவொழுக்கம் இன்னோரன்ன விஷயங்கள் எல்லாம் கூட ஊரில் நடக்கிறது. அதனால் அவை பெரிய விஷயம் அல்லாமல் கண்டும் காணாமல் இருக்க வேண்டிய விஷயமாகிவிடுமா என்ன!

பலர் அப்படித்தான் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் ஊர் மாதிரித்தான் எங்கேயும் வாழவேண்டும் என்று நினைத்துக் கொள்கிறார்கள். தீயது களைந்து நல்லது நுகர வேண்டும் என்று நினைப்பதில்லை.

பெண்களின் சம உரிமைக்காகப் போராடும் ஒருவரைக் கேட்டேன். 'கலாச்சாரம் கல்லலில் எழுதிய சட்டமா? அப்படித்தான் என்றாலும் உடைக்க முடியாதா? தமக்கு என்ன உரிமை தேவை என்பதைப் பெண்களே முடிவெடுத்துக் கொள்வார்கள்' என அலட்சியமாகச் சொன்னார் அவர்.

'ஆண்கள் குடித்தால்' அது சரியென்கிறீர்கள். பெண்கள் குடித்தால் என்ன குடிமுழுகிப் போய்விடும். அதை ஏன் கலாச்சாரத்தில் கட்டிப்போடப் பார்க்கிறீர்கள்? பெண்கள் குடித்துவிட்டு கலாட்டாப் பண்ணுகிறார்களா? உங்களைப்போல (ஆண்கள்) அடிபட்டுக் குத்துப்படுகிறார்களா?' என ஆரம்பித்து விட்டார்.

கலாச்சாரம் என்பது கைக்கட்டு அல்ல அது கட்டுப்பாடு என்பதைப் பலர் புரிய மறுக்கிறார்கள். அடக்கி வைப்பதற்கும் கட்டுப்பாடாய் வைப்பதற்கும் வித்தியாசம் இருக்கிறது. ஆழமான கடலுக்குள் நீந்தாதே என பாலகன் ஒருவனிடம் சொன்னால் அது நல்லதுக்காய் சொல்லும் கட்டுப்பாடே ஒழிய அடக்குமுறை அல்ல. பண்பாட்டின் பல பகுதிகள் நல்ல நோக்கத்துடன் சொல்லப்பட்ட நடைமுறைகள்.

பண்பாட்டுடன் சம்பந்தப்பட்ட பிரமுகர் ஒருவருடன் அண்மையில் உரையாடிய போது கனடாவில் கலாச்சார விலகலில் இருந்து தமிழ் சமூகத்தை காப்பாற்ற அதற்காக இயங்கும் கழகங்கள் ஏன் எத்தனிக்கக்கூடாது எனக்கேட்டேன். 'இவ்வாறான பிரச்சனைகள் இலங்கையில் இல்லையா? அந்தப் பிரச்சனைகள் இருக்கக்கூடியதாக அங்கே அதைப்பற்றிக் கணக்கெடுக்காது தமிழ் ஆராய்ச்சி மகாநாடு நடத்தவில்லையா? கேள்வி கேட்டுக்கொண்டா இருந்தீர்கள்? இங்கே மட்டும் கலாச்சாரம் காக்கப்படவேண்டும் என ஏன் கத்துகிறீர்கள்?' என தெரிவித்தார். ஆக... பல பதவிப் பிரமுகர்களும் பண்பாடுபற்றி சிரத்தையற்ற சமயத்துக்கேற்ற கொள்கை உடையவர்களாயே காணப படுகிறார்கள். அதனால்தானோ என்னவோ பதவி இல்லாவிடில் வருவாய் இல்லாவிடில் பண்பாடே வேண்டாம்' என்ற நிலை காணப்படுகிறது. இவ்வகையான நிலையற்ற ஒற்றுமையற்ற தன்மைக்கு தமிழ் கலாச்சாரத்துக்கு சிலர் முடிச்சு போடப் பார்க்கிறார்கள். தமிழ்க் கலாச்சாரம் ஒற்றுமையீனத்துக்கு எந்தவகையிலும் வித்திடவில்லை. சூழல் காரணிகளால் தமிழ்மக்களின் சில பகுதிகளில் உந்துவிக்கப்பட்ட தனிமனித வக்கிரம் செய்யும் வேலைதான் இந்த ஒற்றுமையீனம்.

### எது அத்திவாரம்?

கலாச்சாரம் என்றால் என்ன? வெறும் நடை உடை பாவனை மட்டும்தானா? அல்ல. இவை புறத்தன்மைகள். சடங்கு சம்பிரதாயங்களா? இவை கலாச்சாரத்தின் அகத்தன்மையைப் பாதிக்கக்கூடிய புறத்தன்மைகள். ஆனால் கலாச்சாரத்தின் கண்ணுக்குப் புலப்படாத பகுதி ஒன்று உள்ளது. அதுதான் அகத்தன்மை. கலாச்சாரம் பற்றிக் கதைக்கும்போது பலர் இந்த அகத்தன்மைபற்றி கருத்தில் கொள்வதில்லை. தமிழ்க்கலாச்சாரத்தை வகுத்தது யார்? அது காலத்துக்கு காலம் தமிழ் மக்கள் மத்தியில இயற்கையாய் ஏற்றுக்கொள்ளப்படும் நடைமுறைகளின் தொகுப்பா? இலக்கிய வரலாறுகளின் சாரமாய் எடுத்த கோர்வையா? அல்லது தமிழ் தேசவழமையின் கடைந்தெடுத்த கருத்துக்களா? பழைய நூல்களையும் வரலாறுகளையும் காவிய நிகழ்வுகளையும் முன்னுதாரணம் காட்டுவர் சிலர். கண்ணகியின் கற்பு -பாரியின் கொடை- இரும்பொறையின் நட்பு-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிபிச்சக்கரவர்த்தியின் நீதி- அம்பிகாவதியின் காதல்- புறநானூற்றுவீரம்- குறள் நாலடியார் சொல்லும் நியாயங்கள்- இவை போன்ற எத்தனையோ விஷயங்கள் கலாச்சாரத்தின் அகத்தன்மையின் சில ஊற்றுக்கள். பல போதனைகளின் வெளிப்பாடாக தமிழினத்தின் மத்தியில் தோன்றியிருந்த பல நல்லியல்புகள். கலாச்சாரத்தின் வரிகளாயின. அந்தக் கலாச்சாரத்தின் ஒவ்வொரு வரிகளும் காலத்துக்கு காலம் செப்பனிடப்பட்டன. அந்த வரிகளைச் செப்பனிட உதவிய அதே காலம் இன்று அதை உடைப்பதற்கு உளியையும் எடுத்துக் கொடுத்திருக்கிறது.

## தமிழ் கலாச்சாரம் எடுப்பார் கைப்பிள்ளையா?

தமிழ்க் கலாச்சாரம் என்பதும் இந்துக்கலாச்சாரம் என்பதும் ஒன்றென பலர் கருதுகின்றனர். ஆனால் அவ்வாறான எடுகோள் தவறானது. தமிழ் இந்துக்கள் அல்லாதோரும் அங்கம் வகிக்கின்றனர். இந்துக் கலாச்சாரத்தில் தமிழர் அல்லாதோரும் சேர்ந்துள்ளனர். இவ்வாறான நிலையில் வரையறுக்கப்பட்ட கலாச்சாரம் ஒன்றை தமிழர்கள் பொதுப்படையாகக் கொண்டிருப்பது மிகக்கடினமானது. கலாச்சாரத்தை கைக்கொள்ளும்போது சிலர் தமிழ் என்பதற்கு முன்னுரிமை கொடுப்பர். சிலர் தமது மதத்துக்கு முன்னுரிமை கொடுப்பர். இந்துக்களைப் பொறுத்தவரையில் பண்டைய தமிழ் கலாச்சாரமும் இந்துக்கலாசாரமும் அநேகமாக உடன்படுவதால் இரண்டுக்கும் ஏற்றவாறு வாழுவதில் கஸ்டமில்லை. ஆனால் மற்ற மதத்தினரான தமிழர்களுக்கு பல பிரச்சனைகள் ஏற்படுகிறது. முஸ்லீம் கிறிஸ்தவ மதங்கள் அவை தோன்றிய இடங்களுக்குரிய சில கலாச்சாரங்களை தன்னகத்தே கொண்டுள்ளன. அவை கீழைத்தேசத்தில் தோன்றிய மதக்கலாச்சாரத்தில் இருந்து மிக வேறுபடும் பல சந்தர்பங்கள் உள்ளது. ஆனால் தமிழ் கலாச்சாரம் மற்றைய மதக்கலாச்சாரங்களையும் உரியவாறு ஏற்று அவற்றுக்கும் இடம் அளிக்கத்தவறவில்லை. தமிழ் மக்களிடம் அந்த மனப்பான்மை இருந்தது. இந்த மனப்பான்மை மற்ற மத இனத்தவர்களுக்கு 'பந்தம் பிடிக்கவென்று சிலர் கருவது சரியல்ல. வந்தவரை வாழவைக்கும் தன்மை தமிழனுக்கு இருந்தது. அவனது 'இழிச்ச வாய்' தன்மை எனக் கருதுவதும் ஆதாரமற்றது.

முஸ்லீம்களில் பெரும்பான்மை யோர் தமது மதக் கலாச்சாரத்துக்கு மொழிக்கலாச்சாரத்தை விட முன்னுரிமை கொடுப்பர். அதே நேரம் கிறிஸ்தவர்கள் மொழிக்கும் மதத்துக்கும் கொடுக்கும் உரிமையின் அளவுகள் ஆளுக்கு ஆள் வேறுபடும். சில கிறிஸ்தவர்கள் தாலி கட்டுவதே தவறு என்பர். சிலர் கட்டிக்கொள்வர். சிலர் நெற்றியில் குங்குமம் வைத்தால்கூட தவறில்லை என நினைப்பர். பலர் அதை தவறு எனக் கண்டிப்பர். ஆனால் தனது அடிப்படையில் இருந்து மாறாத தமிழ்க்கலாச்சாரம் சில சில வேறுபாடுகளை அவ்வப்போ ஏற்றுக்கொண்டு அனுசரித்து அதில் கட்டுப்பாடோ கண்டிப்போ கொண்டிருக்கவில்லை. புறத் தன்மைகளில் மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் தமிழ்கலாச்சாரம் அகத்தன்மைகளில் எவரையும் கை வைக்க அனுமதிக்கவில்லை. அப்படி என்று நான் கூறவில்லை. காலகாலமாக நடந்துவரும் நிகழ்வுகள் கூறுகிறது. உதாரணமாக உடையை எடுத்துக் கொள்ளுங்கள். அது பற்றி கலாச்சாரம் அதிகம் அலட்டிக்கொள்ளவில்லை. ஏனெனில் அம்மாற்றங்கள் அடிப்படைக் கலாச்சாரத்தை மாற்ற எத்தனிக்கவில்லை. ஆனால் பெண்கள் அணியும் சில கவர்ச்சி உடைகளில் கலாச்சாரம் சற்று எச்சரிக்கையாக உள்ளது. கலாச்சாரத்தின் அகத்தன்மையில் பிறழ்வுகளுக்கு அது உந்துகையாக அமைந்துவிடலாம் என்ற அனுபவ வேதந்தான் அதற்கு காரணம். இங்கேகூட கலாச்சாரத்தை அடக்குமுறை என்ற கோதாவில் பார்க்காமல் அது நாகரீகமான சமுதாயத்துக்கு ஒரு அரண் என்று சிந்தனையின் ஆழ்பகுதியால் உணருங்கள். 'டாடி டாடி' என்று குழந்தை அழைப்பதனால் கலாச்சாரம் கவிழ்ந்து விடும் எனப் பயப்படுவது சின்னப்பிள்ளைகள் சிற்றெறும்புக்கு பயப்படுவது போன்றது.

அதேநேரம் கலாச்சாரம் எதிர்நோக்கும் பெரிய ஆபத்துகளை நாம் அசட்டை செய்துவிடுகிறோம். சொல் வழக்கங்கள் இடத்துக்கிடம் வித்தியாசப்படும். இதற்கான இசைவாக்கத்தை தமிழ்க்கலாச்சாரம் அனுமதித்துள்ளது. முஸ்லீம்கள் 'வாப்பா உம்மா' என்பதும் கிறிஸ்தவர்கள் 'பப்பா மம்மா' என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட தமிழ் கலாச்சாரத்தில் கனடாவில் 'டடி மம்மி' என்பது ஜீரணிக்கப்பட முடியாததல்ல.

## கலாச்சாரத்தில் ஒட்டிக்கொண்ட பாசிகள்

ஆரம்ப காலத்தில் அயர்ந்திருந்த நேரம் கலாச்சாரத்தின் அக இயல்புகளிலும் வைக்க அனுமதிக்கப்பட்டதால் சில பாசிகள் வந்து வந்து படிந்துகொண்டன. சாதிவெறி சீதனக்கொடுமை போன்றவைதான் அவை. சுயநல புராதனகாலப் புத்திஜீவிகள் சிலர் சாமர்த்தியமாக இந்தக் கீழ்த்தனங்களை செயற்கை முறையில் கலாச்சாரத்தில் புகுத்தி வெற்றி கண்டுவிட்டனர். அந்த நேரம் அதை உணர்ந்து தட்டிக்கேட்கும் அளவுக்கு பாதிக்கப்பட்டவர்கள் இருக்கவில்லை. தம்மை சமூக மட்டத்தில் உயர்த்துவதற்காகவும் மற்றவர்களில் ஆதிக்கம் செலுத்தும் உரிமையைத் தாம் பெற்றுக்கொள்ளவும் பதவிகளைப்பெற்றுப் பணங்களைச் சுரண்டிக்கொள்ளவும் காலத்துக்கு காலம் சிலர் கலாச்சாரத்தை உபயோகித்து வருதல் இன்றும் தொடர்கிறது. இது தமிழ்க்கலாச்சாரத்தின் குறைபாடா? இல்லை. சில மனித இயல்புகளின் வக்கிரத்தால் உண்டாகும் தடுமாற்றங்கள் கலாச்சாரத்தில் ஒட்டிக்கொண்ட இந்த பாசிகளை அகற்ற முடியாதா? உதாரணமாக சாதிவெறியை எடுத்துக் கொள்ளுங்கள். பொருளாதார அறிவு அபிவிருத்தி நோக்குடன் இந்து சமயத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட சாதிமுறையை (DIVISION OF LABOR) சத்திரிய பிராமண வம்சத்தினர் தமக்குச் சாதகமாய் ஆக்கிக்கொள்ள அதை அவதானித்த சில தமிழ் சுயநலமிக் கூட்டம் தொழில்முறையில் பிரிந்த சமூகத்தை சாதிகளாக்கி அவற்றை தரம்பிரித்து தம்மை உயர்ந்தவர்களாகக் காட்டிக் கொண்டது. ஆரம்பகாலத்திலேயே இந்த தீய நோக்கம் உணரப்பட்டு எதிர்த்தெழுந்திருந்தால் கலாச் சாரத்தில் இவை ஒட்டிக்கொள்ளாமல் பார்த்திருக்கலாம்.

**ம.ப.பார்க்க..**

www.tamilarangam.net

# பாவஜென்ம பூமி



## அசை

இரத்தம் மீண்டும் பிரவாகம் எடுக்கின்றது! தமிழர் கால் பட்ட இடமெல்லாம் களிகங்களாக வேண்டும் என்று நியதி போலிருக்கின்றது.

இரத்தக்களரிகளைக் கண்டு சலிப்படைந்த மக்களும் அரசுகளும் சமாதானம் தேடி ஓடுகின்றூர்கள். பொறுத்தவர்களெல்லாம் பூமியாள்கின்றூர்கள். நமக்கு மட்டும் நிணவாடை நீங்கிப் போவதாய் இல்லை.

நிகழவே முடியாதென்றிருந்ததெல்லாம் நிகழ்ந்து கொண்டிருக்கின்ற காலம். மூன்று நூற்றூண்டுகளுக்கு பிறகு தென்னுபிரிக்காவில் சரித்திரம் படைக்கப்படுகின்றது. அரை நூற்றூண்டுக்கு பிறகு பாலஸ்தீனம் சுயநிர்ணயம் பெறுகின்றது. கத்தி கோடரிகளெல்லாம் சத்தியத்தின் காலடியில் சங்கமமாகிக் கொண்டிருக்கின்றது. தமிழர் வாழிடங்களில் மட்டும் சத்தியம் செத்துக் கொண்டிருக்கின்றது.

மண்டேலா எதிரியாயினும் உயிருடன் சிறை வைக்கப்பட்டிருந்தவர். எதிரிகள் அவரை எப்போதோ முடித்திருக்கலாம். செய்யவில்லை.

இஸ்ரேல் நினைத்திருந்தால் அரபாத்தை அரபுக்காரர்களைக் கொண்டே அறுவடை செய்திருக்கலாம். செய்யவில்லை.

கொலைகள் செய்வது சுலபம். உயிர்கள் உலகில் மிச்சம் மிச்சம். ஆடு, மாடு, கோழி என்று எந்த உயிரையும் எப்போதும் கொல்லலாம். கேட்பாரில்லை. மனித உயிர்கள் அப்படியில்லை. யார் உயிரை எடுக்கவும் யாருக்கும் தகுதியில்லை. அதுவே தான் மனித சட்டம்.

மனித கொலைகள் மனதை உலுப்பும். எந்த உயிரும் விரும்பிப் பிரிவதில்லை. பரம்பொருளுடன் இன்புற்றிருப்பதை விடவும் பந்துகளுடன் வாழ்ந்து மடிவதைத்தான் எல்லா உயிர்களுமே விரும்பும். கொலைக்களத்திற்கு கொண்டு போகும் போது விலங்குகள்கூட ஏக்கத்துடன் பார்க்கின்றனவாம். அப்படியிருக்க ஆறறிவு படைத்த மனிதன் மனம் கொலையாளி முன் எப்படி இறைஞ்சும்?

அப்படியிருந்தும் கொல்கிறுர்கள். வெட்டிக் கொல்கிறுர்கள். சுட்டுக்கொல்கின்றுர்கள். எரித்துக் கொல்கின்றுர்கள்.

இந்தக் கொலையாளிகளின் மனம் எப்படியானதாய் இருக்கும்.? கொலைகளைப் புரிந்த பின்னரும் இவர்களால் எப்படி நிம்மதியாக வாழ முடிகின்றது? .

யாராலுமே புரிந்துக் கொள்ள முடியாத உணர்வு!.

வியட்நாம்போரிலும் வளைகுடா போரிலும் ஈடுபட்ட அமெரிக்க படையினரில் பெரும் பகுதியினர் சித்த சுவாதீனமற்று போய்விட்டார்கள். வேதனைகளை இவர்களால் உணர்ந்து கொள்வது போல வேறு எவர்களாலும் உணர்ந்து கொண்டிருக்க முடியாது. அதனுல்தான் இந்த வேதனைகளைக் காணுத, கேட்காத, உணராத அரசியல் தலைவர்களினுல் நிம்மதியாக உறங்கிக் கொள்ள முடிகின்றது. இந்த அரசியல்வாதிகளின் உடுக்குகளுக்கெல்லாம் தாண்டவமாடும் பாமர மக்கள் இக்கொலைகள் எல்லாம் நியாயங்கள் என்று நம்பிக் கொண்டிருக்கின்றுர்கள். தங்கள் வீடுகளில் கொலைகள் நடைபெறுத வரைக்கும் அவற்றிற்கு நியாயம் கற்பிக்கும் இவர்களும் ஒரு வகையில் கொலையாளிகளே. வளைகுடா போரின் முன்னர் ஜோர்ஜ் புஷ்க்கு ஆசீர்வாதம் கொடுத்த கிரேக்க மத பிரசாரகரும் சரி, யாழ்ப்பாணத்தில் இயக்க கொலைகளின் பின்னர் கொக்கோ கோலா கொடுத்து மகிழ்ந்த தமிழர் பெருமக்களும் சரி, கொலையாளிகளின்

**சிவதாசன்**

## நியாயப்படுத்த முடியாதவைகள்..

### வேறு கலாச்சாரத்துக்கு தாவுதல் தவறுனதா?

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் அந்த நாடுகளில் தம்மை இசைவு படுத்திக் கொள்வதற்காக அவர்களின் கலாச்சாரங்களைப் பின்பற்றுதலைத் தவறெனக் கூறமுடியுமா? மக்களின் நாகரீக மேம்பாட்டுக்காகத்தான் கலாச்சாரம். வேறு கலாச்சாரத்துக்கு தாவும் போது முழுமையாகவே தம்மை மாற்றிக் கொள்ளமுடிந்தவர்கள் வெற்றி கரமாகப் புதிய கலாச்சாரத்தில் மனக்குமைவு இன்றி தம்மை இணைத்துக் கொள்ளலாம். ஆனுல் இரண்டிலும் கால்வைத்து நின்றுல்.... தாவ நினைத்தவர் மட்டுமன்றி தமிழ்க்க லாச்சாரமும் பாதிக்கப்படுகிறது. உதாரணமாக..... மேலைத்தேச கலாச்சாரமுறைக்கு மாறிவிட்டு பின்னர் பிள்ளைகளுக்கு BALLET படிப்பிக்க நினையாது பரதநாட்டியம் சொல்லிக்கொடுக்க நினைப்பது பல குழப்பங்களை பலர் மனதிலும் விதைக்கும். இதனுல் மற்றய தமிழ்ப்பிள்ளைகளுக்கு எது தம் கலாச்சாரம் என அறியாது குழப்ப நேரிடும். அதைக் கவனிக்கும் மேலைத்தேசத்தவர் கூட தமிழ்கலாச்சாரம் பற்றிய தவறுன அர்த்தம் கொள்வர்.

வாழ்க்கை முறையில் மட்டுமன்றி இசை கலை இரசனைகளிலும் மேலைத்தேச கலாச்சாரம் வேறுபடுகிறது. இளமையில் இருந்தே மேலைத்தேச கலாச்சாரத்தில் வாழ்பவர்கள் அதனை சரியான முறையில் புரிந்து கொள்வர். ஆனுல் ஏற்கனவே தமிழ் கலாச்சாரத்தில் வளர்ந்தவர்கள் பின் மேலைத்தேச முறைகளுக்கு தம்மை மாற்றும்போது அந்த கலாச்சாரத்தை தவருக அர்த்தங்கொள்ளும் சந்தர்ப்பம் உண்டு. பாலியல் வாழ்க்கை, பெண் சுதந்திரம், ஒன்றுகூடல் போன்ற பல விஷயங்களில் இன்று கனடாத்தமிழ் சமூகம் தண்டவாளத்தில் இருந்து விலகுவதற்கு காரணம் 'புரியாததைப் புரிய முயற்சிக்காத தன்மை'. விலாசம் காட்ட நினைத்தும் வீரம் காட்ட நினைத்தும் புதுநாகரீகத்தில் புகுவதாய் நினைத்தும் வெற்றுத்தொட்டியில் நீரை மொண்டு கொள்கிறேம். இங்கே வெற்றுத்தொட்டி எனக்குறிப்பிட்டது மற்றய கலாச்சாரங்களை அல்ல. அவை பற்றிய எம் விளக்கங்களையே.

எமது கலாச்சாரத்தில் வாழ்ந்து கொண்டே நாம் புலம் பெயர்ந்த நாட்டுக்கலாச்சாரத்துடன் எம்மை இசைவு படுத்த முடியும். அது எப்படி? இன்னெரு சந்தர்ப்பத்தில்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்க்கமேதான்.

தமிழர்களை இலங்கை இராணுவம் கொன்றால் என்ன? இந்திய இராணுவம் கொன்றால் என்ன? இயக்கங்கள் கொன்றால் என்ன? எல்லாமே கொலைகள் தான். கொலையுண்டவர்கள் விரும்பப்பட்டவர்களாயின் தியாகிகள். விரும்பப்படாதவர்களாயின் துரோகிகள். இதை அப்படியே திருப்பித் திருப்பிச் சொல்ல தெரிந்து கொண்ட எம் மக்களும் பெரிய கொலையாளிகள் தான்.

எல்லாளனின் சிதை புதைத்த இடத்தைக் கடக்கும் போது தகுந்த மரியாதை கொடுத்துச் செல்லுமாம் கைமுனுவின் படைகள். எதிரியின் சிதைக்கு கொடுக்கும் மரியாதை கூட சிங்களவருக்குத்தான் இருக்க முடியும் போலிருக்கின்றது. அல்லாவிட்டால் பாரிஸில் கொலையுண்ட சபாலிங்கத்தைப் பற்றி அவ்வளவு அவதூறாக எழுத தமிழரால் தான் முடியும் என்று இரு-கண்ட ஈழநாடு நிருபித்திருக்குமா?. கேவலம் இந்த மனங்களுக்குள் மனிதமேயில்லை!!.

சபாலிங்கம் மட்டுமல்ல எந்தவொரு கொலைகளுமே அவசியமானதல்ல. சபாலிங்கத்தினால் எந்த உயிருக்குத்தான் ஆபத்து வந்து விடப்போகின்றது?. அல்லது சபாலிங்கத்தின் கொலையை நியாயப்படுத்துவதால் யாருக்கு என்ன நன்மை கிடைத்து விடப் போகின்றது.?

ஒரு குழந்தை, ஒரு மனைவி அனாதையாக்கப்படுவதால் ஈழம் விடுதலை பெற்று விடப்போதில்லை.

சபாலிங்கம் ஒரு தனிமரம். அவர் தோப்பாக இருக்கவும் இல்லை. இருந்து விடப் போவதுமில்லை. எவர்களின் இருத்தலையும் அச்சுறுத்தும் நிலையிலும் அவர் இருந்திருக்கவில்லை. அப்படி இருந்தும் அந்த தனிமரம் சாய்க்கப்பட்டுவிட்டது. இரண்டு அப்பாவி உயிர்களின் நிழலைப் பறிப்பதில் அவ்வளவு அவசரம்.

மண்டேலாவை உயிரோடு விட்டு வைக்க ஒரு பிற இனத்தவனுக்கு முடியுமாயிருந்தது. இன்னுமொரு கண்டத்திலிருந்த இலக்கியவாதி சபாலிங்கத்தை விட்டு வைக்க அவரது சகோதரர்களால் முடியவில்லை.

இவையெல்லாம் ஈழவிடுதலையின் பேரால் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றதே! இந்த ஈழம் பாவ விமோசனம் பெற எத்தனை நூற்றாண்டு காலம் பிடிக்கும்.

பாவம் ஈழம்! பாவஜென்ம பூமி!

# அழு வெண்பா

**(சகோதரி மொனிக்கா அவர்களின் தந்தையார் மறைவையொட்டி ஆறுதல் கவிதை)**

செத்தார் திரும்பார் செல்லார் அழுதிடுவார்
இத்தாரில் எங்கணுமே இதுகதைதான் - எப்போதும்
இருக்கின்ற நாள்தான் இன்புடைநாள் உன்போன்ற
மரிக்கொழுந்துக் காறுதலே காண்!

அப்பா இருந்தால் ஆயிரத்தைச் செய்திடுவார்
இப்படியா வாழ்க்கை இருந்திருக்கும் -என்றெண்ணி
தப்பாது நாளும் தவித்திடுகிலுன் கண்ணீர்
உப்பாலே தான்உனக்கு ஊன்!

சேவைபல அவர்க்கு தெருவெல்லாம் நட்பவர்க்கு
காலமுழுதும் களிப்பவர்க்கு-இருந்துமென
ஆழிகடந் தப்பால் அன்னியமாய் புதைந்துவிட
நாழிகையோ கேளரிவை நீ!

அழுதிரண்டு சொட்டுவிடு ஆர்ப்பரித்துக் கத்தியழு
அழுத்திதயம் சோர்ந்துவிட அழுதுவிடு- முன்வாழ்க்கை
இழுத்துப்பார் இதைத்தான் எல்லோரும் செய்தவர்கள்
எழுத்தெனவே வாழ்வை எடு!

ஆலம் விழுதாய் அசையா நெடும்பனையாய்
நாளுமுனைச் சுற்றி நாமிருக்கச்- சோதரிநீ
துன்பமது கொள்ளாய் தொலைவாழ்வை நோக்கிடுவாய்
இன்னலெல்லாம் இனிவிலகும் வாழ்!

# ஆதரவு பெற முயலும் ஜனாதிபதி

ஜனாதிபதி மீண்டும் தன்னை கடுமையானவராயும் மக்கள் நலனில் அக்கறை கொண்டவராகவும் காட்டும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார். தங்களுக்கு வரும் தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் அளிக்க மறுக்கும் அரச அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் இப்போது அறிவித்துள்ளார். பல முக்கிய அதிகாரிகளின் அலுவலகங்களுக்கும் வீடுகளுக்கும் தொலைபேசி இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. இவர்களில் பலருக்கு ஜனாதிபதியே அழைப்புகளை எடுத்தபோது பதிலளிக்கப்படவில்லை என்று அவரது செயலாளர் கே.எச். விஜேதாச தெரிவித்தார்.

அத்துடன் தற்போது அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் பொதுமக்களைச் சந்திக்க நேரம் அதிகம் ஒதுக்க வேண்டும் என்று ஜனாதிபதி நேரடியாக அவர்களுக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அரசியல் நிர்வாக அமைப்பை மாற்றி உத்வேகம் கொடுத்து ஆதரவைத் திரட்டும் விஜேதுங்கவின் ஒரு முயற்சி என்றே இவை கருதப்படுகின்றன.

சிறிய நெற்செய்கைக் கமக்காரர்களுக்கு அரசு இலவசமாக 500 ரூபா பெறுமதியான உரம் வழங்கவுள்ளது என விவசாய அமைச்சு தெரிவித்திருக்கிறது. ஐந்து ஏக்கர்களுக்கு குறைவான நிலத்தைக் கொண்டிருப்போருக்கே இந்த சலுகை உண்டு.

ஏற்கனவே பல விவசாயிகள் கடன் காரணமாகவும் அரசின் பாராமுகம் காரணமாகவும் அரசாங்கத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்கிய வண்ணம் உள்ளனர். கிராமிய மட்டங்களில் ஐ.தே.கட்சியின் செல்வாக்கை உயர்த்தும் முயற்சிகளின் தொடர்ச்சியே இது.

## திருமலையில்..

முயற்சித்துவருகின்றன. ஒரு இயக்கம் அலுவலகம் திறக்க முயன்ற போது இன்னொரு இயக்கம் அதற்கு ஆட்சேபம் தெரிவித்து இந்த முயற்சி தோல்வியில் முடிந்தது. கூட்டணி பற்றி டெலோ இயக்கம் கடும் கண்டனங்களை பகிரங்கமாக தெரிவித்து வருகிறது.

அடுத்த பொதுத்தேர்தலில் இந்தக் கட்சிகள் தங்களுக்குள் போட்டியிடக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற உள்ளூராட்சித் தேர்தல்களில இவ்வியக்கங்கள் தங்களுக்குள் இணைந்தும் போட்டியிட்டும் கலந்து கொண்டன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அம்மணமான தேசம்

சிதம்பரம் ஞா.வடிவேலனர்.

மண்ணே மண்ணே!!
என்று உன்னை விளிப்பதற்கு
உன்னிடத்தில் இப்போ
என்னதான் அப்படியிருக்கிறது

தேசம் முழுவதுமே
எரிந்த சுடுகாடாய்
புதைந்த இடுகாடாய்
ஒட்டிய வயிறும்
குழிவிழுந்த கண்களும்
கன்னம் தீஞ்சு
எண்ணம் தீஞ்சு
நெஞ்சு அவிந்து
நினைவெல்லாம் மரத்து
பயித்திய மக்களாய்

ஏ! தேசமே
புக்காரா, பங்கர்
செல், பாஸ் என்னும்
கலை சொற்களை
தந்தால் மட்டும் போதுமா?

ஏ பரதேசமே!
உன் மக்கள்
அன்னபரதேசம்
போனது உண்மைதான்
ஆனால் உன்னை
பிச்சைக்காரி ஆக்கியது
அன்ன பரதேசம் போனவர்கள்
அல்ல!
ஆம்,
உனக்கு விளங்கும் என்று
நினைக்கிறேன்
பழம் பெருமை கதைப்பதற்கும்
ஒரு தகுதி வேணும்
ஆம்! நீ கதைக்கலாம்
நீ வளங் கொழிக்க வாழ்ந்தாய்
மக்கள் மனம் மகிழ வாழ்ந்தாய்
எல்லாம் உண்மைதான்
சீதேவி உன்னுடன்
சரசமாடி சல்லாபித்தது
எனக்கு மட்டுமல்ல
உன்னைத் தெரிந்தவர்களுக்கும்
தெரியும்
சிலர் சொல்லுவார்கள்
செல்வம், செல்வோம் செல்வோம்
என்னுமாம்
தரித்திரம் தரித்திரோம் தரித்திரோம்
என்னுமாம்
ஐயோ என் தேசமே
அந்தச் சொல்லும்
உனக்குப் பலித்து விட்டதே!

உலர்ந்த கண்களின்
ஊடே கிட்டாத
நெடும் பயணத்தை ரசிக்கும்
முரல் கருவாடு போல்
போன மக்கள்
செல்வோம் செல்வோம்!!
தரித்திரோம்! தரித்திரோம்!!
என்கின்றனரே.
ஐயோ என் இனிய தேசமே!
உன்னை விளிப்பதற்கு
விழித்தெழு
தரித்து இடம் பிடியார்
உள்ளவரை நீ
தரித்திரம் பிடித்த தேசம்தான்
சரித்திரம் சிதைந்த தேசம்தான்.

# வாதாடு!

வாய்மையொன்றே என்றும் வெல்லுமென
வஞ்சனைகள் செய்வோர் வாழாரென
வான்முழங்க உரத்து வாதாடு!

நேர்மையதே என்றும் வெல்லுமென்றும்
நேர்வழி செல்வதே நன்மையொன்றும்
நெஞ்சை நிமிர்த்தி வாதாடு!

வாழ்க்கை வாழ்வதற்கேயென்றும்
ரசிப்பதற்கும் ருசிப்பதற்குமேயென்று
நேச உள்ளம் கொண்டு வாதாடு!

குறுக்குவழி செல்லும் சில
சிறு புத்தி சிறுக்கரையும்
தனக்குத் தனக்கேயென்றெல்லாம்
மற்றோரை தடுக்கி விழுத்திப்போகும்
தரம்கெட்ட நரிகளை நீ
தாட்சண்யமின்றி நின்றெதிர்த்து வாதாடு!

தடித்துப் போயிருப்பதால் அவர் நெஞ்சம்
மரத்துப் போயிருக்கும் அதனால்
தாழ்த்திப் பேசுதலும் தரமென்றுகூறி
இகழ்ச்சிப் பார்வைகளும் கொண்டிருப்பர்!

தடித்துப் போயிருக்குமந்த
பாழ்பட்ட மிருகங்களை நீ
துடிக்கத் துடிக்க கேள்வி கேள்!
மாற்றோர் துன்பங்களிற்காய் வாதாடி நில்!

கூட்டம் கூட்டமாய் கூடி
குழுக்கள் குழுக்களாய் ஆகி
சில்மிசங்கள் செய்து கொண்டும்
சண்டித்தனம் என்று கொண்டும்
சமுதாயத்தை சீரழிக்கும் சில
சீழ்புத்தி கிறுக்கரை நீ
சிந்திக்க வைப்பதற்காயும் கூட
சிலிர்த்து நின்று வாதாடு!

மற்றவர் உதிரமது உறுஞ்சிக் குடித்து
உரமேறி உயிர்வாழும் சில
பேய்மனப் பெருச்சாளிகள் தம்
வண்டவாள குப்பைகளை வெளியில்
கொண்டுவர வாதாடு!

கருப்பையிலேயே அப்பனைத் தொலைத்துவிட்ட
அந்தக் குழந்தையின் வாழ்விற்காகவும்
போக்கிரியை நம்பி உடன்பட்டதால்
பொலிவிழந்த அந்த அம்மாவிற்காயும்
இரக்க மனம் கொண்டு வாதாடி நில்!

சுத்திச் சுத்தியே அடுப்படியாய்
அவள் குட்டிக் குட்டியே முகம் குனிவாய்
முற்றம் தெரியா கிணற்றுத் தவளையாய்
முடங்கிப்போயிருக்கும் அவள்
முகம் நிமிர்வதற்காய் வாதாடு!

சமயத்தை சாக்காய் வைத்து
சாமிகளை போக்கில் விட்டு
சாணக்கிய மூளையென சில
பொறுக்கி ஈனர் அவர் செய்யும்
வணிகக் கூத்துக்களை நிறுத்த
வாதாடி நின்று வெல்லு!

எமக்கோர் இனம் உண்டென்றும்
அதற்கோர் மொழியும் கூட நல்ல
கலையும் கலாச்சாரமும் இனிய
பண்பாடும் உண்டென்று வாதாடு!

உனக்கோர் தனித்துவம் வேண்டுமென்று
உன் மனசுடன் வாதாடு!
பாசம் நேசமுடன் கொண்டு
பேதமில்லா வாழ்வு வேண்டி
உன் இதயத்துடன் வாதாடு!

அனந்தன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




கையிலே சின்ன துப்பாக்கிகள்
கல்லறையிலே கருப்பு மலர்கள்
கண்களுக்குள் விரக்தியான கருமணிகள்
உலர்ந்த தேசத்துக்குள் உயிருக்காய்
வேகமாய் நான் ஓடிக்கொண்டிருக்கின்றேனே.....

கால்களை குத்திய மனித எலும்புகூடுகள்
காதை துளைத்திடும் அழுகைகள்
பசியில் பல உயிர்கள் பாதையருகில்
வேலி தாண்டி மயான திசையில் நானே....

பசுமை தொலைத்தது என் தேசமா?
பகைமை கொண்டது மனிதர்கள் அல்லவா
அப்படியானால் எதற்காக என் தேசத்தை
பொசுக்க வேண்டும்......

மண்ணை மறைத்த பூவரசம் மலர்கள்
எங்கே? மணல் வீடு கட்டி நான் விளையாடிய
கரையோரத்தில் மனித எலும்புகூடுகள்
உயிருடன் உலாவுவது ஏன்?

துப்பாக்கிகள் குறிப்பார்த்துக் கொள்வதால்
மனிதர்கள் மௌனித்துப் போனார்களோ...
அன்று பூட்சுகள் நடை பயின்றபோது
அது எதிரிக்காக என்றல்லவா சொன்னார்கள்..
தேசத்தை சிதைப்பதற்கும்
தேகப்பயிற்சி வேண்டுமோ? ..

நான் நீந்தி திரிந்த நதிக்கரையோரம் ஓடுகின்றேன்
அங்கே ஊற்றெல்லாம் வற்றி
வெறும் கற்பாறைகளும்
மணல் மேடுகளும்.......
ஏன் பூமிக்கு என்ன கோபம்
எல்லாமே வரண்டு கிடக்கின்றது....

வானுக்கும் பூமிக்கும்
எதற்காக போர் வந்தது......

அங்கே ஒரு பள்ளத்தாக்கு
அப்பாவின் சாரத்தை திருடி சென்று
அந்த பள்ளத்தாக்கில் நானும் தங்கையும்
மீன்பிடிப்போம்
அந்த பள்ளத்தாக்கு கூட
மேட்டு நிலமாய் மாறியிருந்தது அந்த
மீன்கள் எல்லாம் செத்துப்போய்விட்டனவோ.

ஒரு மீன் கூட பிடிபடாதே
அத்தனை கெட்டிக்கார மீன்கள்
எப்படி செத்துப்போயிருக்க முடியும்
நீரின்றி துடித்து செத்துப்போயிருக்குமோ!

ஆனால் என்னை நேசித்த அந்த ஜீவன்
மட்டும் இன்னும் பசுமையான நினைவுகள்
சுமந்து எனக்காக இத்தனை வருடங்கள்
காத்திருக்கின்றதே......

என்னை மார்புடன் தழுவி
மௌனமாய் அணைத்தவாறே
பேச சக்தியற்று
என் கூந்தலை வருடியவாறே நின்றபோது
அம்மா என்று என்னால்
ஏன் அழைக்க முடியாமல் போனது
என் குரல் உலர்ந்து போய்விட்டதோ
என் தேசம் போன்று?

கண்ணீரை கறையென்பார்களே
இருக்காது
அப்படியானால் என் அம்மாவின்
வெள்ளை சேலையில் படிந்த என் கண்ணீர்
எந்த நிறத்தையும் காட்டவில்லையே

முன்பெல்லாம் அம்மாவிற்கு நெற்றியிலே
முத்தம் கொடுத்தால் பிடிக்காது
எங்கே குங்குமம் அழிந்து விடுமோ என
என்னை தள்ளி விடுவாள்....
இப்போது மட்டும்
ஏன் மௌனமாயிருக்கின்றாள்...

இந்த பிரபஞ்சத்தில் உள்ள இயற்கையே
வற்றிப்போனாலும் அந்த அன்னையின்
கண்ணீரும் அன்பும் வற்றவே வற்றாது...

வானம் இப்போது எதற்காக அழுகின்றது.
அதுவும் பூமிக்கு அன்னையோ என்னவோ...

காகங்கள், குருவிகள், பச்சை கிளிகள்
எத்தனை நிறமான பறவைகள்
என் வீட்டு
திசையில் பறந்துக்கொண்டிருந்தன...
எங்கிருந்தோ ஒரு வெள்ளைப்புறாவும்
அந்த கூட்டத்துக்குள்....

மோனிக்கா

13.5.1994



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தேடப்பட்ட கும்பலின் தலைவர் கைது

பிந்திய செய்திகளின் படி பொலிசாரால் தேடப்புட்டு வந்த சொத்தி உபாலி எனப்படும் பாதாள உலகக் கும்பல் தலைவன் கட்டுகஸ்தோட்டையில் வைத்து கைது செய்யப்பட்டிருக்கிறார். பிரேமதாசா, சிறிசேன கூரே ஆகியோரின் கையாளாக இருந்து பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைளில் இவர் ஈடுபட்டிருந்தார். இவரை பயன்படுத்தி பல நடவடிக்கைகளில் பெரும் வர்த்தகப் புள்ளிகளும் ஈடுபட்டிருந்தனர். தற்போது பொலிசாருக்கு தப்பியோடிய வேளையிலும் இவருக்காக பல வர்த்தகர்கள் கார்கள் கொடுத்து உதவியதாகவும் கூறப்பட்டது. இவரது ஜீப்பும் வேகவாகனம் ஒன்றும் காணாமல் போயுள்ளன. ஆயினும் இந்த வாகனங்கள் பற்றி பொலிசாருக்கு ஏற்கனவே தெரிந்ததால் இவர் இவற்றை பயன்படுத்தாமல் வேறு வாகனங்களைப் பயன்படுத்தியதாக கூறப்பட்டது.

பிரேமதாசா காலத்தில் ஜே.வி.பி வன்முறைகளின் போது இவர் ஜே.வி.பிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தான். பல்வேறு கொலைகளிலும் இவருக்கு சம்பந்தம் உண்டு. முதலில் வனத்தமுல்லயில் உள்ள இவரது வீடு முற்றுகையிடப்பட்டிருந்தது. அங்கு பல பொருட்கள் பொலிசாரால் கைப்பற்றப்பட்டன.

தற்போது கட்டுகஸ தோட்டையில் இவர் கைது செய்யப்பட்டதுடன் இந்த தேடுதல் முற்றுகை முடிவுக்கு வந்தது.

தற்போது சிறிசேன கூரே கட்சியில் செல்வாக்கிழந்த நிலையில் இந்த நடவடிக்கைகள் எடுக்கப்படுவது அவரது செல்வாக்கு குறைந்து வருவதையே காட்டுவதாக கூறப்படுகிறது.

# காமினியை உள்ளே இழுக்க முயற்சி

ஐ.தே.கவின் புதிய செயலாளர் டாக்டர் விஜேசேகர தற்போது காமினி திசநாயக்கவை பாராளுமன்றத்திற்குள் கொண்டு வர முயற்சிக்கிறார். இதற்காக தேசிய பட்டியலில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் யாராவது பதவி விலகினால் மட்டுமே அவர் பாராளுமன்றத்தில் நுழைவதற்கு அரசியலமைப்பு அனுமதிக்கிறது. தேர்தலில் தெரிவு செய்யப்பட்டவர்களை கட்சி விலக்கலாம். ஆனால் தேசிய பட்டியலில் உள்ளோரை விலக்க முடியாது.

தற்போதுள்ள தேசியப் பட்டியல் உறுப்பினர்கள் சிலரை சரிக்கட்டி ராஜினாமா செய்ய வைத்து காமினியை சபைக்குள் கொண்டு வர முயன்ற போதும் அவர்களில் சிலர் பிரேமதாசாவின் ஆதரவாளர்களாக இருப்பதால் தாம் பிரேமதாசாவின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கே பதவியை விட்டுக் கொடுப்பதாக தெரிவித்திருக்கின்றனர்.

# தமிழீழ நாணயம் இப்போதைக்கில்லை

தமிழீழ நாணயம் வெளியிடும் யோசனையை புலிகள் கைவிட்டுள்ளதாக தெரியவருகிறது. தமிழீழ நாணயத்தை அறிமுகம் செய்து வங்கிகளை ஆரம்பிக்க புலிகள் எடுத்த முயற்சிகளை தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக சரிநிகர் பத்திரிகை தெரிவித்திருக்கிறது.

புதிய நாணயத்தை வெளியிடுவது பல நடைமுறை சிக்கல்களை ஏற்படுத்தும் என்றும் இதனால் பொதுமக்களின் அதிருப்தியை சம்பாதிக்க நேரிடும் என்றும் வடக்கில் மட்டும் பணத்தை புழக்கத்தில் விடுவது அவர்களின் நிலைப்பாட்டுக்கு கூடாது என்றும் ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டதை அடுத்தே இந்த பண வினியோகம் நிறுத்தப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# திருமலையில் கூட்டணி கிளை அமைப்பு

திருமலையில் கடந்த மாதம் கூட்டணியினர் தங்கள் கட்சி புனருத்தாரண வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். அங்கு நடத்தப்பட்ட கருத்தரங்களில் பல இளைஞர்கள் வந்திருந்து கேள்வி மேல் கேள்விகள் கேட்டனர். இதற்காக என்றே வந்து கேள்விகள் அடங்கிய நோட்டீஸ் ஒன்றை அவர்கள் வினியோகித்தனர்.

இதுவரை நீங்கள் சாதித்தது என்ன என்று கேட்ட போது அதற்கு பதிலளித்த தலைவர் சிவசிதம்பரம் 'வடமராட்சி தாக்குதலில் இந்திய தலையீட்டை உருவாக்கி இலங்கை இராணுவத்தை பின்வாங்கச் செய்தது, உணவுப் பொருட்கள் கிடைக்க வழி செய்தது, இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்றன' தமது சாதனைகள் என்று கூறினர்.


**கிறிஸ்தவ திருமணங்களில் மணப்பெண்ணிற்கான தலைச் சோடனை, அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் வாடகைக்கு பெற்றுக் கொள்ள**

**ராஜி**

**796 2672**

பூங்கொத்துக்கள் நீங்கள் விரும்பிய வடிவங்களில் பெற்றுக் கொள்ளலாம்

**Net, Colorful Flower Bouquet, Flower Basket**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# Scarborough Dental Office

- Cosmetic Dentistry
- Crown & Bridges
- Gum Treatment
- Root canals
- Bleaching
- Dentures
- Surgery

★ அவசர சிகிச்சைகளுக்கு
முன்னறிவிப்பு இன்றி
சிகிச்சை வழங்கப்படும்
★ அழகுபடுத்தும் பற்சிகிச்சைகள்
★ காப்புறுதித் திட்டங்கள்
ஏற்றுக் கொள்ளப்படும்.
★ சமூக உதவிப் பணம்
பெறுபவர்களுக்கும் சிகிச்சை
வழங்கப்படும்




## Dr.Athi K.Somasundaram
## டாக்டர் ஆதிகணபதி சோமசுந்தரம்

பேராதனை பல்கலைக்கழகம், சென்னை மருத்துவக் கல்லூரி,
கனடா தேசிய பல்வைத்திய சபை

**Tel:(416) 750 9969**
**Fax:(416) 750-9967**

**2155 Lawrence Ave East, Suite 10**
**(At Birchmount), Scarborough**
**•Wheel Chair Access**
**•Free Parking**

திங்கள் முதல் சனி வரை
காலை 9 மணி - மாலை 9 மணி வரை
ஞாயிறு தினங்களில்
நண்பகல் 12 - மாலை 5 மணி வரை
(ஞாயிறு தினங்களில் சேவையைப்
பெற்றுக் கொள்ள முன்னறிவித்தல்
செய்து கொள்ளுங்கள்)
★ 24 மணி நேர அவசர சிகிச்சை சேவை

**Monday-Saturday**
**9 AM-9 PM**
**Sundays**
**12 NOON-5 PM**
**Sunday by appointment only**
**24 Hrs Emergency Service**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# திறனுய்வு

## சுபைர் இளங்கீரன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இலக்கியம் வாழ்க்கையைப் பிரதிபலிப்பது. வாழ்க்கை இலக்கியத்தில் பிண்ட உருவெடுத்து இனிமையும் எழிலும் ஏறி நிற்கப் புதுமெருகுடன் காட்சியளிக்கிறது. அது, வாழ்க்கை போதிக்கிற உண்மைகளையும், தத்துவங்களையும் புறக்கணித்துவிட்டுப் பிறப்பதில்லை, அதனுல்தான் இலக்கியம் வாழ்க்கையின் சாதனங்களில் ஒன்ருக இருக்கிறது. வாழ்க்கையைச் சிருஷ்டிப்பதில் சமுதாயத்திற்குப் பிரதான பங்கு இருப்பதால் இலக்கியம் சமுதாயத்தின் சாதனமாகவும் இருக்கிறது. அது வாழ்க்கையிலும் சமுதாயத்திலும் முக்கிய பாத்திரம், கேந்திர ஸ்தானம் வகிக்கிறது. ஆதலால் இலக்கியம் கலைக்காக மட்டுமன்றி வாழ்க்கைக்காகவும் இருக்கவேண்டும். இலக்கியத்தின் நோக்கம் ரசனையை அளிப்பதோடு பயனையும் அளிப்பதாகும். அதற்கு, எப்படிச் சொல்ல வேண்டும் என்பதும் முக்கியம். எனவே இலக்கியம் உருவத்தில் காட்டும் அக்கறையளவு உள்ளடக்கத்திலும் காட்ட வேண்டும்.

இலக்கியத்திற்கு எதையும் சொல்ல, சித்தரிக்க உரிமையுண்டு என்ற போதிலும் அந்த உரிமையின் காரணமாக வாழ்க்கைக்குப் புறம்பான வெறும் வரட்டுக் கற்பனையை, கஞ்சாக் கனவுகளைக் சித்தரிக்கக்கூடாது. அவ்வாறு சித்தரித்தால் அதன் உரிமையில் பயனில்லாது போய்விடும். சமுதாய வாழ்க்கையிலும் சரி, தனி மனித வாழ்க்கையிலும் சரி உள்ளும் புறமும் தழுவி நிற்க இலக்கியத்திற்குப் பரிபூர்ண உரிமையுண்டு, தழுவி நிற்கவும் வேண்டும். அது சமுதாயத்தினது மட்டுமல்ல, தனி மனித அந்தரங்களைக் கூடத் திரை விலக்கிக் காட்ட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனுல் இந்த உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது. உரிமை இருக்கிறதே என்பதற்காகப் படுக்கை அறைச் சம்பவங்களை அம்மணமாக்கிக் காட்டக் கூடாது. அதாவது விரசத்தையும் ஆபாசத்தையும் தூண்டுவதற்காகவே. ... அவை நோக்கமாகக் கொண்டே... இலக்கியத்தின் விஷய அடக்கம் இருக்கக் கூடாது.

அவ்வாறு சித்தரித்தால் இலக்கியம் வாழ்க்கையின் சாதனமாக, சமுதாயத்தின் இயங்கும் நிலை சிதறடிக்கப்பட்டுவிடும். பதிலாக அதைச் சதை உணர்ச்சிக்கு... காமக்குரோதங்களுக்குத் தீனி போட்டு உள்ளத்தை வெறும் ஆபாசக் கிடங்காக்கிக் கொள்ள ஏதுவாகிவிடும். இது கொக்கோகத்தின் உரிமையே தவிர, இலக்கியத்தின் உரிமையல்ல, கொக்கோகத்தின் உரிமையை இலக்கியத்தில் அப்பட்டமாகவும் பலாத்காரமாகவும் திணித்து அதையும் கொக்கோகமாக்கிவிடக்கூடாது. இலக்கியத்தின் உரிமை மகத்தான இலட்சியங்களை முழக்குவதற்கு, உணர்ச்சிகளை மேலே உயர்த்திச் செல்வதற்குப் பயன்படல் வேண்டும். இந்நோக்கத்தை அடிநிலையாகக் கொண்டதாய் இலக்கியத்தின் நோக்கம் இருக்க வேண்டும். அவ்வாறில்லாமல் உள்ளடக்கத்தில் சோடையான ஓர் இலக்கியம், யதார்த்த வாழ்வைத் திரித்து, மறைத்து, விரசப்படுத்திச் சித்தரிக்கிற இலக்கியம் உருவ அமைப்பில் என்னதான் சிறந்திருந்தபோதிலும் அது காத்திரமான, என்றும் நிலைத்து நிற்கிற சிரஞ்சீவி இலக்கியமாக இருக்க முடியாது. அது உண்மையான இலக்கியமல்ல. போலி. அது அலங்காரம் செய்யப்பட்ட பிணத்திற்கு ஒப்பானதாகும் என்று யதார்த்தவாத சித்தாந்தம் வாதிக்கிறது.

இவ்விரு இலக்கிய சித்தாந்தங்களைத்தான் இன்றைய சிருஷ்டி இலக்கியங்களும், அவை பற்றிய திறனுய்வுகளும் பிரதிபலிக்கின்றன. உருவவாத சித்தாந்தத்தை ஆதரிக்கிற திறனுய்வு ஓர் இலக்கியத்தை திறனுய்வு

இலக்கியத்திற்கு எதையும் சொல்ல, சித்தரிக்க உரிமையுண்டு என்ற போதிலும் அந்த உரிமையின் காரணமாக வாழ்க்கைக்குப் புறம்பான வெறும் வரட்டுக் கற்பனையை, கஞ்சாக் கனவுகளைக் சித்தரிக்கக்கூடாது. அவ்வாறு சித்தரித்தால் அதன் உரிமையில் பயனில்லாது போய்விடும். சமுதாய வாழ்க்கையிலும் சரி, தனி மனித வாழ்க்கையிலும் சரி உள்ளும் புறமும் தழுவி நிற்க இலக்கியத்திற்குப் பரிபூர்ண உரிமையுண்டு, தழுவி நிற்கவும் வேண்டும். அது சமுதாயத்தினது மட்டுமல்ல, தனி மனித அந்தரங்களைக் கூடத் திரை விலக்கிக் காட்ட வேண்டும். இதில் மாற்றுக் கருத்துக்கே இடமில்லை. ஆனுல் இந்த உரிமை துஷ்பிரயோகம் செய்யப்படக்கூடாது. உரிமை இருக்கிறதே என்பதற்காகப் படுக்கை அறைச் சம்பவங்களை அம்மணமாக்கிக் காட்டக் கூடாது. அதாவது விரசத்தையும் ஆபாசத்தையும் தூண்டுவதற்காகவே.... அவை நோக்கமாகக் கொண்டே.... இலக்கியத்தின் விஷய அடக்கம் இருக்கக் கூடாது. அவ்வாறு சித்தரித்தால் இலக்கியம் வாழ்க்கையின் சாதனமாக, சமுதாயத்தின் இயங்கும் நிலை சிதறடிக்கப்பட்டுவிடும். பதிலாக அதைச் சதை உணர்ச்சிக்கு... காமக்குரோதங்களுக்குத் தீனி போட்டு உள்ளத்தை வெறும் ஆபாசக் கிடங்காக்கிக் கொள்ள ஏதுவாகிவிடும். இது கொக்கோகத்தின் உரிமையே தவிர, இலக்கியத்தின் உரிமையல்ல, கொக்கோகத்தின் உரிமையை இலக்கியத்தில் அப்பட்டமாகவும் பலாத்காரமாகவும் திணித்து அதையும் கொக்கோகமாக்கிவிடக்கூடாது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

செய்கிறபோது அதன் அழகியல், மொழிநயம், ரசபாவங்கள், விஷயத்தைச் சொல்லும் விதம், அழுத்தம், கனம், திருப்பங்கள் முதலிய உத்திகளையும், இலக்கிய வடிவத்தின் இதர சேர்மானங்களையுந்தான் பரிசீலனை செய்கிறது, எடைபோட்டு தனது தீர்ப்பைக் கூறுகிறது.

யதார்த்தவாதத்தை ஆதரிக்கிற திறனாய்வு ஓர் இலக்கியத்தின் உருவ அமைப்பை பரிசீலனை செய்வதோடு உள்ளடக்கத்தையும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்கிறது. கவிதையாகவோ, கட்டுரையாகவோ இருந்தால் அவற்றின் விஷயத்தையும் அலசுகிறது. அவ்விஷயம் வாழ்க்கையை எதிரொலிக்கிறதா? பயன் தரத்தக்கதா? யதார்த்தத்துக்கு முரணாக இருக்கிறதா? என்றெல்லாம் ஆராய்கிறது. நாடகமாகவோ, சிறுகதையாகவோ, நாவலாகவோ இருந்தால் அதில் வரும் கதையம்சம், வரும் பாத்திரங்கள், சம்பவங்கள், உரையாடல், கருத்துக்கள் முதலியன யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றனவா? வாழ்க்கையின் இயல்புகளை எடுத்துக் காட்டுகின்றனவா? தோன்றி நிற்கும் பிரச்சனைகளை நேருக்கு நேர் கொண்டு வந்து நிறுத்துகின்றனவா? தனி மனித வாழ்விலும் சமுதாயத்திலும் ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும் பழைய சக்திகள் தேய்ந்து வருவதையும், ஊடே ஏற்பட்டு வரும் சமூக மாற்றங்களையும், கருத்து மாற்றங்களையும், மாறிவரும் வாழ்க்கை முறைகளையும் படம் பிடித்துக் காட்டுகின்றனவா? மறைந்து கிடக்கும் கரப்பான உண்மைகளையும் அம்பலப் படுத்துகின்றனவா? பொருட் செல்வத்தை மட்டுமன்றி அருட்செல்வத்தையும் மனிதனின் மகத்துவத்தையும், அதனுள் புதைந்து கிடக்கின்ற மகோன்னதமான ஆக்க சக்திகளையும், அவனுக்கே உரித்தான உணர்ச்சிகளையும், வாழ்க்கையின் மீது அவனுக்குள்ள பிடிப்பையும் நேசத்தையும் துலாம்பரமாக எடுத்துக் காட்டுகின்றனவா? அந்தரங்க உணர்ச்சிகளை விரசமில்லாமல் சித்தரிக்கின்றனவா என்றெல்லாம் பரிசீலனை செய்து தர நிர்ணயஞ் செய்கிறது.

இவ்விரு திறனாய்வுகளிலும் எது சரி, எது பிழை, எது தரமானது, எது மட்டமானது என்பது ஒருபுறமிருக்கட்டும். ஆனால் இங்கே கவனிக்க வேண்டியது என்னவென்றால், இன்றைய சிருஷ்டி இலக்கியத்தின் மொத்தப் பரப்பில் உருவவாத சித்தாந்தங்களைக் கொண்ட இலக்கியங்களும் திறனாய்வுகளும்தான் மிகுதி என்பதுதான். இன்னும் கொஞ்சம் அலசிப் பார்த்தால் உருவவாத சித்தாந்தங்களின் கோட்பாடுகளைக் கூட இன்றைய சிருஷ்டி இலக்கியங்களும் திறனாய்வுகளும் பூரணமாக பிரதிபலிக்கவில்லை என்பதையும் காணக் கூடியதாயிருக்கிறது.

இனி தமிழ் இலக்கியத்தின் மொத்தப் பரப்பிலிருந்து ஈழத்தின திறனாய்வைப் பிரித்து ஆராய்வோம்.

பொதுவாகத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு ஈழத்தின் பங்கு தொன்றுதொட்டு இருந்து வந்திருக்கிறது, வருகிறது. (சங்க காலத்தில் புலவராக விளங்கிய ஈழத்துப் பூதந்தேவனார் இதற்கு உதாரணம்) இதை ஒட்டித் திறனாய்வுகளும் நடந்திருக்கக் கூடும். ஆனால் நாவலர் காலம் வரை (1822-1879) இத்துறையில் வரிசைப்படுத்தக் கூடிய தகவல்கள் திட்டவட்டமாகக் கிடைக்கவில்லை. ஆனால் அக்காலம் வரை இருந்த உரையாசிரியர்கள் சிலரைக் குறிப்பிட முடியும். "உரையாசிரியர்களும் திறனாய்வாளர்கள்தான்" என மேலே கண்டோம். அதன்படி இவர்களும் திறனாய்வாளர்கள் வரிசையில் வைத்து எண்ணத்தக்கவர்கள் தாம்.

கிடைக்கக் கூடிய தகவல்களை வைத்துப் பார்க்கிற போது முதலாவதாக வருபவர் திருநெல்வேலியைச் சேர்ந்த ஞானப்பிரகாசசுவாமிகள் ஆவர். இவர் வடமொழியில் பல நூல்களை இயற்றிய வித்தகர். தமிழிலும் புலமை மிக்கவர்.

சைவ சித்தாந்த, சாஸ்திரங்களுள், தலைசிறந்து விளங்குவதாகக் கருதப்படும் 'சிவஞான சித்தியாருக்'க்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவற்றில் ஞானப்பிரகாசர் எழுதிய உரையும் ஒன்று. இவ்வுரையைப் பற்றி இதன் பதிப்பாசிரியரான இணுவில் சித்தாந்தப் பேராசிரியரான நடராசையர் பின்னவருமாறு குறிப்பிடுகிறார்.

"சொல்லினுலிற் றுரிசறுஞ் சோத்திரத்
தொல்லு மேற்சிவ ஞான முதித்திடும்
செல்லும் மெய்வரு ணந்திசெய்
சித்திக்கு
நல்ல ஞானப்ர காசன் நலிந்துரை"

அடுத்து வருபவர் கூழங்கைத் தம்பிரான். இவர் நன்னூலுக்கு உரை எழுதியிருக்கிறார் பின்னால் நாவலர் அவர்கள் பல மாற்றங்களோடும் புதிய திருத்தங்களோடும் பதிப்பித்து வெளியிட்ட நாவலர் 'நன்னூற்காண்டிகை உரை' என்னும் நூல் இதுதான்.

இவரை அடுத்து வருபவர் பெரியபுராணத்திற்கு அரியதோர் உரை எழுதிய ஆறுமுகத்தம்பிரான்.

நாவலர் காலம் வரை இம்மூவரையும்தான் குறிப்பிடக் கூடியதாயிருக்கிறது. இவர்களுக்குப் பிறகு நாவலரிலிருந்துதான் ஈழத்துத் திறனாய்வாளரை வரிசைப்படுத்த வேண்டியிருக்கிறது.

பொதுவாக தமிழ் இலக்கிய வரலாற்றிலும்சரி, சிறப்பாக ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலும் சரி நாவலரின் காலம் குறிப்பிடத்தக்க காலகட்டமாகும். ஆங்கிலேயரின் ஆட்சி ஸ்திரமாகி சமயத்துறையில் கிறிஸ்வதுமும் மொழித்துறையில் ஆங்கிலமும் ஆதிக்கஞ் செலுத்தத் தொடங்கிய காலம் அது. இந்நிலைக்குப் பல காரணங்கள் இருந்தபோதிலும் மொழி இலக்கியத்துறைகளும் காரணங்களாக இருந்தன.


நாவலர் காலம்வரை தமிழில் வசன இலக்கியம் சிருஷ்டிப்பது வழக்கில் இல்லாமலிருந்தது. பழைய இலக்கியங்களுக்கு அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர், இறையனார் உட்பட இன்னும் ஒரு சிலர் எழுதிய உரை நூல்கள்தான் வசன இலக்கியங்களாக இருந்து வந்தன. அக்காலத்தில் கடிதங்கள் கூட பாவினால் தான் எழுதப்பட்டு வந்தன. மிக அரிதாக ஒரு சில நூல்கள் எழுதப்பட்டிருந்தாலும் அவை பெருவாரியான சாதாரண ஜனங்களுக்கு விளங்காத கடினநடையிலிருந்தன. சைவ சமய இலக்கியங்களும் பாடல் வடிவிலேயே இருந்ததால் சாதாரண ஜனங்களால் அவற்றைப் படித்துப் புரிந்துகொள்ள, கற்று ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை. இக்காரணங்களால் தமிழ்மொழியும் இலக்கியமும் சாதாரண மக்கள் மத்தியில் வளர்ச்சி குன்றியும் பலவீன முற்றுமிருந்தன.

**17 ம் பக்கம் பார்க்க..**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# சுண்டெலிகள்



கரப்பான் தொல்லையைத் தாங்க முடியவில்லை. எல்லா வழிகளிலும் முயன்று பார்த்தாகிவிட்டது. 'சைனாக்காரனின் சோக்' தொடக்கம் முயலாத வழிகளில்லை. வெற்றி கரப்பான் பூச்சிக்குத்தான். பேசாமல் தோல்வியைப் பெருந்தன்மையாக ஒப்புக் கொண்டு அப்பார்ட்மெண்ட் விட்டு அப்பார்ட்மென் மாறினால் கிணறு வெட்டப் பூதம் புறப்பட்ட கதை தான். கரப்பான் பூச்சிகளிற்குப் பதில் சுண்டெலிகளின் தொல்லை. கனடாவில் கட்டடங்கள் தான் உயர்ந்தனவேயே தவிர எலிகளல்ல. கொழுத்து கொழுத்து உருண்டு திரண்ட, ஊர் எலிகளைப் பார்த்த எனக்கு இந்தச் சுண்டெலிகள் புதுமையாகத் தெரிந்தன. நாட்டுக்கு நாடு மண்ணிற்கு மண் உயிர்கள் பல்வேறு வடிவங்களில் உருமாறி வாழத்தான் செய்கின்றன. சுண்டெலிகளின் பால் என் கவனம் திரும்பியதற்கு என் தர்ம பத்தினியின் ஓயாத கரைச்சலும் புறுபுறுப்பும் இன்னுமொரு காரணம். குழந்தை வேறு ஆங்காங்கே ஓடித்திரியும் பூச்சிகளையும், சுண்டெலிகளையும் வியப்புத் ததும்ப பார்ப்பதைக் கண்டதும் என்னவளிற்கு நெஞ்சைக் கலக்கத் தொடங்கி விட்டது. "இஞ்சாருங்கோ... உந்த சுண்டெலிகளை அடிச்சுத் துரத்தாட்டி ஒரு நிமிசங்கூட என்னாலை இங்கே யிருக்கேலாது. தவளுற குழந்தை யிருக்கிற வீட்டிலை..." கனடா வந்து ஆறு மாதங்களிலேயே பலரிற்குத் தமிழ் மறந்து போய்விடுகின்றது. என் மனைவியோ வந்து ஆறு வருடங்கள் ஓடியும் இன்னும் சுத்தமான யாழ்ப்பாணத் தமிழில்தான் கதைத்து வருகின்றாள். தமிழ் மறந்தவர்களைப் பற்றிக் கூறினால் 'இதெல்லாம் சுத்தப் புலுடா, பம்மாத்து சுத்து மாத்து' என்பாள். எதை வேண்டுமானாலும் பொறுத்துக் கொண்டிருக்கலாம் இவளுடைய நச்சரிப்பையும், பொச்சரிப்பையும் தாங்க மட்டும் என்னால் முடியாது. சுண்டெலிகளிற்கு ஒரு முடிவு கட்டாமல் இவளும் விட மாட்டாள். முடிவாகச் சுண்டெலிகளை ஒரு கை பார்ப்பதற்கு முடிவு செய்தேன். சுண்டெலிகளை ஒரு வழிக்குக் கொண்டு வருவதற்கு முதல்படி சுண்டெலிகளைப் பற்றி அறிவது. சுண்டெலிகளின் பழக்கவழக்கங்கள், நடமாட்டம் பற்றிய தகவல்களைப் பற்றிப் போதுமான தகவல்களை எவ்வளவு அதிகம் பெற முடியுமோ அவ்வளவிற்கு அவற்றை அடக்குவதும் இலகுவானதாக அமையக் கூடும். சுண்டெலிகளைப் பற்றி ஆரம்பத்தில் நாம் கவனத்தில் பெரிதாக எடுக்கவில்லை. ஆனால் அரிசி, மாப் பைகளைப் பதம் பார்க்கத் தொடங்கிய போதுதான் விழித்துக் கொண்டோம். இப்படியே விட்டால் நிலைமை கட்டுக்கடங்காது போகலாம். மனைவியின் பொச்சரிப்பிலும் நியாயமிருப்பதை உணரக் கூடியதாகவிருந்தது. ஓரிரவு என் சகதர்மினியும், குழந்தையும் படுக்கையில் விழுந்தபிறகு சுண்டெலிகளைப் பற்றி உளவு பார்ப்பதற்கு முடிவு செய்தேன். புதிதாக வாங்கிய எலிப்பொறிகளை வைப்பதற்குப் பொருத்தமான இடங்களைத் தெரிவு செய்வதற்கு இந்த உளவு நடவடிக்கை உதவக் கூடும். அரிசி, மாப்பைகளைக் கொண்டு வந்து சாப்பாட்டு மேசையின் மேல் வைத்துவிட்டு வந்து சோபாவில் சாய்ந்தபடி டி.வியைத் தட்டி விட்டேன். சுண்டெலிகளின் வரவை எதிர்பார்த்தபடி ஆவலும் காவலுமாக இடையிடையே 'லெட்டர்மானின்' அறுவைகளையும் பார்த்தபடி யிருந்தேன். நேரம் ஓடிக் கொண்டிருந்தது. சுவர் மூலையில்

## வ.ந.கிரிதரன்

மெல்லதொரு சத்தம்.. காதுகளையும் கண்களையும் கூர்மையாக்கிக் கொண்டேன். சாப்பாட்டு மேசைக் கருகாமையில் போடப்பட்டிருந்த பழைய சோபாவின் அருகாக சிறியதொரு 'குறுணி' என்போமே அப்படியொரு தலை மெல்ல எட்டிப்பார்த்தது. சிறிய கருமணிக்கண்கள், குட்டிச் சுளகுக் காதுகள் ஒரு கணம் எந்த அசைவையும் காணோம். அந்த நேரம் பார்த்துத்தான் இந்தப் (பாழாய்ப்போன என்று சொல்லப் போகின்றேன் என்று தானே நினைக்கின்றீர்கள். அது தானில்லை) இந்தப் பொல்லாத தும்மல் வந்து தொலைக்க வேண்டும் அடக்க முயன்றும் என்னையும் மீறி வெடித்து விட்டது. சுண்டெலியின் வேகத்தைப் பார்க்க வேண்டுமே. கடுகிப் பறந்தது. மறைந்தது என்று வேண்டுமானால் கூறலாம். சிறிது நேர அமைதிக்குப் பின்னர் பழையபடி அதே குட்டித்தலை கருமணிக் கண்கள், சுளகுக் காதுகள், இம்முறை வெகு அமைதியாகப் பார்த்துக் கொண்டிருந்தேன் சமையலறைப் பகுதியில் வழக்கமான இடத்தில் அரிசி, மாப் பைகளைத் தேடிப்பார்த்து விட்டுத்தான் அவற்றின் மணம் பிடித்து சாப்பாட்டு மேசைப் பக்கம் வந்து விட்டது போலும். எனக்குள் விநோதமானதொரு ஆசை உருவானது. மேசைக்குக் கதிரைகள் மூலம் ஏறுதவண்ணம் கதிரைகளைத் சற்றுத் தள்ளி ஏற்கனவே இழுத்து வைத்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விட்டிருந்தேன். எப்படி அந்தச் சுண்டெலி மேசையில் ஏற முயல்கிறதோ இயலுமானவரையில் என் அசைவுகளைக் குறைத்துக் கொண்டு, அதன் அசைவுகளையே அவதானித்துக் கொண்டிருந்தேன். சிறு அசைவு கூட அதனை 'உசார் படுத்தி விடுவதை ஏற்கனவே அவதானித்து விட்டிருந்தேன். சிறிது நேரம் அங்குமிங்குமாக அலைந்துவிட்டு, மோப்பம் பிடித்தபடி மேசைக்குக் கீழ் விழுந்துவிட்டது அந்தச் சுண்டெலி. சிறிது நேரம் அமைதியாகச் செவிகளை உசார் நிலையில் வைத்தபடி நின்றிருந்தது. பின்னர் அண்ணாந்து ஒரு முறை பார்த்தது. உணவு இருக்குமிடத்தை ஊகித்து விட்டது போலும். அறையினுள் சிணுங்கிய குழந்தையைத் தட்டிச் சீராட்டியபடி என் இல்லத்தரசி மெல்லப் புரண்டு படுப்பதின் அசைவை என்னால் உணரக் கூடியதாகவிருந்தது. இந்தப் பிரபஞ்சத்தில் படைக்கப்பட்ட ஒவ்வொரு உயிருமே தனது வாழ்நாளில் இயலுமான மட்டும் முயன்றுதான் பார்க்கின்றது இந்தச் சுண்டெலியைப் போல ஏன் என்னைப் போல என்றும் வேண்டுமானால் சொல்லிக்கொள்ளலாம். நாட்டில் பிரச்சனை மூண்டுவிட்டதென்று சொந்த மண்ணைவிட்டு வந்ததிலிருந்து இன்றுவரை எத்தனை வழிகளில் எத்தனை முயற்சிகள். ஒன்று சரி வந்தால் இன்னுமொரு முயற்சி, ஒன்று பிழைத்து விட்டாலும் இன்னுமொரு முயற்சி. எத்தனை அதிசயமான பிரமாண்டமான பிரபஞ்சம். புதிர்கள் நிறைந்த பிரபஞ்சம். அந்தச் சுண்டெலி இப்பொழுது மேசையின் வழவழப்பான உருக்குக்காலொன்றில் ஏறுவதற்கு மீண்டும் மீண்டும் முயன்று கொண்டிருந்தது. எப்படியும் மேசையின் மேலிருக்கின்ற உணவை அடைந்து விடவேண்டுமென்ற அவா, பேராா்வம் அதனிடம் தொனிப்பது போல் தென்பட்டது. ஏறுவதும் விழுவதும், ஏறுவதும் விழுவதும், ஏறுவதும் விழுவதுமாக அந்தச் சுண்டெலி முயன்று கொண்டிருந்தது. சிலவேளை அது தன் முயற்சியில் வெற்றியடையலாம். அடையாமற் போகலாம். அதற்காக அது தன் முயற்சியைக் கைவிடும் வகையைச் சேர்ந்தது போல் தென்படவில்லை. இறுதி வெற்றி கிடைக்கும் வரை அல்லது களைத்துச் சோரும் வரை அது தன் முயற்சியைத் தொடரத் தான் போகின்றது.

இந்தச் சின்னஞ்சிறு உயிரிற்குள் தான் எத்துனை நூதனமான வைராக்கியம்.. முயற்சி சுண்டெலிகளிற்கு ஒரு வழி காணவேண்டுமென்று என் மனைவி நச்சரித்தது இலேசாக நினைவிற்கு வருகின்றது. 'எடி விசரி! நம்மைப் போலைதானே இந்தச் சுண்டெலிக்கும் ஒரு குடும்பம் குழந்தையென்று சொந்த பந்தங்கள். இதை நம்பி எத்தனை உயிர்களோ? இது ஒரு எப்பன் சாப்பாட்டை தின்னுறதாலை எங்களிற்கென்ன குறையவாப் போகுது.?

நித்திரை கண்களைச் சுழற்றுகின்றது. அந்தச் சுண்டெலி மட்டும் தன் முயற்சியைக் கைவிட்டதாகத் தெரியவில்லை. அரைத் தூக்கத்திலும் அதன் சிறு அசைவுகள் கேட்கத் தான் செய்கின்றன.

## திறனாய்வு..

கிறிஸ்துவ பாதிரிமார்கள் இப்பலவீனத்தையும் நன்கு பயன்படுத்தி சைவ சமயத்தை இழித்தும் பழித்தும் நையாண்டி செய்தும் கூட்டியும் குறைத்தும் பிரசாரம் செய்து வந்ததோடு கிறிஸ்துவ சமயத்தின் மேன்மையையும்போதித்துவந்தனர். பல காரணங்களோடு இதுவும் சேர்ந்து சைவ சமயத்தையும் தமிழ்மொழியையும் பாதிக்கச் செய்தன. இதைத் தடுத்து நிறுத்த உதவினார், நாவலர், கிறிஸ்துவ மதத்தின் குறைபாடுகளையும் அதன் கோட்பாடுகளையும் தத்துவங்களையும் விமர்சித்து பாதிரிமார்களின் எதிர்ப்பிரச்சாரங்களை முறியடிக்கவும், சைவசமய தத்தவங்களைப் பொதுமக்களுக்கு விளக்கிக் காட்டி அவர்களுக்குச் சமயப் பற்றை உண்டாக்கவும் விரும்பினார். அப்பணியைச் செவ்வனே நிறைவேற்றுவதற்கு சொற்பொழிவு மட்டும் செய்தால் போதாது. வசன இலக்கியங்களும் கட்டுரைகளும் எழுதவேண்டுமென்றும் எண்ணினார். எண்ணத்தைச் செயலாக்க வசன நூல்கள் எழுதுவதிலும், கட்டுரைகள் வரைவதிலும் ஈடுபட்டார். முதலில் அவர் கிறிஸ்துவ மதத்தை விமர்சித்தே கட்டுரைகள் எழுதினார். எனவே, ஈழத்தின் முதல் கட்டுரையே விமர்சனந்தான் என்று சொல்லலாம். வேறு வார்த்தையில் விமர்சனத்திலிருந்துதான் ஈழத்தின் வசன இலக்கியம் பிறந்தது என்று கூறலாம்.

இவ்வரலாற்றிலிருந்து ஈழத்தின் முதல் திறனாய்வு இலக்கியங்கள் ரசனையின் பொருட்டு எழுந்தவையல்ல, தேவையின் பொருட்டு எழுந்தவை என்பது புலனாகும். அத்தோடு ஈழத்துத் தமிழ் மக்கள் மத்தியில் நிகழ்ந்து கொண்டிருந்த சமய, சமூக, வாழ்க்கை மாற்றங்களோடு பொருத்திக் கொண்டும் பின்னிக் கொண்டும் எழுந்தன. எனவே, ஈழத்தின் விமர்சனத்துறை இலக்கிய தீயானது மட்டுமல்ல, சரித்திர ரீதியானதும் கூட என்பதும் புலனாகும். இது மிகவும் உரமும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

நாவலரின் விமர்சனங்களை மூன்று பிரிவுகளாக வகுக்கலாம். ஒன்று: சமயம், இரண்டு: இலக்கியம், மூன்றுசமூகவாழ்க்கையும் அரசியலும்.

முதலில் சமயத்துறையை எடுத்துக் கொள்வோம். சைவசமயத்திற்கு எதிராக பிரசாரங்களை மறுத்தும் கிறிஸ்துவ மதத்தை விமர்சித்தும், சைவசமயத் திரிபுகள் என்று தான் கருதியவற்றைத் திறனாய்வு செய்தும் (உதாரணமாக, இராமலிங்க அடிகளாரின் அருட்பாவைச் சாடியது) நாவலர் எழுதிய நூல்கள் பல. அவற்றுள் சைவசமய துாஷண பரிகாரம், சுப்பிரபோதம், மத்தியவாத நிரசனம், போலி அருட்பா கறுப்பு, நல்லறிவுச் சுடர் கொலுத்துதல், யாழ்ப்பாணச் சமயநிலை முதலியன முக்கியமானவையாகும்.

ஒரு திறனாய்வு அது எடுத்துக் கொண்ட விஷயத்தைப் பாதித்து விளைவை உண்டாக்கிவிட்டால் அத்திறனாய்வுக்கு ஒரு சமூகத்தன்மையும் கேந்திர ஸ்தானமும் ஏற்பட்டு விடுகின்றன. நாவலரின் விமர்சன நூல்கள் இத்தகையன. உதாரணத்திற்கு ஒன்றை எடுத்துக்காட்டலாம்.

நாவலரின் சைவ தூஷண பரிகாரம் என்ற நூலைப் பற்றி வெஸ்லியன் திருச்சபையின் 1855ம் ஆண்டு அறிக்கையில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## என்னடி இது மெய்யே?

# திருமதி OC ஓடிவிட்டாவாம்!

இரவு ஒரு மணிபோல் எனது அறையின் கதவு தட்டப்பட்டது. நடுங்கினேன். ஒரு வேளை இயக்கப் பெடியளாக இருக்குமோ? ஹூம், அப்படியிருக்காது. நித்திரை விழித்துத் தேசப்போராட்டம் நடத்தும் ஸ்டைலைப் பெடியள் கைவிட்டு பல ஆண்டுகளாகி விட்டன.... பின்னர் யாராக இருக்கலாம்? கடன் தந்த புண்ணியவான்களோ? மீண்டும் பலமாகக் கதவு தட்டப்பட்டதால், அருகே போய் நின்று.... "யார்?" எனக் குரல் கொடுத்தேன். "அண்ணை, உங்கடை முதலிரவைக் குழப்பிறதுக்காக மன்னியுங்கோ. உங்கடை துணிச்சலைப் பாராட்ட வந்திருக்கிறம்.. நாங்கள் உங்கடை வாசகர்கள்" என்று வந்த பதில் எனது நடுக்கத்தை மேலும் இரட்டிப்பாக்கியது. பெடியள் சொன்ன "முதலிரவு" துணிச்சல் போன்ற பதங்கள் எனக்குத் துண்டாகவே விளங்கவில்லை. வருவது வரட்டும் என்றபடி கதவைத் திறந்தால் அங்கே பத்துப் பன்னிரெண்டு பெடியள் நின்றனர். "நீங்கள் எடுத்த துணிச்சலான முடிவைப் பாராட்டிறம். ... அவவின்ரையும் உங்கடையும் தூக்கத்தை இந்த "அர்த்த" ராத்திரியிலை வந்து குழப்பினதுக்கு மன்னிக்கவும்" என்று ஒரு பெடியன் முன்வந்து சொன்னவுடன், வாயைத் திறக்கவேண்டியது அவசியமாகப் பட்டது.

"தம்பிமார், நீங்கள் சொல்லிற தொண்டும் எனக்குத் துண்டா விளங்கேல்லை, அவவின்ரை தூக்கத்தைக் குழப்பினதெண்டு தம்பி மன்னிப்புக் கேட்டதும் எனக்கு விளங்கேல்லை. தம்பி, என்னோடை ஒரு பெட்டையும் இல்லை... இரவு ஒரு மணிக்கு வந்து ஒருவரின்ரை தூக்கத்தைக் கெடுக்கிறது நாகரிகமானதில்லை" என நான் சொன்னதும், இன்னொரு வட்டு துள்ளியெழுந்து.. "திருமதி ஒட்டகச்சிவிங்கி ஓடிட்டா எண்டு பாரிஸ் முழுக்கக் கதைக்குது. அவ உங்களோடைதான் ஓடினவாவாம், எங்களைப் பொறுத்த மட்டிலை இது ஒரு புரட்சி அதுதான் பாராட்ட வந்தனாங்கள். அவ ஓடி வந்தவா, ரயேட்டா இருக்கும். நாங்கள் வந்து வாழ்த்திட்டுப் போனதா அவவிட்டைச் சொல்லுங்கோ!" என்றபடி அவர்கள் திரும்ப, நான் தடுத்து நிறுத்தினேன்.

"தம்பிமார்! நீங்கள் கற்பனை பண்ணிறதைப் போல ஒண்டுமே நடக்கேல்லை... ஒரு வேளை நீங்கள் கற்பனை பண்ணிறதைப் போல அவ ஓடி இருக்கலாம்.. ஆனா அவ இங்கை மட்டும் வரேல்லை" என்றவுடன் அவர்கள் ஓடிப்போய்விட்டனர்.

திருமதி OC இக்கு என்னை விட வேறொரு தொடர்பும் இருந்ததென எண்ணிக் கலங்கிக் கண்ணீர் விட்டேன். வாழ்க்கையிலே சோதனைகள் வரும் என்பது எனக்குத் தெரியாத விஷயமல்ல. ஆனால், இப்படியா சோதனை வரவேண்டும்? இரவு எனக்குத் தூக்கம் வரவில்லை.

## ஜெயந்தீஸனின் குட்டிக்கதைகள்

திருமதியை எனக்குத் தெரியாமல் காதலித்த மாமேதை யாராக இருக்கலாம் என என்னிடமே கேட்டுக் கொண்டிருந்தேன். அவவிற்கு கறுவல்கள் மீது முன்பெல்லாம் அதிருப்தி.. நான்தான் நிறவெறியோடு கறுவல்களைப் பார்க்கக்கூடாது அவர்கள் தங்கமான மனது கொண்டவர்கள் எனச் சொல்லி அவவின் மனதில் மாற்றத்தை ஏற்படுத்தியதால் யாரும் கறுவலுடன் கம்பி நீட்டிவிட்டாவோ என்று வேறு யோசித்துப் பார்த்தேன். "எங்கிருந்தாலும் வாழ்க!" என்ற பழைய பாடலால் அவவை வாழ்த்தி விட்டுக் கண்ணயர்ந்தால் போன் அடித்தது.. அது என் ஒண்டு விட்ட தம்பி......

"அண்ணை, திரு ஒட்டகச்சிவிங்கி, இயக்கப் பெடியளைத் திரட்டிக் கொண்டு உங்களிட்டை வந்து கொண்டிருக்கிறார். நீங்கள் உடனடியாக அவவையும் கூட்டிக்கொண்டு இங்கை வாங்கோ!" என்றவுடன் எனக்குச் சினம்தான் வந்தது.

"எவவையடா?" என அவனோடு எரிந்து விழுந்தேன்.

"ஒட்டகச் சிவிங்கி அக்காவைத்தான்" என்றான்.

"ஒட்டகமும்....." என்றவுடன், "அப்ப, அவ உங்களிட்டை வரேல்லையோ?" என வியந்த அவன்... "அவங்கள் வாறாங்கள். நீங்கள் அங்கையிருக்கிறது சரியில்லை..... உடனே இங்கை வாங்கோ" எனத் துடித்தான்.

"டேய், என்னிட்டைக் காரும் இல்லை, சயிக்கிளும் இல்லை... இந்த இரவிலை ரயில் சேவையும் இல்லை, என்னெண்டு வாறதாம்....?" எனக் கேட்டேன்.

"அண்ணை நீங்கள் ரயில் ஸ்டேஸனிலை போய் நில்லுங்கோ... ஒரு வெள்ளைக்கார் வரும்.. அதிலை ஏறி வாருங்கோ..." என்றவுடன் சரியென்று விட்டு, பதுங்கி பதுங்கிப் ஸ்டேஸனில் போய் நின்றேன்.

அரை மணி நேரமாகியும் வெள்ளைக்கார் வரவில்லை. ஒரு வெள்ளைக்காரி வந்தாள். அவளின் பார்வை என்னைப் பயமுறுத்தியதால் ஒரு தொலைபேசி பூத்துக்குள் போய் ரெலிபோன் பண்ணுவதாக நடித்தேன். அவளோ, கிட்ட வந்து என்னையே பார்த்தபடி... எனக்கு விசர்தான் வந்தது "FOUT LE CAMP" எனத் திட்டினேன். "T'ES UN CON" என்று அவளும் என்னைத் திட்டிவிட்டு போனவுடன் வெள்ளைக் கார் வந்தது. எனக்குத் தெரிந்த பெடியள் உள்ளே இருந்தபடியால் பயமில்லாமல் ஏறிக் கொண்டேன்.

"அண்ணை, அவவை எங்கை ஒழிச்சு வைச்சிருக்கிறியள்?" என ஒரு வட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பட்டெனக் கேட்டது.
"தம்பி, அவ மரி பண்ணினவா, எங்கை போனு, ஏன் போனு, எப்பிடிப் போனு எண்டதொண்டும் எனக்குத் தெரியாது... அவ ஆரோடை போனு எண்டதைக் கண்டு பிடிச்சாத்தான் என்ருலே நிம்மதியா மூச்சு விட முடியும்....."
"அண்ணை, உங்களுக்கும் அவவுக்கும் தொடர்பு இருந்ததெண்டது உண்மையோ, உண்மையில்லேயோ?"
"உண்மை, ஆனு அது இலக்கியத் தொடர்பு....."
"அவளோடை நீங்கள் ஒருக்காலும்..." என இன்னொரு வட்டு இழுத்தது...
"தம்பி, நீர் என்ன ஆய்வாளரா?" எனக் கேட்டதும் கப்சிப் ஆகி என்னை ஒரு மாதிரியாகப் பார்த்துக் கொண்டிருந்தபோது, ஒண்டுவிட்ட தம்பியின் வீடு வந்து விட்டது.

அங்கே, நாங்கள் திருமதி OC எங்கே ஓடிப்போயிருப்பாள் என்ற ஒரு ஆராய்ச்சியைத் தொடங்கினேம். விடிய விடிய இந்த ஆராய்ச்சி நடந்தது.. ஹூம்... எங்களால் கண்டுபிடிக்க முடியவேயில்லே.....
ஒரு வாரம், நான் அங்கே ஒழித்து வாழ்ந்த போது, பல சேதிகள் வந்து சேர்ந்தன.
இதில் ஒன்று... நானும் கண்டுபிடிக்க முடியாதவராக இருந்ததால் என்னேடுதான் அவ ஓடிப் போய்விட்டாவாம்... இலக்கிய உலகில், எனது குட்டிக்கதைகளைக் காட்டிலும் இச்சேதி விஷேடமான ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.. என்னைத் தட்டுவதில்தான் தமிழ் பண்பாட்டின் விடுதலேயே தங்கியுள்ளது என கவிஞர் கீர்த்தி பறை தட்டித் திரிந்தாராம்.. விமர்சகர் கார்த்திக் திரு OC இன் பக்கத்தில் நிழல் போல நின்று ஆலோசனைகள் கொடுத்தாராம்.

திருமதி OC ஓடிப்போன 10 ஆவது தினத்தில் எனக்கு ஓர் phone call வந்தது. அது ஒரு மர்மக் call.
"அண்ணை, அவ வந்திட்டா.. உடனடியாக அவவுக்கு call பண்ணுங்கோ!" என்றது அது.
எனக்கு எல்லமே மர்மமாக இருந்தது. இருந்தும் அவவின் இலக்கத்துக்கு phone பண்ணினேன். எடுத்ததோ அவர். இப்படி அவர் என்னிடம் சொன்னுர்.
ஜெயந்தீஸன், ஒரு பிசகு நடந்திட்டுது. என்னை மன்னியும்... அவ பக்கத்திலேதான் நிக்கிரு... குடுக்கிறன்... கதையும்.. எல்லாம் விளங்கும்..." என்ருர்.....
"நந்தினி!" என மிருதுவாக அழைத்தேன்.....
"நான் எல்லாம் அறிஞ்சன். ரெண்டு கிழமைக்கு முன்னம் அவர் நல்ல வெறியிலே வந்தார். ஜேர்மனியிலே பெண்கள் சந்திப்பு எண்டு ஒண்டு நடக்குது. அதுவும் வாற கிழமை.. போகட்டே எண்டு கேட்டன். சரி எண்டார். எப்ப போறதெண்டதையும் அவரிட்டைச் சொன்னன்.. போறநாள் பார்த்து அவர் வீட்டை இல்லே.. அதாலே நான் அவருக்கு நான் போறதெண்டு தெரிஞ்சிருக்கும்தானே எண்டு நம்பி போயிட்டன். அங்கையும் கதை அடிபட்டிது.. ரிடீசe பண்ணி அவரைக் கிழிச்சிட்டுத்தான் திரும்பி வந்தனுர். நீர் இனி உம்மை Room உக்கு போகலாம். ஒரு பிரச்சனையும் வராது.. எண்டா.
அப்பாடா பெண்கள் சந்திப்பு என் தலேயைக் காத்ததே எண்டு phone ஐ வைத்தேன்.

## [illegible]

கதவைத் திறந்த ஏழுமலே சினந்து கொண்டு வந்தான். 'எங்கட பெட்டையள் சரியாய் கெட்டுப் போனுளவை'
எனக்கெண்டாய் ஒண்டும் துண்டா விளங்கேலே. பெட்டையளைக் கண்டால் வேற எண்ணத்தோட பார்த்துக்கொண்டே 'அக்கா' போடுற விண்ணன் இவன். அதுவும் கலியாணமான திருமதிகள் மீது இவனுக்கு பாசம் அதிகம். யாரும் இளம் பெண்கள் அழகாக உடுத்திக் கொண்டு போனுல் இவனுக்கு கண்ணில காட்டேலாது.
அங்க பார் உவளவையை, ஆடுருளவை என்று உடனடியாகத் தீர்ப்பும் வழங்கி, கல்லால் எறிய ஆயத்தமாகுவான்.
நானும் யேசு நாதர் மாதிரி 'உங்களில் பாவமில்லாதவன் முதலில் இவள் மேல் கல்லெறியட்டும்' என்று சொல்லித் தான் பார்க்கிறேன். அவன் அசையும் நோக்கமில்லே.
பாடசாலேயில் படிக்கின்ற பெண்கள், ஜீன்ஸ் போடுகின்ற பெண்கள், ஆங்கிலம் பேசுகின்ற பெண்கள் எல்லாருமே இவனது சாபத்துக்கு தப்ப முடியாது.
'என்னடா, புறுபுறுக்கிருய். விசயத்தைச் சொல்லன்'
'உங்க பார், எங்கட பெட்டை ஒருத்தி கறுவல் ஒருத்தனேடை போருள்'
'ஆரடா?' 'எங்க கண்டனி' என்று றூமிலிருந்து ஏக காலத்தில் குரல்கள் எழுந்தன.
'பக்கத்து பில்டிங்கில தான். அவளும் அவனும் பிள்ளையை தள்ளிக்கொண்டு போகினம்'
'அப்ப அது கயாணுக்காரி போல கிடக்கு'
'இல்லே, தமிழ் பெட்டை, பொட்டு வைச்சிருக்கிருள்'.

உவளவை இங்க வந்து கெட்டுப் போனுளவை என்று ஒட்டுமொத்தமாக றூமே தீர்ப்புச் சொன்னது. எனக்கு எரிச்சல் வந்தது.
'இங்க வாங்கோடா.. உங்களுக்கு இப்ப என்ன பிரச்சனை. அவள்

## பெண் சூரியன் குட்டிக்கதைகள்

கறுப்பனேட போறதால பண்பாடு போகுது எண்ட கவலேயோ, இல்லாட்டி கறுவலோட போறவள் எங்களோட வந்திருக்கலாம் தானே எண்ட எண்ணமோ?'

பையன்கள் கப்சிப்பினுர்கள்.
'எவள் எவனேட போனு உங்களுக்கு என்னடா? அவள உங்களுக்கு முன்பின் தெரியாது. மாமியோ மச்சாளோ.. பிறகேன் கத்துறியள்.'
'அதென்னெண்டு எங்கட தமிழ் பெட்டை காப்புலியோட போறது?' என்ருன் ஏழுமலே.
'இங்க வா, உன்ரை முஞ்சியை கண்ணடியில பாத்தனியே.. பெரிய வெள்ளைக்காறன் சொல்ல வந்திட்டார்' என்றதும் ஏழுமலே ஜகா வாங்கினுன். இரவு ஒரு கேஸ் பியர் வாங்கி, எல்லோருமே தமிழ்பெண்களின் கற்பு, மானம், பண்பாடு அழிவதையும் தங்களுக்கான வெயிட்டிங் லிஸ்டில் ஒரு பெண் இல்லாது போனது பற்றியும் விவாதித்து அழுது கொண்டனர்.

★ ★ ★

மறுநாள் வார இறுதி கடைக்

[illegible]ம் பக்கம் பார்க்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# விளக்கு கம்ப விளக்கம்



சிதம்பரம் ஞா.வடிவேலனுர்

"வாலியைப் படுத்தாயலை மன்அற வேலியைப் படுத்தாய் விறல்வீரனே என்ற மேற்படி வரியில் இருந்து தம்பி கேசவன் நீ என்ன விளங்கினீ என்று கொஞ்சம் விளக்கிச் சொல்லு பார்ப்பம்"

"தமிழ் வாத்தியார் பண்டிதர் இராமலிங்கர் கம்பராமாயணத்தைத் தூக்கிற்றார் எண்டால் இப்படித்தான் இரண்டு வரியைச் சொலலிற்று விளக்குமாற்றால விளக்கெண்டு நிற்பார். இந்தப் பாடம் என்னெண்டுதான் முடியப் போதோ"

"கேள்வி கேட்டா முதலில எழுந்து நிற்கப் பழகுங்க: நீங்கதானே வருங்காலத்தின்ர தூணுகள்"

"என்ன சேர் வருங்காலத்தின் தூணுகள் எண்டு எங்களைச் சொலலிறியள். அப்படியெண்டா நாங்க எல்லாம் அஃறிணைப் பொருளே"

"மாடு நீ சரியா கதைக்கப் பழகிற்ற எதிர்காலத்தை தாங்கிற சத்தி உங்களைப் போன்ற இளசுகள் கையிலதான் இருக்கு, அதாலதான் உங்களைத் தூணெண்டு சொன்னனான்."

"இல்ல சேர் நீங்கள் எதிர்காலத்தின்ர தூண்கள் எண்டு சொல்ல இஞ்ச வீரர்களுக்கு நடுகிற தூண் எண்டு எங்கள் எல்லோரையும் உருவக அணியாய் நினைச்சிட்டன்"

"நல்ல காலம் தூணை நினைச்சாய்: உள்ளுக்க இருக்கிற வீரரை நினைக்காத அளவுக்குப் பறுவாயில்லை. சரி மாடு! உனக்கு உவமைக்கும் உருவகத்துக்கும் இடையே உள்ள வித்தியாசம் எண்டாலும் தெரியுதல்லா, அதுவே உன்னப் பொறுத்தளவில பெரிய விசயமல்லா!"

"உங்கட மாணவனுக்கு இதெல்லாம் பெரிய விசயமோ சேர்"

"சரி சங்க காலத்தில காதலும் வீரமும்தான் முதன்மைபெற்றிருந்தது. வீரம் எண்டா என்ன? தம்பி சிவசேகரம்! அடுத்த மாடு, மற்ற மாடு, வாத்தியாற்ற மாடு, பின்வாங்கில மாடுகள், இஞ்சால தாரணி, அபிராமி, இரஞ்சிதவஞ்சி, பொம்மலோதி, வீழியிதழி, ஒரு மாடுகளுக்கும் தெரியாது?

வில்லறம் துறக்காதது வீரம்"

"அப்ப சேர்: வீரத்துக்கு எப்ப இழிவு"

"தொல்லை நல்லறம் துறந்தால் அப்பொழுது வீரத்துக்கு இழிவு. இது நான் சொல்லேல கம்பன் சொன்னது"

"சேர் நீங்க இப்பயும் விற்காலத்திலதான் நிக்கிறியள். முன்னுக்குவாங்க சேர். ஏ.கே. 47 கூட நீங்க சொல்லிற விற்காலம் போல பழமையாப் போச்சு"

"டேய் மடையா! அந்தக் காலத்தில் உருவான தமிழ்தானே இந்தக் காலத்திலேயும் இருக்கு"

'ஓம்'

"விளங்கினாச் சரி: பறையாமஇரு, மெய்யனே விகிர்தா மேருவே வில்லா மேலவர் புரங்கள் மூன் றெரித்த கையனே.......

எண்டுறது திருவாசகம் அது தெரியுமோ? அதில "மேருவே வில்லா மேலவர் புரங்கள் மூன்றெரித்த" எண்டு வாறதில உள்ள மேருவே வில்லா என்றதுக்கும் வில்லறம் துறக்காத வீரத்துக்கும் என்ன கனக்க வித்தியாசம் சொல்லுங்க.. பார்ப்பம். ஒன்றும் இல்ல. வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் எண்டு சொலலிறவையள் எல்லே. வல்லவனுக்கு கல்லும் ஆயுதம்தான் அதுதான் "மேருவே வில்லா" டேய் தம்பி: கொரில்லா தாக்குதல் இருக்கெல்லே. அது முதல்முதலில கல்லால அடிச்சுதான்ரா தொடங்கியது இப்ப உங்களுக்கு பூரணமா விளங்குதெல்லே

என்னம் விளங்காட்டி அண்டைக்கு கோலியாத் தாவீது சண்டைக்கதை சொன்னனுன் எல்லே எது வெண்டது கல்லு.

சரி இந்தக் கல்லால அடிக்காமலே நம்மட முன்னோர் சில வேறு இன சமய எதிரிகளை வெண்டிருக்கினம். அப்படி கல்லோடு சம்பந்தப்பட்ட தமிழர் வல்லோனைச் சொல்லுங்க பார்ப்பம்"

"திருநாவுக்கரசர்"

"ஆம் இந்த மனுசனை கல்லில கட்டி சமண சமயத்தவர் கடலில போட்டனர். போட்ட உடனே என்ன நடந்தது? தம்பி மோகன்"

"இவர் பெயர் என்ன? என்ன குற்றம் செய்தார் என்பவை அடங்கிய நோட்டீஸ் இவரைப் போட்ட கடற்கரையில வைச்சு காத்துக்குப் பறக்காம நோட்டீஸ்க்கு மேல கல்லு சில வைச்சிருப்பையும் சேர்"

"டேய் அன்னக்காவடி கடலில கல்லோட கட்டி போட கல்லு தெப்பமாய் மாறி இவரை கரை சேர்க்க வைச்சுதடா. இவற்ற கழுத்தில என்ன தொங்கிச்சுது தெரியுமோ?"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

"சைனட்டு"

"கழுதையள் அது சைனட்டுப் போலதான் கழுத்தில தொங்கும். இரண்டும் உயிர் ஆபத்துக்காலத்தில பயன்படுத்திற சாமான்தான்ரா ஆனா சைனட்டு உயிரைப் போக்கும். இது உயிரைக் காக்கும். அதுதான்ரா உருத்திராட்சங் கொட்டை. ஆபத்து வந்தகாலத்தில கரனே நினேச்சு ஒண்டை கண்ணில வைக்கிறது மற்றதை வாய்க்க வைக்கிறது. ஒன்று உயிரைக்காக்கும். மற்றது உயிரைப் போக்கும். ஒன்று கல்ல துப்பலாக்கும் மற்றது துப்பல கல்லாக்கும் இரண்டுக்கும் பவர் ஜாஸ்திதான். அதால தான் கழுத்தில தூக்கிறவை"

"அப்பசேர் பண்டைய வாழ்வு முறை இன்னும் அழியாமல் எங்கட வாழ்வியலில் ஒட்டி உறவாடுதெண்டு சொல்லுங்கோ"

"மெத்தச்சரி இளவழகா! பண்டைய நிகழ்வுகள் மாறிப் போனாலும் அதனுடைய மிச்ச சொச்சங்கள் இன்னும் வெவ்வேறு உருக்கொண்டு எஞ்சி நிற்குதடா. உதாரணத்துக்கு இப்ப விடுதலே விடியலே நோக்கி தமிழ் பெண்கள் முன்னணியில் நிற்கிறதயும் எல்லா இது ஒரு பாராட்டபட வேண்டிய விசயம் கண்டியோ. ஆனா இது பெரிய விசயமில்ல பழைய பாண்டியன் காலத்தில் இருந்த மிச்ச சொச்சத்தின் எச்சம் இது. பரம்பரைச்சொத்து ஆனபடியால் இதுகளேப் பெரிசா பாராட்டவேணும். மணிவாசகனே சொல்லிருன் தன்ர திருவாசகத்தில் "மானே நீ நென்னலே நாளே வந்து உங்களே
நானே எழுப்புவன் என்றலும் நாணுமே
போன திசை பதுராய் இன்னும் புலர்ந்தின்றே"
புலர்ந்தின்றே என்பதன் கருத்து விடியல். அதுதான் விடுதலே விடியல். தம்பி பகீரதன் நான் ஏதேனும் பிழையா வியாக்கியானம் செய்யிறனே உன்ர முஞ்சி ஏதோ பிழையாக் கிடக்குது அல்லாட்டி என்ர பாசைதான் உனக்கு விளங்கேலேயோ. என்னவா இருந்தாலும் நான் சொல்லிறத்த கவனிச்சா சரி, இவ்வாறு பண்டைய நிகழ்வுகள் கால ஒட்டத்தில் கரைந்தாலும் காலத்தண்ணீரில் இன்றும் செறிந்திருந்து எங்களுக்கு பலன் தருகுது பயன்தருகுது.

ஆனலும் பழைய சில நல்ல நிகழ்வுகள் இன்றும் தொடர்ந்து வந்து எங்களுக்கு பயன் தருவது அறம் பிறளாத் தன்மையாம். அதற்கு சிலப்பதிகாரத்தில் கண்ணகி என்று இளங்கோவடி செய்த பாத்திரம் அறம் பிழைத்தால் அறமே கூற்றுகும் என்பதற்கு சாட்சியாக இருக்கிறது. கண்ணகி என்னும் உங்களேப் போன்ற கற்புடைப் பெண்ணெருத்தியின் கணவனை கோவலன் அநியாயமாக பாண்டிய மன்னனால் இறந்ததற்கு அரசனேயும் கொன்று வெஞ்சினத்தால் தன் இடமுலேயையும் திருகி எறிந்து நான்மாடக் கூடலாம் தமிழ் தந்த மதுரையையும் அழித்தான் என்பது உங்களுக்கு தெரியும். ஏன் இத்தன்மை? அறம் பிழைத்த ஆட்சி. என் வருங்கால சந்ததியே அறம் பிறழா ஆட்சி செய்யுங்கள் அதுவே உங்களுக்கு மாட்சி"

"சேர் இடது முலேயை திருகி எறிஞ்சதை என்னவோ சும்மா இளனியை திருகி எறிஞ்சது மாதிரி லேசாச்சொல்லீற்றியள். இதுஎல்லாம் நம்பிற கதையே. கண்ணகிக்கு இடது முலேயில புத்து நோய் இருந்திருக்கும் அதால நாட்டுவைத்தியர்மார் முலேயை அகத்தியிருப்பினம் அந்த இடத்தில ஏதேனும் அணுக்குண்டை வைத்திருந்து களட்டி எறிஞ்சு மதுரையை நாசம் பண்ணியிருக்கும் அந்த மனிதக் குண்டு"

"டேய் செம்மறி, நீ சிந்திக்கிறது எல்லாம் உசத்திதான். தத்துவமேதை அரிஸ்டோட்டில் சொன்ன 'மனிதன் சிந்திக்கும் பிராணி" என்றது உன்னளவில உண்மையடா. இருந்தும் உன்ர சிந்தனேயில பிழையிருக்குதடா. முன்னேக்கிச் சிந்தி. அப்பதான் அது சிந்தனே தம்பீ, இடப்பக்கம் தான்ரா மனிதருக்கு இருதயம் இருக்கு. அதாலதான் இடதுமுலேயை திருகி எறிஞ்சதாய் சொல்லியிருக்கு. ஏன் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருமூலரே சொல்லியிருக்கிருர். 'இடப்பக்கமே இறை நொந்ததென்ருர் கிடக்கப் படுத்தார் கிடந்தொழிந்தாரே" அப்படியெண்டு அர்த்தம் என்னெண்டு புரியுதா? ஒருத்தருக்கும் தெரியாது.. சொல்லிறன் இறையென்ரு இறைவன். இறைவன் எங்கயிருப்பான். இருதயத்தில இருப்பான் எனவே இடப்பக்கமே இறை நொந்ததெண்டா இருதயம் வலித்ததெண்டு அர்த்தமடா. விளங்கிச்சா இந்த விஞ்ஞானக்கருவி வர முதலே இருதயம் எந்தப்பக்கத்தில இருக்கெண்டு மூவாயிரம் வருசத்துக்கு முன்னல மெஞ்ஞானத்தால கண்டுபிடிச்சிருங்களடா நம்மட பெரியவங்க. இதிலிருந்து என்ன விளங்கிறேங்க நெஞ்சுக்கு நீதியா நடக்கவேணும் எண்டு. தம்பி நீ எப்படியடா விளங்கினி சும்மா வெக்கப்படாம சொல்லடா"

"நீங்க சொல்லிறது போலதான் சேர் எனக்கும் விளங்கினது சேர்"

"சரி சரி விளங்கினச்சரி டேய் தம்பி திருத்தணியீசன், என்ர பக்கமும் கொஞ்சம் கவனத்தைத் திருப்படா"

"அங்க பாருங்க சேர், தங்கட ஆக்களே தாங்களே போடுறதுக்கு போஸ்ரில கட்டுருன்கள்"

"ஐயோ இது என்ன அநியாயம்"

வாலியைப் படுத்தாயலே மன் அற
வேலியைப் படுத்தாய் விறல் வீரனே!

## அருண்டவன்...

கொள்முதலுக்கு எல்லாருமாக நொப் ஹில்லுக்கு போனல்.. ஏழுமலே அந்தக் கறுவலேயும் பெண்ணேயும் கண்டு விட்டான். மற்ற றூம் மேட்டுகளுக்கு விசயத்தை காதில் போட்டு எல்லாரும் அவர்களே பின்தொடரப் புறப்பட்டார்கள். தூரத்தில நின்றதால் அடையாளம் தெரியவில்லே. திடீரென்று 'டேய் பெண் கூரியா' என்று சத்தம் கேட்டது. 'உங்க பாரடா, அந்தக் கறுவலுக்கு தமிழும் தெரியும் போல, அவள் பழக்கிப் போட்டாள் போல கிடக்கு' இது ஏழுமலே.

உவனுக்கு என்னண்டு, கூரியனேத் தெரியும்? இது மற்றவர்களின் கோரஸ்.

'அட ரமேஸ்!' என் பழைய கிளாஸ்மேட்.

இவன் ஆள் அசப்'பில் கறுப்பர்கள் மாதிரி.. சுருள் மயிரும் உயர்ந்த தோற்றமும். இதைப் பார்த்திட்டு இந்த மண்டுகங்கள் இப்படி..

★ ★ ★

கிட்ட வந்த ரமேஸ் தன்னுடைய மிஸிஸை எனக்கு அறிமுகப்படுத்தி.. ஜெயந்தீஸன் என்ன செய்யிருனடா என்று விசாரிக்க..

ஏழுமலேயும் மற்றவர்களும் தமிழ் பண்பாடு காக்கப்பட்டது பற்றி நிம்மதிப் பெருமூச்சு விட்டவாறு 'அக்கா' என்று பாசம் பொங்க..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கோசல்யா கவிதைகள்

## கல், கடல், கவிதை பற்றிய சில நினைவுகள்

### ந.சுசீந்திரன்

"மப்பன்றிக் கால மழை காணு
மண்ணிலே
சப்பாத்தி முள்ளும் சரியாய்
விழையாது ஏர்
ஏருது: காலை இழுக்காது. எனினும்
அந்தப்
பாறை பிளந்து பயன்விளைப்பான்
என்னூரான்."

என்பார் மஹாகவி உருத்திரமூர்த்தி. அவர் காட்டிய அந்தத் தரை அதோ தூரத்தே தெரிகிறது.

கல் விழையும் பூமி ஒன்றை நீங்கள் கண்டதுண்டா? "பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும்" என்ற பழமொழி அந்தப் பூமியின் நடைபழகும் குழந்தைக்குக் கூடத் தெரிந்து விடும் சாமானியம். நீங்கள் வெளியில் இறங்கி நடந்தால் உங்கள் கால் விரல்கள் ஏதோவொரு கல்லில் மோதிக் காயப்பட்டுத்தான் வருவீர்கள். சிதைந்த கால் விரல் நகங்கள் தான் அவர்கள் அடையாளங்கள், கன்னத்தில் கீறிவிடும் மேற்காபிரிக்க மக்களாக. ஆக்காட்டியிடம் கேளுங்கள்:

'ஆக்காட்டி ஆக்காட்டி
எங்கெங்கே முட்டையிட்டாய்?
கல்லுக் கிழப்பி கரையோரம்
முட்டையிட்டேன்."

கல்லைத் திறந்து கருங்காட்டுப் பாறையிலும், கல்லைப்பிளந்து அல்லது குடைந்து கடலோரம் முட்டையிட்ட ஆக்காட்டி இங்கே கல்லைக் கிழப்பி கரையோரம் இடுகிறது.

இந்தப் பாவை நிலத்துக் காரைச் செடிகளைப் போலவே காய்ந்து குன்றி நெக்கரித்த உப்பு நீர் வனப்பு இவர்களுடையது. இந்த மனிதர்களின் கவி சொல்லும் திறனை யாரும் எழுதியதாக நான் அறியவில்லை. சர்வ சாதாரண மனிதர்களின் கவித்துவத்தைக் கண்டு நான் வியந்து, வியந்து .... அவர்கள் உதட்டின் அசைவையும், ஒரு வரிக் ஹைகூவையும் எம்மால் இன்று அனுபவிக்க முடியாதபடி தொலைவும் இழப்பும். இரண்டாம் உலகமகாயுத்த காலம். சண்டைக்கு அஞ்சாத தன் தம்பியை யாரோ கொன்று விட்டார்கள். ஒரு தமக்கையின் ஒப்பாரி:

'சண்டைக் கலையிலே
வேச மகன் சண்டாளி.... என்
பிறப்போடு
சதிராடி வெண்டானில்ல
போருக் கனலியிலே
வேச மகன் சத்திராதி என்
பிறப்போடு
போராடி வெண்டானில்ல"

நீண்டு செல்லும் முடிவற்ற இந்த ஒப்பாரியைப் பாடியவளை தூவானக் கோடிக்குள் பாயிழைத்து லொக்கு லொக்கு என்று பாக்கிடிக்கும் படுக்கைக் கிழவியாக, மாருட்டக் கதைகளோடு பார்த்ததுண்டு. அவளோடு அந்த ஒப்பாரியும் மறைந்திருக்கக் கூடும் இதை நான் இனி எங்கு தேடுவது!

"
...........
நீ
வில் எடுத்துத் தோளில் வைத்தால்
வீமர் படை வென்று விடும்
அம்பெடுத்துத் தோளில் வைத்தால்
ஐவர் படை வென்று விடும்
"
.......

இறந்த உறவினன் பலத்தை எம்பிராட்டி என்பவள் இப்படிப் பாடக் கேட்டதுண்டு. கண்ணும் மனமும் நீர் சிந்த வைக்கும் சோகச்சொற்கீதங்களை இயல்பாக இயற்றிவிடுகிருள் இந்த மனுஷி.

என் வீட்டு ஏழு பிள்ளை நல்லதங்காள் 'டக்' கென்று தோணியேறி நல்லத்தம்பியிடம் சென்று விடுவதற்கு இந்து சமுத்திரத் தடை இவர்களுக்கு.

"மலையடி" என்பார்கள் ஏழுதிசை நீரோட்டம் ஒன்ருகச் சந்தித்து அலையால் மலை எழுப்பும். அதற்குள் அகப்பட்ட கப்பல் எம்பிக் குதித்து "தொப்" பென்று கீழே விழும். இதே அலைகளுக்குள் தான் அதோ வெட்டுண்ட முனகும் உடல்களோடு 'குமுதினி' மௌன சமுத்திரத்தில் மிதந்தபடி.

இங்கே பூதத்தம்பி விலாசப் பாடல்களை எல்லாம் கதை கதையாச் சொல்லும், "முட்டு.. முட்டு.. என்று என் தலையோடு முட்டவரும் ஆசைக் கிழவர்களை எல்லாம் எரித்த சுடுகாடு கூட கடலோடு கரைகிறது. அடையாளங்கள் சீக்கிரமாகவே அழிந்து விடுகின்றன தடயங்களேயில்லாமல்.

அதனுற்ருன் தமிழில் எது எழுதப்பட்டாலும் எது சொல்லப்பட்டாலும் அதைக் கோவைப்படுத்துவதும், பாதுகாப்பதும் நாளை வரை அவசியமாகிறது.

முன்பெல்லாம் இறந்தவன் சரித்திரத்தை கல்லில் வெட்டியிருப்பார்களோ! மையும் தாளும் புழக்கத்திற்கு வந்த பின்னுல் இறந்தவர் மீது பாடப்படும் புலம்பல் திரட்டுக்கு இப்போதும் "கல்வெட்டு" என்றே வழங்கப்படுகிறது.

இதனைச் 'சரம கவிதை' என்று சற்றே பண்டிதத் தமிழில் சொல்லுவார் கவிமாமணி க.த. ஞானப்பிரகாசம்., இது வரை சுமார் 1400 கல்வெட்டுத் திரட்டுக்களை விருத்தப் பாக்களாக இயற்றியிருக்கும் இந்தக் கவிஞன் சமூகத்தொடர்பின் உள்ளார்ந்த பண்புகளைத் துன்பியல் நிகழ்வுக்குப் பின்னுல் கணவன், மனைவி, மக்கள், மருமக்கள், என்ற உறவுகளாக நின்று வெளிப்படுத்தும் உணர்வுகள் எந்த இலக்கிய வரலாற்றில் இடம் பெறப்போகின்றன.

நாலு பேருக்குச் சொல்லிப் பெருமைப்படக் கூடியவாறு, பழைய மாணவர் சங்கம் அமைத்து ஒரு கூட்டம் போட இந்த ஊரில் உள்ள பள்ளிக்கூடங்கள் எதுவும் கொடுத்து வைக்கவில்லை. ஆனுலும் இங்குள்ள சமூக நிர்மாணிகளாக நிறையத் தமிழ் ஆசிரியர்கள் இருந்தார்கள். கம்பன் வீட்டை இவர்கள் கட்டியபோதும், கிராமீயத்தின் அறிவிலும், அன்ருட வாழ்வின் சுறுசுறுப்பிலும்... எங்கள் மனத்தின்

www.tamilarangam.net

அழிவிலும் இவர்கள் கதையும் எங்கள் கவிதையும் முடிந்து விடுகிறது.

'பங்கர்வாடி' என்றொரு மராட்டிய நாவல் அற்புதமான அந்த நாவலில் ஓர் ஆசிரியன் கிராமத்திற்கும் அவனுக்குமான பந்தம், இலங்கையின் எந்தக் கிராமத்தோடும் இணைத்துப்பார்க்கக் கூடியதுதான். அவன் போலவே நான் கண்ட கோசல்யாவின் மூத்த சகோதரன் தர்மலிங்கம் ஆசிரியர் அவர்களும் கீழைத்தேயக் கல்விமுறை என்ற பதிவை மட்டும் எம்முடன் விட்டுச் சென்றுள்ளார். அவன் மீது பாடப்பட்டிருக்கும் இரங்கலைக் கண்ட போது அவனை வியந்த என் சின்ன நாட்களை எண்ணிப்பார்க்கின்றேன்.

இந்த அனைத்தோடும் உறவுடைய ஒருத்திதான் கோசல்யா, மரபின் பக்கமே இவள் நின்றிருந்திருந்தால் ஒருவேளை நல்ல மரபுக்கவிதைகள் நமக்குக் கிடைத்திருக்கக் கூடும். விசாலித்த நுனித்த பார்வை, படிமங்களிற் பயிற்சி, எதுகை மோனைக்கல்லாது உணர்வு தெறிக்கும், செதுக்கிய சொற்தேர்வு என்றெல்லாம் இவள் இன்னும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. எழுதிய தெல்லாம் கவிதைகள் தானு என்ற மீள்பார்வை, சுருங்கச் சொல்லல் என்பதெல்லாம் எமது ஆக்கதாரார்கள் கவனிக்க வேண்டும். எமது எதிர்பார்ப்புகளுக்கு அப்பால் அற்ப விடயங்கள் என்று ஒதுக்கப்பட்டு விடும் பெண்கள் எதிர் கொள்ளும் பல விடயங்களை இவள் பாடு ஷபொருள் ஆக்கியிருப்பது கண்டு கொள்ளப்பட வேண்டியது.

தன் கவிதைகளைத் தொகுப்பாக்கியிருக்கும் இவளது முயற்சி இன்னும் பலபேர் இத்துறைக்குள் வருவதற்குத் துணிச்சலைத் தருமென்று நம்புகின்றேன். தேடலும் விமர்சனமும் என்றும் தேவைப்படுவது.

கோசல்யாவின் கவிதைகளை
Nool,
Nadarajah Sussindran Straube
Brunsbuttler Damm 21
1000 Berlin 20 என்ற விலாசத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

# மாலைதீவில் கண்ணீருடன்...

## நிவேதிகா

# ஏமாற்றாதே! ஏமாறாதே!

பலர் இன்னும் எத்தனையோ வகையில் ஏமாந்து கொண்டுதான் இருக்கிறார்கள். கொழும்பில எக்கச்சக்கமான ஏஜன்சி நிறுவனங்கள், ஒரு தனியொருவர் லாட்ஜில் ஒரு அறையில் தங்கிக்கொண்டு ஏஜன்சி வேலை பார்த்தாலும் அது பெரிய நிறுவனம் என தான் குறிப்பிடுவார். அவ்வகையில் சவூதி செல்வதற்காய் பணத்தைக் கட்டிய ஒரு இளைஞன் மாலைதீவில் விடுபட்ட துயரக்கதையை அவரது சகோதரி சொல்லியழுதார்.

தம் கஸ்டங்களிலிருந்து விடுபட ஒரே வழி வெளியூர் செல்வதுதான் என ஆயிரக்கணக்காய் எண்ணும் இளைஞர்கள் கொழும்பில் உள்ளார்கள். அதற்கேற்றாற் போல எங்கும் ஏஜண்டுகள், தரமான மலிவான விலைகளில் அனுப்புவதற்காய் காத்திருப்பார்கள்.

சவூதியில் பாரம்தூக்கி ஓட்டும் வேலை, நல்ல சம்பளம் என வலியுறுத்தி கூறினர். நம்பினான். கடன் பட்டும் பொருட்களை விற்றும் காசை சேர்த்தபோது முதலில் முப்பதாயிரம் மட்டுமே கட்ட வேண்டும் பின்பு மற்றைய பணத்தை கட்டலாம் என்றார். என் சகோதரனும் அவருடன் மூன்று இளம் நண்பர்களும் சவூதி செல்வதற்காய் பணத்தை கடன்பட்டே கட்டினர்கள். நாட்கள் நகர்ந்தன ஆனால் மூன்று மாதத்தில் அவர்களுக்கு டிக்கெட் எடுத்து கொடுக்கப்பட்டது.

சவூதி செல்லும் ஆனந்தத்தில் என் சகோதரனும் அவனது நண்பர்களும் மகிழ்ச்சியாயிருந்தனர். அங்கு போய் ரோட் கூட்டினாலும் பரவாயில்லை, நிறைய உழைக்கலாம் என நினைத்தனர். குடும்பத்தினருக்கும் மகிழ்ச்சி. எத்தனை நாட்களுக்குத்தான் வேலையில்லாமல் வீட்டிலிருப்பார்கள் என வெளியூர் செல்லும் தங்கள் மகன்மார் மீதும் மேலும் அன்பு கூடியது.

ஏஜண்ட் வந்து கூட்டிப்போனார். விமான நிலையத்திற்கு குடும்பத்தினர் கண்ணீருடன் வழியனுப்பினர். அவ்வளவு உடைகள் தேவையில்லை, ஒரு மாதத்திற்கு தேவையான உடைகள் போதும். பின்பு அங்கு வாங்கிக் கொள்ளலாம் தானே. டூட்பேஸ்ட், பிரஸ் துவாய், சில ஆடைகள் இவற்றை மட்டுமே எடுத்துக்கொண்டு அவர்கள் பயணமானார்கள். கண்ணீருடன் குடும்பத்தினரிடம் விடைபெற்று எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்பார்த்து அந்த ஏஜண்டுடன் விமானநிலையத்தை அடைந்தார்கள்.

விமான நிலையத்தில் அவர்களுக்காக ஏஜண்ட ஓடித்திரிந்தார். அவரைப் பார்க்க பாவமாயிருந்ததாம். அங்கு போய் இறங்கியவுடன் உங்கள் பெயரை ஒரு துண்டிலே எழுதிக் கொண்டு விமான நிலையத்தில் நிற்கவேண்டும், உங்களை வந்து உங்கள் பொஸ் அழைத்துச் செல்வார் என சொன்னாராம். நம்பிக்கையும், அச்சமும், நண்பர்கள் மூவர் இருக்கின்றார்கள் என்றதும் என் சகோதரனும் சற்று தெம்புடன் பயணமானான்.

★ ★ ★

அவர்கள் சென்று இரண்டு வாரமாகிவிட்டது எந்த கடிதமும் காணாததைக் கண்டு குடும்பத்தினர் கலங்கிப்போய் நின்றனர். ஏஜண்டை தேடிப்போய் கேட்ட போது எழுதுவார்கள், வேலை அதிகமோ என்னவோ என்றாராம். நாட்கள் ஓடி மறைய ஒரு மாதத்திற்கு பின்பு என் சகோதரன் வந்து இறங்கினர். கறுத்து வாடி வேதனையிலும், விரக்தியிலும், அவன் வாடிப்போயிருந்தான். சவூதி செல்லும் விமானம் அல்ல, அது ஏதோ ஒரு தீவில் அந்த விமானம் இறக்கப்பட்டதாம். அங்கிருந்து கெஞ்சி கூத்தாடி விமான நிலையத்தில் கதைத்து தன்னை திருப்பி இலங்கைக்கே அனுப்பும்படி கெஞ்சி அழுதிருக்கிறன். ஒரு மாத காலம் அடைத்து வைத்திருக்கிறார்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நண்பர்களைக்கூட பிரித்து வேறு வேருக அடைத்த வைத்திருக்கிருர்கள். நண்பர்கள் என்ன ஆனுர்கள், அவர்கள் எங்கே என்றே தனக்கு தெரியவில்லையென அழுதான். அதற்கான சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டபோது ஏஜண்டை பொலிசார் கைது செய்தனர். அவர் இப்போது ஜெயிலுக்குள் இருக்கின்ருர். ஆனுல் என் சகோதரனுடன் சென்ற நண்பர்கள் என்னவானுர்கள் என்று இன்னும் தெரியவில்லை.

அந்த குடும்பத்தினர் என் சகோதரனிடமே கேட்டு அழுகின்றனர். அவர்களுக்கு எவ்வளவு விளக்கமாக கூறியும் புரியவைக்க முடியவில்லை "ஒன்ருகத் தானே தம்பி போனீர்கள், எங்கு விட்டு வந்தீர்கள்" என தாய்மார் கதறியழுகின்ருர்களாம். "ஏன் அவர்களை நீங்கள் கூட்டி வரவில்லை"யென அழுகின்ருர்களாம், எவ்வளவு படித்திருந்தும் என்ன செய்ய முடியும். இதை விதி என்பதா அல்லது சதி என்பதா என புரியவில்லை. ஒருவரை நாம் நம்பி விடுகின்ருேம். இந்த பயணங்களில் யாரை நாம் குறைசொல்வது, திட்டமிட்டு செயல்படுகின்ருர்களா? ஏமாற்றவேண்டும் என திட்டமிட்டு ஏமாற்றுகின்ருர்களா? வாழ்க்கையை மட்டுமா தொலைக்கின்ருேம். உயிர்களுக்கு என்ன நடந்தது என்று கூட தெரியாமல் தவிக்கும் நிலைமை.. இதற்கு காரணம் என்ன? ஒரு பொறுப்பானவரிடம், நம்பிக்கையானவரிடம் நாம் எமது பணத்தையும், பிள்ளைகளையும் ஒப்படைக்கின்ருேமா என சிந்திக்க தவறிவிடுகின்ருேம், கஸ்டங்கள் கண்ணை மறைத்து விடுகின்றன. பட்ட கடன்களால் எப்படியாவது இந்த நாட்டை விட்டு போய்விடவேண்டும் என துடிக்கும் இளைஞர்கள் பேச்சு திறனுனவர்களிடம் ஏமாறி விடுகின்ருர்கள். திக்குதெரியாத காட்டில் கொண்டுபோய் விடுவது போல திசைமாறி இறக்கி விடுகின்ருர்கள். அங்கிருந்து எப்படி வரமுடியும்? முன்பொரு முறை பத்திரிகையில் பார்த்த ஞாபகம் ஒரு ஏஜன்சி நிறுவனம்.. அதற்காக பல நூற்றுக்கணக்கானவர் காசு கட்டியிருந்தார்களாம். சவூதி செல்வதற்காய்! ஆனுல் பல மாதங்களுக்கு பின் அந்த நிறுவனம் மூடப்பட்டு விட்டதாம். அந்த நிறுவனத்தில் இருந்தவர்கள் தலைமறைவாகிவிட்டார்களாம். கொழும்பிலே வைத்து ஏமாற்றிவிட்டதால் நம் நாட்டிலே துயரப்பட்டுக் கொண்டு இருந்திருக்கலாம், இன்னெரு இடம் தெரியாத மண்ணில் அபலைகளாக வாழவேண்டிய நிர்ப்பந்தம் இல்லாமல் போனது.

நம்பிக்கை இன்றி வாழ்வு இல்லை. ஆனுல் கொஞ்சம் ஆழ்ந்து சிந்தித்தால் பல பிரச்சனைகளைத் தவிர்த்துக் கொள்ளலாமே.

---

*தொடர்நாடகம்*

# கறை படிந்த கைகள்

## ஜீன் போல் சாத்ரே

"நீங்கள் இருவரும் அமர்ந்து பேசலாம்.
"கேட்டதற்கு நன்றி ஆனுல் நாம் இருக்கப் போவதில்லை"
"பரவாயில்லை"
"நீங்கள் ...அருந்துவதற்கு ஏதாவது தரவும் கூடாதா?"
"பரவாயில்லை நாம் எமது கடமையில் இருக்கும் போது ஒன்றும் குடிக்க கூடாது."
"நீங்கள் கடமையிலா இப்போது இருக்கின்றீர்கள்"
"நாங்கள் எப்போதுமே கடமையில் தான் இருப்போம்"

ஜெசீக்கா: நான் உன்னை நம்புகிறேன். ஏன் இந்த விஷயத்தை முதலிலே எனக்கு சொல்லவில்லை?

ஹிகோ: நான் சொல்லியிருந்தால் நீ என்னுடன் வந்திருக்க மாட்டாயோ என நான் பயந்தேன்.

ஜெசீக்கா: நான் ஏன் மறுக்க வேண்டும்? மண்டையில் போடும் வேலை ஆண்களுடையது அதற்கும் எனக்கும் சம்பந்தமில்லை.

ஹிகோ: நான் சொன்ன விடயம் பகிடியல்ல ஹோடரர் பயங்கரமான ஆள். அவனை லேசில கொல்லமுடியாது.

ஜெசீக்கா: அப்ப அவனுக்கு குளோரபோம் கொடுத்து மயக்கி பின் அவனை நீ ஒரு பீரங்கியின் வாயில் கட்டலாம்.

ஹிகோ: ஜெசீக்கா இந்த விஷயத்தில் நான் சீரியஸசாக இருக்கிறேன்

ஜெசீக்கா: நானும் சீரியஸ்தான்.

ஹிகோ: நீ இன்னமும் சீரியஸ் மாதிரி விளையாடிக் கொண்டு இருக்கின்ருய்.

ஜெசீக்கா: இல்லை. நீ தான் அதைச் செய்கின்ருய்

ஹிகோ: இப்படி நாங்கள் கதைத்துக்கொண்டு இருக்கமுடியாது. (கதவில் யாரோ தட்டும் சத்தம்) உள்ளே வரலாம் (ஹிகோ குரல் கொடுக்கிருன்.)

★ ★ ★

ஸ்லிக்கும் ஜோர்ஜும் சிரித்தபடி உள்ளே வருகின்ருர்கள் அவர்கள் கைகளில் சப் மெஷின் துப்பாக்கி. இடுப்பில் ரிவால்வரும் இருக்கின்றன. அறையில் ஒரு கணம் மௌனம்)

ஜோர்ஜ்: நாங்கள் சும்மா வந்தோம்.

ஹிகோ: நல்லது

ஜோர்ஜ்: உன் வீட்டை அடுக்குவதில் உங்களுக்கு உதவலாம் என வந்தோம்.

ஹிகோ: என்ன மாதிரியான உதவி?

ஜோர்ஜ்: உங்கள் சாமான்களை நாங்கள் அவிழ்த்து அடுக்கலாம்.

ஜெசீக்கா: மிக்க நன்றி ஆனுல் அதை நாங்களே செய்து கொள்வோம்

ஜோர்ஜ்: (தூரத்தில் கண்ட மாதிரி எறியப்பட்டிருந்த பெண்களின் உடைகளைக் காட்டி) அவை மடித்து அடுக்கப்பட வேண்டியவை

ஸ்லிக்ஸ்: நாம் நாலுபேருமாக சேர்ந்து அடுக்கினுல் கெதியென வேலைகளைச் செய்யலாம்.

ஜெசீக்கா: அப்படியா?

ஸ்லிக்ஸ்: (சில உடைகளை கையில் எடுத்து) இதனை நடுவில் மடித்து வைக்கப்பட வேண்டியவை என்ன?

ஜெசீக்கா: ஆமாம், ஆனுல் நீர் அதைவிட கொஞ்சம் கஷ்டமான, பாரமான வேலைகளைச் செய்யலாம்.

ஜோர்ஜ்: ஸ்லிக்ஸ்! அந்த

**தமிழில்-நேசன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உடைகளுடன் விளையாடாதே அவை உனக்கு வேறு எண்ணங்களைத் தரலாம். ஜெசீக்கா எங்களை மன்னிக்க வேண்டும் கடந்த ஆறுமாத காலமாக தங்களுக்கு ஒரு பெண்பிள்ளையையும் பார்க்க கிடைக்கவில்லை.

ஸ்லிக்ஸ்: அவர்களின் உடல் அவர்கள் எவ்வாறு அடுக்கப்பட்டிருக்கும் என்பது கூட எனக்கு மறந்து விட்டது (அவர்கள் ஜெசீக்காவை ஆவலுடன் நோக்குகின்றார்கள்)

ஜெசீக்கா: இப்ப அவை உங்களுக்கு ஞாபகம் வருகின்றதா?

ஜோர்ஜ்: கொஞ்சம் ஞாபகம் வருகின்றது.

ஜெசீக்கா: இங்குள்ள கிராமத்தில் ஒரு பெண்களும் இல்லையா?

ஸ்லீக்ஸ்: இருக்கின்றார்கள் ஆனால் நாம் வெளியே போவதில்லை.

ஜோர்ஜ்: இங்கு முன்பு இருந்த செக்ரட்டரி இரவில் மதிலேறி பாய்ந்து வெளியில் செல்வது வழக்கம். அதன் விளைவு அவரது தலையை தாம் ஒரு நாள் ஒரு குளத்தின் அருகே கண்டெடுக்க வேண்டிய அவசியம் ஏறபட்டது. அதனால் தான் எங்களுடையை பெரியவர் (ஹோடரர்) இனிவரும் செக்ரட்டரி திருமணம் செய்வதனுக இருக்க வேண்டும் எனவும் கூடவே தேவைகள் வீட்டுக்குள்ளேயே பூர்த்தியாக்கப் படலாம் என்னும் தீர்மானித்தார்.

ஜெசீக்கா: அது அவரின் தந்திரமான ஓர் முடிவு.

ஸ்லீக்ஸ்: ஆனால் அவர் எங்கள் பெண்களை கொண்டு வர எதிர்க்கின்றார்.

ஜெசீக்கா: உண்மையாகவா ஏன்?

ஸ்லீக்ஸ்: நாங்கள் வீரியத்துடன் இருக்க வேண்டும் என அவர் சொல்கின்றார்.

ஜெசீக்கா: அது அவரின் தந்திரமான ஓர் முடிவு

ஹிகோ: ஜெசீக்கா இவர்கள் ஹோடரின் மெய்காவலர்கள்.

ஜெசீக்கா: நான் அதை முதலிலே சந்தேகப்பட்டேன்.

ஸ்லிக்ஸ்: (தனது சன்மெஷின் கன்னை சுட்டிக் காட்டியபடி) இது அந்த உண்மையைச் சொல்லியிருக்கும்.

ஜெசீக்கா: ஆமாம் அது கூடத்தான்.

ஜோர்ஜ்: ஆனால் எமது தொழிலே மெய்காவல் என தவறுக கொள்ளக்கூடாது. ஏனெனில் நான் உண்மையில் ஓர் பைப் திருத்துபவன். ஆனால் எமது கட்சிக்கு இந்த மேலதிக வேலையும் செய்கிறேன்.

ஸ்லிக்ஸ்: (யசிக்காவைப் பார்த்தபடி) நீங்கள் எங்களைக் கண்டு பயப்படுகின்றீர்களா?

ஜெசீக்கா: அதற்கு எதிர்மாறுகவே தான் இருக்கின்றேன். எனக்கு உங்களில் பயம் இல்லை ஆனால் உங்களை ஆயுதங்கள் இல்லாது பார்க்கவே விரும்புகின்றேன் ஆயுதங்களை அந்த மூலையில் போடுங்கள்.

"எனக்கு உங்களில் பயம் இல்லை ஆனல் உங்களை ஆயுதங்கள் இல்லாது பார்க்கவே விரும்புகின்றேன் ஆயுதங்களை அந்த மூலையில் போடுங்கள்."
"அதை எங்களால் செய்ய முடியாது அது எங்களுக்கே தரப்பட்ட கட்டளைக்கு எதிரானது"
"நீங்கள் படுக்கும் போது அவற்றை ஒரு புறத்தில் வைக்கவேண்டி வரும்தானே?"
"இல்லை அம்மணி"
"இல்லை?"
"இல்லை. இல்லை"
"அவர்கள் உத்தரவுகளை இறுக்கமாக கடைப்பிடிப்பவர்கள் உதாரணமாக நான் ஹோடரரை சந்திக்கும் போது அவர்கள் துப்பாக்கிகளுடன் எப்போதும் என்னை குறி பார்த்தபடி இருந்தார்கள்."
"அதை பெரிதாக எடுக்கவேண்டாம்"
"அந்த நேரங்களில் ஹிகோ ஒரு பிழையாக அசைவு செய்திருந்தாரெனில் நீ இப்போது ஓர் விதவையாக இருந்திருப்பாய்"

ஜோர்ஜ்: அதை எங்களால் செய்ய முடியாது

ஸ்லிக்ஸ்: அது எங்களுக்கே தரப்பட்ட கட்டளைக்கு எதிரானது

ஜெசீக்கா: நீங்கள் படுக்கும் போது அவற்றை ஒரு புறத்தில் வைக்கவேண்டி வரும்தானே?

ஜோர்ஜ்: இல்லை அம்மணி

ஜெசீக்கா: இல்லை?

ஸ்லிக்ஸ்: இல்லை. இல்லை

ஹிகோ: அவர்கள் உத்தரவுகளை இறுக்கமாக கடைப்பிடிப்பவர்கள் உதாரணமாக நான் ஹோடரரை சந்திக்கும் போது அவர்கள் துப்பாக்கிகளுடன் எப்போதும் என்னை குறி பார்த்தபடி இருந்தார்கள்.

ஜோர்ஜ்: (சிரித்தபடி) அதை பெரிதாக எடுக்கவேண்டாம்

ஸ்லிக்ஸ்: (சிரித்தபடி) அந்த நேரங்களில் ஹிகோ ஒரு பிழையாக அசைவு செய்திருந்தாரெனில் நீ இப்போது ஓர் விதவையாக இருந்திருப்பாய்

(எல்லோரும் சிரிக்கின்றார்கள்)

ஜெசீக்கா: உங்கட தலைவர் ஒரு விஷயத்தில் மிகப் பயந்த பேர்வழி போல இருக்கின்றது.

ஸ்லிக்ஸ்: அவர் பயந்த பேர் வழி இல்லை. ஆனால் அவர் சும்மா கொலை செய்யப்படுவதை விரும்பவில்லை.

ஜெசீக்கா: யாரும் அவரை ஏன் கொல்ல வேண்டும்?

ஸ்லிக்ஸ்: எனக்குத் தெரியாது. ஆனால் சிலர் அவரைக் கொல்ல விரும்புகின்றார்கள் இரண்டு கிழமைகளுக்கு முன் அவரது நண்பர்கள் சிலர் இங்கு வந்து அவரை கவனமாக இருக்கும்படி எச்சரிக்கை செய்து இருக்கின்றார்கள்.

ஜெசீக்கா: அது ஒரு சுவாரசியமான விஷயம் தான்.

ஸ்லிக்ஸ்: உங்களுக்கு அது பரபரப்பைத் தரக்கூடிய விஷயம் இல்லை ஆனால் இவ்வாறுன விஷயங்கள் பற்றி எப்போது கவனமாக அவதானத்துடன் இருந்தல் வேண்டும். (அதே நேரத்தில் ஜோர்ஜ் அறையை நோட்டம் விடுகின்றுன்)

ஜெசீக்கா: நீங்கள் இருவரும் அமர்ந்து பேசலாம்.

ஸ்லிக்ஸ்: கேட்டதற்கு நன்றி ஆனல் நாம் இருக்கப் போவதில்லை

ஜோர்ஜ்: பரவாயில்லை

ஜெசீக்கா: நீங்கள் ...அருந்துவதற்கு ஏதாவது தரவும் கூடாதா?

ஸ்லிக்ஸ்: பரவாயில்லை நாம் எமது கடமையில் இருக்கும் போது ஒன்றும் குடிக்க கூடாது.

ஹிகோ: நீங்கள் கடமையிலா இப்போது இருக்கின்றீர்கள்

ஜோர்ஜ்: நாங்கள் எப்போதுமே கடமையில் தான் இருப்போம்

ஸ்லிக்ஸ்: ஒரு விதத்தில் பார்த்தால் மெய்காவலன் ஒரு சந்நியாசிதான்

ஹிகோ: ஆனல் நான் இப்போது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கடமையில் இல்லே. நான் இப்ப என்னுடைய மனேவியுடன் வீட்டில் இருக்கின்றேன். ஜெசீக்கா நாங்கள் அப்ப அமர்வோம் (இருவரும் இருக்கின்றனர்)

ஸ்லிக்ஸ்: (யன்னல்களே நோக்கியபடி) அருமையான காட்சி

ஜோர்ஜ் : இந்த இடம் மிகவும் நல்ல இடம்

ஸ்லிக்ஸ்: கூடவே அமைதியானது.

ஜோர்ஜ் : நீங்கள் உங்கள் கட்டிலேப் பார்த்தீர்களா? அது 3 பேருக்கு போதுமானது.

ஸ்லிக்ஸ்: உதாரணமாக புதிதாக திருமணம் செய்தவர்கள் கட்டியணேத்தபடி படுத்தால் இரு ஜோடிகள் ஒன்ருகவே இநத கட்டிலில் படுக்கலாம் ஆக நாலுபேர் இநத கட்டிலில் படுக்கலாம்.

ஜோர்ஜ்: இப்படி, ஒரு ஜோடிகள் படுக்கும் கட்டிலில் பல இடம் வீணுகும் போது பல மனிதர்கள் தரையில் படுத்து தூங்குகின்ருர்கள்

ஸ்லிக்ஸ்: உன் வாயை மூடு. இது இரவில் எனக்கு கனவாக வரப்போகின்றது.

ஜெசீக்கா: நீங்கள் கட்டில்களில் உறங்குவதில்லேயா?

ஸ்லிக்ஸ்: ( நீண்ட மூச்சை உள்ளெடுத்தபடி) ஜோர்ஜ்

ஜெசீக்கா: (சிரித்தபடி) இல்லே

ஸ்லிக்ஸ்: எங்களிடம் கட்டில் இருக்கின்றதா என ஜெசீக்கா கேட்கின்ருள்.

ஜோர்ஜ்: (ஸ்லிக்ஸ் சை சுட்டிக்காட்டியபடி) அவன் ஆபிஸின் ஓர் மூலேயில் பாயில் படுப்பான் நான் பெரியவரின் அறைக்குவெளியே உள்ள மண்டபத்தில் படுப்பேன்.

ஜெசிக்கா: ஆகவே அது சுகமாக படுக்கக்கூடிய இடமல்ல

ஜோர்ஜ்: உனது கணவன் கொஞ்சம் மென்மையான பேர்வழி என்பதால் அவ்வாருன படுக்கைகள் அவருக்குப் பொருந்தாது. ஆனுல் நாங்கள் அதற்குப் பழகிப்போனவர்கள். ஆகப்பெரிய பிரச்சனே என்னவென்ருல் எங்களுக்கு ஓர் அறைகூட இல்லே. இங்குள்ள பூந்தோட்டம் சுத்தமாக இல்லே என்பதால் நாம் பெரும்பான்மை நேரத்தை மண்டபத்தில் செலவழிப்போம். (அவன் தலேயைக் குனிந்து அங்குள்ள கட்டிலுக்கு கீழ் சோதனே இடுகின்ருன்)

**தொடரும்**

# அவன் இறக்கவில்லே, கொல்லப்பட்டான்.

கருத்துக்களே விமர்சனங்களுக்கூடாக தீர்த்துக் கொள்வதே நாகரிகமும் பண்பாடும் மனித விழுமியமுமாகும். போராட்ட முன்னேடியும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்தவரும் பதிப்பாளருமான சபாரத்தினம் சபாலிங்கம் அவர்கள் பாரிஸ் நகரில் படுகொலே செய்யப்பட்டதைக் கண்டித்து, கடந்த சனிக்கிழமை தமிழர் வகைதுறை வளநிலேயத்தினுல் தேடக மேல் தளத்தில் நடத்தப்பட்ட கண்டனக் கூட்டத்தில் தலேமையுரையாற்றிய பா.அ.ஜயகரன் மேற்கண்டவாறு தெரிவித்தார். 'சுதந்திரம் என்பது மாற்றுக் கருத்துச் சொல்லும் சுதந்திரமாகும். மாற்றுக்கருத்துக்கு தீர்வு படுகொலேயாகாது. இன்றைக்கு இந்தப் படுகொலே தமிழ் மக்களின் கருத்துச் சுதந்திரத்துக்கு விழுந்த பேரிடியாகும். இவரது கொலேயை அனேத்து தமிழ் மக்களும் கண்டிக்க வேண்டும். குறிப்பாக மனித உரிமை அமைப்புகள், எழுத்தாளர்கள், இலக்கிய கர்த்தாக்கள், புத்திஜீவிகள் ஆகியோர் இந்தக் கொலேக்கு கண்டனம் தெரிவிப்பதன் மூலம் எம் மக்கள் மத்தியில் இப்படுகொலேகளே மேலும் இடம் பெருத வகையில் ஆவன செய்ய வேண்டும்' என்று அவர் மேலுமு குறிப்பிட்டார்.

சபாலிங்கத்துடன் நெருங்கிப் பழகியவரான செல்வம் பேசும் போது 'தொடர்ந்து பல நூல்களே வெளியிட வேண்டும் என்ற ஆவல் கொண்ட சபாலிங்கம் இதுவரை பத்துக்கும் மேற்பட்ட நூல்களே வெளியிட்டார். அவற்றுள் ஒன்று புத்தளம் பற்றிய சரித்திர நூல். இவரது இழப்பு புலம் பெயர்ந்த மக்களின் மத்தியில் ஒரு பெரிய இழப்பு' என்று கூறியதுடன் சபாலிங்கம் தனது வெளியீடுகளில் முன்னுரைகளில் குறிப்பிட்ட விடயங்களேயும் வாசித்தார்.

மலேயன்பன் பேசும் போது 'பேனு முனே வலிமை இழந்து விட்டது, துப்பாக்கிகளின் கையில் தான் வலிமை இருக்கிறது' என்று பேசியதுடன் யாழ்ப்பாணத்தில் தனது இலக்கிய முயற்சிகள் குறித்து அறிந்த சபாலிங்கம் அது குறித்து தொடர்பு கொண்ட விடயங்கள் பற்றியும் விபரித்தார்.

அடுத்து பேசிய சிவானந்தன் புலிகளின் கருத்து சுதந்திர மறுப்பு பற்றியும் எழுத்து சுதந்திரத்தை அவர்கள் அடக்கும் விதங்கள் பற்றியும் முன்பு தனது பத்திரிகை அனுபவங்களே மேற்கோள் காட்டி உரையாற்றினுர்.

சபாவசந்தன் பேசும் போது இவ்வாருன கண்டனக் கூட்டங்கள் மூலம் மக்கள் எழுச்சி பெற வேண்டும் என்று தெரிவித்தார். பாமதி, சபேசன் ஆகியோரும் கூட்டத்தில் உரையாற்றினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## சத்திய வசனம் வானொலி நிகழ்ச்சி

மே மாதம் முதல்
கீதவாணி 88.9 எப்.எம் அலைவரிசையில்
கொழும்பு சத்திய வசனம் வழங்கும் நற்சிந்தனையைக்
கேட்டு தேவ ஆசீர்வாதத்தை பெறுங்கள்

ஞாயிறு காலை 6.15 மணி தோறும்

சஞ்சிகை, தியான நூல், இலவச தேவ பாடப் பயிற்சி,
பாடல்கள், செய்திகள், ஆவிக்குரிய ஆலோசனைகள்

செய்தியாளர்கள்
டாக்டர் புஷ்பராஜ், கலாநிதி கமலேசன்
சுவிசேசகர் பிரகாஷ் இயேசுவடியான்
பாகவதர் தேவநாயகம் சாஸ்திரியார்

தொடர்புகளுக்கு;
ராஜன் (416) 754 3041
கீதவாணி (416) 447 9031

இலங்கையில்
தொடர்புகளுக்கு
த.பெ.இல 1012, கொழும்பு,
தொலைபேசி;695441
தொலைநகல்;698843

# ATLANTIC AUTO CLINIC LTD

**1960 LAWRENCE AVE EAST**
**755 8550 -CALL MIKE or RAJAN**





**Car Certification**
**29.99**


Exhaust,starter,Shocks,Altenater,Clutch
Radio,Transmission,Air Conditon,
General Repair
பல வருட அனுபவம் மிக்கவர்கள்

| | |
|---|---|
| 4WHEEL ALLIGNMENT | 44.99 |
| BREAK SHOES | 29.99 |
| BREAK PADS | 24.99 |
| TUNE UP FROM | 34.99 |
| ENGINE SHAMPOO | 24.99 |
| FILTER 4 CYL | 16.99 |

உங்கள் வாகனங்களை
குறைந்த செலவில் சிறந்த முறையில்
கம்பியூட்டர் இணைப்புகளுடன்
திருத்திக் கொள்வதற்கு நகரில்
ஒரு சிறந்த ஸ்தாபனம்

Fuel Injections, Electronic
and Electric
திருத்துவதில் பல வருடம்
அனுபவம் உள்ளவர்கள்


We use
Quaker
State Oil



www.tamilarangam.net

# GOOD BYE BALDNESS

## முடி உதிர்பவர்களுக்கு ஒரு நற்செய்தி



ஒரு சிறு குமிழ்
உங்கள் கேசத்தை
வளரச் செய்கிறது

பரீட்சித்துப் பாருங்கள்
Try First


பலர் இச்சிகிச்சை மூலம் பயன் அடைந்துள்ளனர்

239 Carlton St
Toronto, Ont
Tel:922-0478

---


## சிறந்ததையே தெரிவு செய்யுங்கள்!

## Dr.ROBERT VITAMOL, BETTER THAN VIVA HORLICKS




VITAMOL சத்துள்ளதாகவும் மிகுந்த சுவையுள்ளதாகவும் இருப்பதால் விவா ஹோர்லிக்ஸை விட விட்டாமோலை பலர் விரும்புகின்றனர். விட்டாமோல் டாக்டர்.றொபேட்டினால் தயாரிக்கப் பட்ட சத்துணவுப் பானமாகும். விட்டமின்கள், இரும்புச் சத்து, கல்சியம், தேன் கொண்ட ஒரே சத்துணவுப் பானம் இது. உடலின் சகல பகுதிகளுக்கும் தேவையான உணவு இது. உதாரணமாக கல்சியம் எலும்புக்கு அவசியமானது. விட்டமின்களும் இரும்புச் சத்தும் இரத்தக் குறைபாட்டைத் தடுக்க அவசியமானது. எனவே சிறந்ததைக் கொண்டு உங்கள் உடலுக்கு உணவளியுங்கள். ஒவ்வொரு போத்தல் விட்டாமோலிலும் அதிகம் பெறுங்கள். தரம், அளவு, விலை என்பவற்றை ஒப்பிடுங்கள். தரத்திலும் பெறுமதியிலும் சிறந்த விட்டாமோலைக் கேட்டு வாங்குங்கள். விட்டாமோல் குழந்தைகளுக்கும் வயதானவர்களுக்கும் பரிந்துரை செய்யப்படுகிறது.

### NERVOGEN NERVE FOOD





உடலின் கடுமையாக உழைக்கும் பகுதிகளான மூளை, சிறுநீரகம், ஈரல், இதயம் போன்றவற்றிற்கு சிறந்தது. சனட்டோஜனை விட சிறந்த புரதத்தைக் கொண்டிருப்பதுடன் சுவையானதும் கூட. சிறந்த மன வளர்ச்சிக்கு கேட்டு வாங்குங்கள்.

அமெரிக்காவிலும், கனடாவிலும் மேற்கிந்திய தீவுகளிலும் கிடைக்கும்.


Universal Foods & Merchandise Co,
(416) 535-3118, Toronto, Canada

### CHATAK: CURRY EXCELLENT




Chatak Madras Curry Powder இன்றைய நிலையில் சிறந்த கறி பவுடராகும். 475 வருட காலமாக வரும் பாரம்பரியப்படி தயாரிக்கப்பட்டது. மற்ற கறி பவுடர்களை விடச் சிறந்தது. Chatak Meat Seasoning, Fish Seasoning, Tandoori Chicken Mix போன்றனவும் கிடைக்கும்.

### DR.ROBERT'S GLUCOSE




குளுக்கோஸ் மரக்கறிகளிலும்
பழங்களிலும் இயற்கையாகக்
கிடைக்கிறது. டாக்டர் றொபேட்டின்
குளுக்கோஸ் இயற்கையான
மூலப்பொருட்களிலிருந்து அதிஉயர் தரத்திற்கு
தூய்மைப்படுத்திப் பெறப்பட்டது. இது உடனடியான சக்தி
தேவைகளுக்குரியது. மூளை, இரத்தம், ஈரல், தசைகள்
போன்றவற்றிற்கு சிறந்தது. பால் குடிக்கும் குழந்தைகளுக்கு
வயதானவர்களுக்கும் சிறந்தது, ஏனெனில் இது உடலினு
உடனடியாக உறுஞ்சப்படுகிறது

அன்பளிப்புப் பொருட்கள், பொம்மைகள், இலங்கை உணவுப் பொருட்கள், மேற்குறிப்பிட்ட பொருட்கள் அனைத்திற்கும் தொடர்பு கொள்ளுங்கள்

BUDGET SUPERSAVINGS DISCOUNT
1340 Queen st west (East of lansdowne)
Tel:(416) 5370394

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஏ. ஆர். கே மார்க்கட்

**31-35 St.Dennis Dr**
**(Don Mills/Eglinton)**

**(416) 421 3429**

இலங்கை இந்திய
உணவுப் பொருட்கள்,
பால் பழங்கள், உடன் மரக்கறி
வகைகள், இறைச்சி, மீன்,
கடலுணவு வகைகள்,
கனடிய உணவுப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில் ...

வருமான வரிப் பத்திரங்களை பூர்த்தி செய்து
கொள்ள தொடர்பு கொள்ளுங்கள்

தமிழ், ஹிந்தி வீடியோப் படங்களின்
ஒரிஜினல் பிரதிகளை வாடகைக்கும்
விற்பனைக்கும் பெறலாம்
CD, Audio **மலிவு விலையில்**

# A.R. K MARKET



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜே.வி.பி.யின் அரசியலின் சமூக பொருளாதார அரசியல் பின்னணி

உழைக்கும் மக்கள், மாணவர்கள், புத்திஜீவிகள் தமது உரிமைகளை வென்றெடுப்பதற்கும், அவற்றைப் பாதுகாக்கவும் அமைதியாகவும் ஜனநாயக ரீதியாகவும் ஆர்ப்பாட்டம் செய்வதற்கு, போராடுவதற்கு இருந்த உரிமைகள் அரசாங்கத்தால் அப்பட்டமாக பறிக்கப்பட்டன. இதன் காரணமாக ஒரு புறம் தலைமைகள் குறித்து விரக்தியும் மறுபுறம் "அவர்களைக் கொன்று போட்டு நாமும் சாவதைத் தவிர இப்பொழுது செய்வதற்கு வேறு என்ன தான் இருக்கு?" என்னும் மனோபாவமும் வளரத் தொடங்கியது.

இளைஞர்கள் மாணவர்கள் மத்தியிலேயே இம் மனோபாவம் கூடுதலாக வளரத் தொடங்கியது. தலைமையின் பெலவீனத்தின்போது அரசாங்கத்தின் கடுமையான அடக்கு முறைகள் காரணமாக தொழிலாளர் வர்க்க இயக்கம் பின்னடைவுக்கு உள்ளான போதிலும் மாணவர் இயக்கத்தின் நிலமை அவ்வாறு இருக்கவில்லை. கல்வி வெட்டுக்கும் மாணவர் மீதான அடக்கு முறைக்கும் எதிரான மாணவர்கள் தொடர்ச்சியாகப் போராடினர். அரசாங்கத்தின் அடக்குமுறைச் சுபாவம் அதிகரிக்க அதிகரிக்க மாணவர்களின் போராட்டத் தன்மையும் உயர்ந்து சென்றது. அவர்களது இளமைச் சுபாவம் அவர்களை மிகுந்த போராட்டத்தன்மை கொண்ட நிலமைக்கு மாற்றியது. அடக்கு முறைக்கு எதிராக விரைவாக பதில் நடவடிக்கைகளை மேற்கொள்வது அவர்களது உள்ளார்ந்த இலட்சணமாகும். ஆதலால் அரசாங்கத்தின் அடக்கு ஒடுக்கு முறை நடவடிக்கைகளைக் கண்டு மிகுந்த கொதிப்புக்குள்ளானதும் மாணவர்களேயாகும். விசேடமாக பல்கலைக்கழக மாணவர்களாகும். அரசாங்கத்தின் அடக்கு முறைக்கு எதிராக போராடுவது மட்டுமன்றி அடக்கும் ஆட்சி முறையை அகற்றவும் வேண்டும் என்னும் உணர்வு ஏனைய அனைவரையும் விட மாணவர் மத்தியிலேயே வளர்ந்து வந்தது.

அரசாங்கத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட அடக்கு முறை நடவடிக்கைகள் காரணமாக சகல மக்கள் பகுதியினர் மத்தியிலும் அரசாங்கத்தின் அவ் நடவடிக்கைகளுக்கு எதிராக செயல்படக்கூடிய பிரபல்யமான ஸ்தாபனம் ஒன்றுக்கான பொருள் ரீதியான அவசியம் நிலவியது. அல்லது போனால் அவ்வாறான ஸ்தாபனம் ஒன்றின் தேவை மென்மேலும் வளர்ந்து வந்தது. இவ் அவசியத்தை மேலும் கூர்மைப் படுத்தும் இன்னுமொரு செயல்முறையும் நாட்டில் இடம் பெற்றுக் கொண்டிருந்தது.

அரசாங்கம் தனது நடவடிக்கைகளுக்கு எதிராக தோன்றிய மக்கள் போராட்டங்கள் அனைத்தையும் அடக்கு முறைக்குட்படுத்தியது மட்டுமன்றி தமது அதிகாரங்களை என்றைக்குமே வைத்திருப்பதற்காக, அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியவற்றில் தமது கட்சியினருக்கு மட்டுமே தொழில்களை வழங்கினர். யூஎன்பியைச் சாராத எவராகிலும் தொழிலைப் பெறவேண்டுமாயின் யூஎன்பியில் சேர வேண்டும். காணிக்கைகள் வழங்கவேண்டும். இளம் யுவதிகளாகவிருந்தால் அரசியல் புள்ளிகளுக்கு, அவர்களின் ஏவல் நாய்களுக்கு தமது சரீரங்களைக் கூட காணிக்கையாகச் செலுத்த நேரிட்டது. தொழிலைப் பெற்ற பின்னரும் கூட அதனைப் பாதுகாக்க வேண்டுமாயின் யூஎன்பி தொழிற்சங்கமான ஜாதிக சேவக சங்கத்தில் சேரவேண்டும். செய்வதற்கு வேறு ஏதும் இல்லாத காரணத்தால் இவ் அநியாயங்களுக்கு தலை குனிய அனேகருக்கு நேர்ந்த போதிலும் அதற்கு எதிராக உருவாகிக் கொண்டிருந்த எதிர்ப்பை கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாததாயிற்று. வெடித்துக் கிளம்புவதற்கான சந்தர்ப்பம் வரும்வரை அது மக்களது உள்ளத்துள் சிறிது சிறிதாக வளர்ந்து வந்தது இவ் அநியாயங்களால் கூடுதலாக பாதிக்கப்பட்டது இளம் சந்ததியினரேயாகும். அரசாங்கம் மக்கள் விரோத நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது அவ் அரசாங் கத்தை தமது வாக்குகள் மூலமாக பதவியிலிருந்து அகற்றுவதற்கான வாய்ப்பு நீண்ட காலமாக இந்நாட்டில் நிலவியது. ஆனால் 1977 ல் யூஎன்பி பதவிக்கு வந்த பின்னர் மக்களுக்கிருந்த அவ் உரிமை கூட பறிக்கப்பட்டது. ஆட்சியாளர் அதிகாரத்தை என்றைக்கும் தமது கையில் வைத்திருக்கவேண்டும் என்பதற்காக எதிர்கட்சியை தகர்க்கும் நடவடிக்கையையே முதலாவதாக ஆரம்பித்தனர். இதன் படி எதிர்கட்சிகளில் பிரதான கட்சியும் யூஎன்பிக்கு சவால் விடுக்கக் கூடியதுமான கட்சியை தகர்த்து நொறுக்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொண்டனர். ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவி ஸ்ரீமாவோ பண்டாரநாயக உட்பட பலரது குடியுரிமை இல்லாதொழிக்கப்பட்டனர். இதற்காக ஜே.ஆர் ஆட்சி ஜேவிபியினுடைய உதவியையும் கூட பெற்றுக் கொண்டது என்பதையும் கூறவேண்டியுள்ளது. உண்மையிலேயே இவ் இடத்தில் ஜேவிபி, ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு எதிராக சாட்சிக் கூண்டில் ஏறி யூஎன்பியுடன் கைகோர்த்துக் கொண்டது. அது மட்டுமன்றி அதன் பின்னர் யூஎன்பியின் தேவைகளுக்கு மிகவும் பொருத்தமானவாறு நாடு பூராவும் "ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பயணத்தின் முடிவு" பற்றி விரிவுரைகள் நிகழ்த்தினர். எதிர்கட்சியைத் தகர்க்கும் அரசாங்கத்தின் உபாயம் அரசாங்கம் எதிர்பார்த்ததைவிட நன்றாக வெற்றி பெற்றது. இதில் மகிமை என்னவெனில் ஸ்ரீலங்கா

*வசந்த திசாநாயக, பற்றிக்பெர்னான்டோ*
*சரத் த சில்வா, ரஞ்சித் குமார*

*தமிழாக்கம்; செ. லோகநாதன்*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சுதந்திரக்கட்சியின் பகுதியான அனுர பண்டாரநாயக, மைத்திரிபால சேனநாயக, ஸ்டான்லி திலகரத்ன, P.B.G கலுகல்ல ஜே.ஆர்.பி. சூரியப்பெரும போன்ரோர் யூஎன்பியின் இவ் உபாயம் வெற்றி பெறுவதற்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சிக்குள் இருந்து கொண்டே உதவி வழங்கியதாகும்.

இவ்வாறாக பாராளுமன்ற எதிர்கட்சியை மிகவும் பெலவீனப் படுத்திய ஜே.ஆர் ஆட்சி 1982ல் ஜனாதிபதி தேர்தலை நடாத்தி மேலும் ஆறுவருடகாலம் ஆட்சி அதிகாரத்தில் இருப்பதற்காக வழி சமைத்துக் கொண்டது. பெலவீனப்படுத்தப்பட்ட ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராக போட்டியிட்ட கொப்பேகடுவ ஜே.ஆர் ஜெயவர்த்தன வுக்கு பெரும் சவால் ஒன்றை வழங்கி தோல்வியைத் தழுவிக் கொண்டார். ஜே.ஆர் மீண்டும் பதவிக்கு வந்தது, மக்கள் நலம் என்னும் கோணத்திலிருந்து பார்க்கும் போது துர்பாக்கிய சம்பவம் ஆகும். பெலவீனப்படுத்தப்பட்டு பிளவு படுத்தப்பட்ட எதிர்க்கட்சி வேட்பாளருடன் போட்டியிட்டு ஈட்டிய வெற்றியை அதுவரை காலமும் தாம் முன்னெடுத்த அடக்குமுறை ஆட்சியை மேலும் முன்கொண்டு செல்ல கிடைத்த அனுமதிப் பத்திரமாகவே யூஎன்பி எண்ணியது. ஆனாலும் அடுத்து நடைபெறவிருந்த பொதுத் தேர்தலில் யூஎன்பி வெற்றி பெறும் என்பது நிச்சயமான போதிலும் எதிர்கட்சி பாராளுமன்றத்துள் தற்போது இருப்பதைவிட கூடுதலான பலத்தைப் பெறுவது தாம் விரும்பியவாறு செயல்படுவதற்கு தடையாக இருக்கும் என்பதை ஜே.ஆர் விளங்கியிருந்தார். ஆதலால் பாராளுமன்றத்துள் தமது பலம் குறைய இடமளிக்கக்கூடாது. தேர்தலை நடாத்தினால் இந் நோக்கத்தை நிறைவேற்றுவதும் கடினமாகும். இதற்கு ஜே.ஆரின் பரிகாரமாக அமைந்தது பொதுசன அபிப்பிராயக் கணிப்பீடு மூலமாக பாராளுமன்றத்தின் ஆயுசுகாலத்தை நீடிப்பதற்காக நடவடிக்கை எடுப்பதாகும். பொதுசன அபிப்பிராயத் கணிப்பீடு எனப்படும் மிகவும் ஜனநாயக ரீதியான செயலை, முற்றுமுழுதான ஜனநாயக விரோத நோக்கத்தை ஈடேற்றிக் கொள்வதற்காக பாவிக்க ஜே.ஆர் ஆட்சி நடவடிக்கை எடுத்தது.

இப் பொதுசன அபிப்பிராய கணிப்பீட்டில் வெற்றி பெறுவதற்காக யூஎன்பி மிகவும் துஷ்ட நடவடிக்கைகளில் இறங்கியது. கொப்பேகடுவயின் தேர்தல் பிரச்சாரத்தின் சுக்கான் இயக்கி என்று கூறக்கூடிய விஜயகுமாரணதுங்க உட்பட ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரபல அங்கத்தவர்கள் பலரை போலிச் சதிக்குற்றச் சாட்டின் கீழ் கைது செய்து தடுத்து வைத்திருந்தனர்.

பொதுசன அபிப்பிராய கணிப்பீட்டு பிரச்சார வேலைகளில் ஈடுபட இவர்களுக்கு இடமளிக்கப் படவில்லை. இப்பொதுசன அபிப்பிராய கணிப்பீட்டின்போது பாராளுமன்றத்தின் ஆயுளை நீடிப்பதற்கு எதிராக பிரச்சார வேலைகளில் ஈடுபட்டவர்கள் தமது பிரச்சாரங்களைச் சரியான முறையில் செய்வதற்கும் இடமளிக்கப்படவில்லை. அரசு அதிகாரம் பாவிக்கப்பட்டு அவ்வேலைகளுக்கு எதிராக பல்வேறு தடைகள் ஏற்படுத்தப்பட்டன. அரசு அதிகாரம் ஆட்சி, பலம் காடைத்தனம் ஆகிய மூன்றும் பாராளுமன்ற ஆயுள் காலத்தை நீடிப்பதற்கு எதிராக வாக்களிக்குமாறு கூறியவர்களுக்கு எதிராக ஈடுபடுத்தப்பட்டன.

தேர்தல் சட்டவிதிகள் அப்பட்டமாக மீறப்பட்டன. இதற்கு பொலீசாரின் உதவியும் பூரணமாக கிடைத்தது. சுருக்கமாகக் கூறுவதாயின் இந்நடவடிக்கைகளின் பங்காளிகளாகவே பொலீசார் செயல்பட்டனர். இதற்கு நல்லதொரு உதாரணம் கம்பஹாவில் இடம்பெற்ற நிகழ்ச்சியாகும். பாராளுமன்றத்தை நீடிப்பதற்கு எதிராக குடத்துக்கு வாக்களியுங்கள் எனக்கோரி "துறவிகள் குரல்" என்னும் ஸ்தாபனத்தால் அச்சடிக்கப்பட்ட பிரசுரங்கள் வினியோகிக்கப் படுவதற்கு முன்னரேயே பொலீசாரால் கைப்பற்றப்பட்டன. இந் நடவடிக்கைக்காக பொலீஸ் அத்தியட்சகராக இருந்த பிரேமதாச உடுகம்பொல ஆகும். இச் சம்பவத்திற்கு எதிராக 'துறவிகள் குரல்' ஸ்தாபனம் உயர் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது. இவ்வழக்கை விசாரித்த நீதிமன்றம் பொலீசார் சட்ட விரோதமாக செயல்பட்டுள்ளனர் எனத் தீர்ப்பு வழங்கியதோடு ரூபா பத்தாயிரம் அபராதமாக செலுத்துமாறு உடுகம்பொலவுக்கு கட்டளையிட்டது.

ஆனால் நேர்ந்தது என்ன? உடுகம்பொலவின் அபராதத் தொகையை அரசாங்கமே செலுத்தியதோடு உதவிப் பொலீஸ் அத்தியட்சகராகவிருந்த உடுகம்பொல பொலீஸ் அத்தியட்சகராக பதவி உயர்வும் பெற்றார். இவ்வாறாக நீதிமன்றத்தீர்ப்பைக்கூட பெறுமானம் அற்றதாக்கி பொலீசார் சட்டவிரோதமான செயல்களில் ஈடுபடுவதற்கும் அரசாங்கம் இடமளித்தது.

பொதுசன அபிப்பிராய கணிப்பீடு என்பது ஒரு வாக்குக் கொள்ளையாக மாறியது. இவ்வாறான கொள்ளைச் சம்பவம் இதற்குமுன் வரலாற்றில் என்றுமே இடம் பெற்றிருக்கவில்லை. வாக்குச் சாவடிக்குள் பலாத்காரமாக பிரவேசித்த அரசாங்கத்தின் காடையர்கள் கள்ள வாக்குகளை தொகை தொகையாக போட்டனர். தேர்தல் நிலையங்களில் இருந்த எதிர்க் கட்சி பிரதிநிதிகளை பலவந்தமாக துரத்தினர். இப் பொதுசன அபிப்பிராய கணிப்பீட்டில் பூரணமாக பலாத்காரம் ஊழல் மோசடிகளில் ஈடுபட்டே வெற்றி பெற்றனர். இந் நடவடிக்கை ஜனநாயரீதியான தேர்தல் தொடர்பான பொதுமக்களது நம்பிக்கைக்கு பாரதூரமான அளவு ஊறுவிளைவித்தது.

இந் நடவடிக்கை காரணமாக மக்கள் மத்தியில் விசேடமாக இளம் சந்ததியினர் மத்தியில் நம்பிக்கை இழக்கப் பண்ணியுள்ள விதத்தை, இளைஞர்கள் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை அவதானித்துள்ளது இவ் வாறாகும், "ஜனநாயக ரீதியான நிறுவனங் களையும் செயல் முறைகளையும் சீர்குலைப்பதற்காக அரசியல் அதிகாரம் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளது என்னும் வன்மையான கருத்து ஆணைக்குழு முன் தோன்றிய அனேக இளைஞர்கள் மத்தியில் நிலவியது. அவர்கள் எண்ணுவது போன்று தேர்தல் அதாவது அரசியல் அதிகாரம் எவ்வித வன்முறையும் இன்றி இன்னுமொரு கட்சியின் கைக்கு மாறுவதற்காக சமுதாயத்தில் இருந்த ஒரே ஒரு சந்தர்ப்பமாகிய தேர்தல் நடவடிக்கைகள் சீர்குலைக்கப பட்டதனாலேயே இக்கருத்து அவர்கள் மத்தியில் பிரபல்யமாக நிலவியது" (இளைஞர் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை பக்கம்2)

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ரொறன்ரோவில் யாழ்ப்பாணம்

## நாடகம்

### செல்வம்

காட்சி ஒன்று முடிவடைகிறது. திரை மூடுகின்றது.

இப்போ நாடகக்காரன் திரைக்கு முன்னல் வருகின்ருன்.

அவன் பேசுகின்ருன்.....

இதுவரை உங்கள் முன் நடித்துக் கொண்டு நின்றவர்கள் உங்களில் சிலரையும் என்னையும் ஒரு பாடமாக உங்கள் முன் நடித்துக் காட்டினுர்கள். இவர்களில் பலர் அன்றைய நாட்களில் ஊர் எல்லாம் கூடி ஒரு தேர் இழுக்கிறதே வாருங்கள் நாமும் வடம்பிடிப்போம் என சென்றவர்கள். புதிய பூமியை படைக்கவென்று போனவர்களில் அழிந்தவர்கள், எரிந்தவர்கள். இன்று இருப்பவர்கள் இவர்களில் எஞ்சியிருப்பவர்கள்.

"தீயினுக்கு எப்படி பூவின் நிறம்
பூவினுக்கு எப்படி தீயின் நிறம்"

இருந்தீர்கள் என்ருல் அதிசயங்களை இன்னும் காண்பீர்கள்.

குண்டு துளைத்து குருதி குளிப்பாடி மரணத்தை, காலால் உதைந்த இந்த நூற்ருண்டின் இணையற்ற வீரர்கள் அந்நிய நிலத்தினிலே தடுமாறி உருமாறி அலைந்து தேடி போராடும் வாழ்வு.

ஊருக்கு நாலு சாதி- சாதிக்குள்ளும் நாலுவகை வளவை சுற்றி வேலி, வீட்டுக்கொரு கிணறு குறுகிப் போன மனங்களைப் போல் அமைந்த வாழ்வு.

வெளியிலே வெளிக்கிடும்போது இவைகளையும் மனங்களில் காவி, மூவாயிரம் ஆண்டு சிறுமைகளை காலுக்கு விலங்காக்கி அப்பனும் பாட்டனும் கேள்விப்படாத நாடுகளிலே அவர்களின் வம்சங்களில் குறையும் நிறையும் தொடரும்.

இப்பொழுது உங்களை ரொரன்ரோவில் இருக்கும் யாழ்ப்பாணத்தில் இன்னெரு காட்சிக்கு அழைத்துச் செல்கின்றேன்.

#### காட்சி 2

திரைவிலகின்றது- கதிரையில ஒருவர் இருக்கின்ருர். ரெலிபோன் பக்கத்தில் இருக்கின்றது. பியர் குடித்துக்கொண்டு இருக்கின்ருர். சுற்றி வர பியர் போத்தல்களாய் இருக்கின்றது.

ரெலிபோன் மணி அடிக்கின்றது அவர் ரெலிபோனில் பேசுகின்ருர்.

"ஓம் நான்தான் பேசுகின்றேன்"

"....."

"ஒமோம், குரலுக்கென்ன ஒண்டுமில்லை"

"....."

"ஓமோம் நேற்று ஐந்தாறு தடவை ரெலிபோன் உமக்கு எடுத்தனுன்."

"......................"

"ஒண்டும் இல்லை ஒண்டும் இல்லை"

".............."

"வாழ்க்கையே போச்சுது. நான் இருந்தென்ன இறந்தென்ன"

".............."

"நான் அழேல்லை சொல்லும்"

"...."

"சொல்லி ஆற ஒரு மனுசர் இல்லை. உற்றம் இருக்கோ இங்கே சுற்றம் இருக்கோ"

"......"

"வெறியில்லை சொல்லும்"

"............"

"எனக்கு இப்ப என்றை மகளைப்பார்க்க வேணும்"

"............"

"உம்மாலை இப்ப இங்கை ஒருக்கால் வரமுடியுமோ
நேரம் இல்லாவிட்டால் பறவாய் இல்லை"

"................."

"உம்முடைய பிரச்சனைகள் வேறை என்ரை பிரச்சனைகள் வேறை"

"....."

"எம் ஒருக்கால்தான் வேலைக்கு போறேன் உழைக்கிறேன் எண்ட திமிர்."

"......"

"யாரோ பேப்பரிலை எழுதின மாதிரி பெண் சாதிக்கில்லை. யாருக்கு அடிச்சாலும் பொலிசில கொண்டுபோய் உள்ளுக்கை வைக்கும்."

"...."

"ஓம்.........ஓம்.."

"...."

"நானும் விசர் வேலை பார்த்து விட்டேன் அவளுக்கும் சரியான வாய். முந்தி அப்படியெண்டு இல்லை இடைக்கிடை பிரச்சனை வரும் பிறகு தீர்ந்து போகும்...."

"......."

"எனக்கு தனியே இருக்க விசராய் கிடக்கு, வேறு யாருக்கும் இதைச் சொல்லவும் முடியாது."

"......."

"தமக்கை வீட்டை தான் பிள்ளையையும் கொண்டு போய்விட்டா என்று நினைக்கின்றேன்."

"............"

"எல்லாத்தையும் விட்டு விட்டு ஊருக்கு போய் விடலாம் போல கிடக்கு உண்மையில ஊரிலை நிம்மதியான சீவியம்"

"...."

"அவசரப்பட்டு வீட்டை வாங்கி மோட்கேஜ் கட்டாமல் பாங்க் பறித்த பிறகுதான் குடும்பத்திலை இப்படிச் சண்டை வரத்தொடங்கியது"

"..."

"நேற்று வேலையாலை வந்துதான்"

"...."

"உமக்கும் சொல்லாமல் யாருக்கு சொல்லுறது"

திரை மூடுகின்றது.

மேடையில் ஒரு பெண்ணும் ஒரு பெண் குழந்தையும் இருக்கின்ருர். முதலில் ரெலிபோனில் பேசிய நபர் உள்ளுக்கு வருகின்ருர்.

குழந்தை- அப்பா, வந்து விட்டார். அப்பா வந்த விட்டா அப்பா எனக்கு எனக்கு என்ன கொண்டு வந்த நீங்கள்.

ஆண்- களையையும் அலுப்பையும் கொண்டு வந்தனுன் (தனக்குள் புறுபுறுக்கின்ருர்)

குழந்தை- அப்பா, எனக்கென்னப்பா கொண்டுவந்த நீங்கள்?

ஆண்: ஒரு கடகம் ஸ்னே கொண்டு வந்தனுன் வெளியிலை கிடக்கு போய் எடு!

பெண்- ஏனப்பா குழந்தையோடை எரிஞ்சு விழுறியள்.

தொடரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "நதிங்"கணைத்தோம்

## மாஸ்டர் ரவி

தொலைக்காட்சியில் தளபாட விற்பனையாளர்களான 'துஷ்ட பையன்கள்' கடைக்காரர்கள் சிறைக்குற்றவாளிகள் போல வரிக்குதிரை போல உடுத்துக்கொண்டு 'நோபொடி' என்று கத்துவதைக் கண்டிருப்பீர்கள். இவர்கள் சமீபத்தில் தங்கள் விளம்பரங்களில் அமெரிக்க ஜனாதிபதி போன்ற தோற்றம்கொண்ட ஒருவரை பயன்படுத்தியதற்கு வெள்ளை மாளிகை கண்டனம் தெரிவித்திருந்தது. அதன்பின் அவரது மனைவி போன்ற தோற்றம் கொண்ட இன்னொருவரையும் இந்த நிறுவனம் பயன்படுத்தியிருந்தது.

இதில் தந்தையார் வடயோர்க் நகரத்தின் மேயர் ஆவர். இவர் முன்பு வைத்திருந்த கடயை விற்று விட்டு அரசியலில் இறங்கி, கனடாவில் அதிக காலம் மேயராக இருப்பவர் என்ற சாதனையை நிலைநாட்டியிருக்கிறார். தற்போது மகன் வியாபாரத்தில் இறங்கியிருக்கிறார்.

இவர்கள் நோபொடி என்று சொல்லி கூச்சலிடுவது பிரபலயமானது.

★ ★ ★

வெள்ளையர்கள் கூட இந்த Nobody, nothing போன்றவற்றை பாவிப்பதில் தவறு விடுவதுண்டு. உதாரணமாக, நீங்கள் தவறு செய்யும் போது கண்டால், நான் இதைக் காணவில்லை என்ற அர்த்தத்தில் I don't see nothing என்பார்கள். அத்தோடு நான் யாருக்கும் இதைச் சொல்ல மாட்டேன் என்ற கருத்தில் I won't tell nobody என்பார்கள். உண்மையில் இந்தப் பாவனை தவறானது. nobody, nothing என்பன not anybody, not anything என்ற சொற்களின் சேர்க்கை போன்றது.

எனவே I see something என்றால் நான் எதையோ காண்கிறேன். இதற்கு எதிர்மறையாக வர வேண்டியது I do not see anything. அதாவது நான் ஒன்றையும் காணவில்லை. இதற்கு பதிலாக I see nothing என்று சொல்லலாம்.

ஆனால் I don't see nothing என்றால் உண்மையில் எதையோ காண்கிறேன் என்று தான் அர்த்தம். இது இரண்டு சய அடையாளங்களைப் பெருக்கும் போது சக அடையாளமாக மாறுவது போன்றது. இருப்பினும் இது வழமையில் பயன்படுத்தப் படுவதில்லை.

I have something என்னிடம் கொஞ்சம் இருக்கிறது

I don't have anything என்னிடம் ஒன்றுமில்லை.

I have nothing என்னிடம் ஒன்றுமில்லை.

I don't have nothing என்னிடம் ஒன்றுமில்லாமல் இல்லை. (ஏதோ கொஞ்சம் இருக்கிறது)

இதைப் போலத் தான் I will tell somebody என்றால் நான் யாருக்காவது சொல்வேன்.

I won't tell anybody என்றால் நான் யாருக்கும் சொல்ல மாட்டேன். அல்லது I will tell nobody என்று சொல்லலாம். ஆனால் I won't tell nobody என்றால் நான் யாருக்கும் சொல்லாமல் இருக்க மாட்டேன் என்ற அர்த்தத்தில் வரும். சொல்லித் தொலைப்பேன் என்ற மாதிரி.

## கியூறியஸ்..

ஹெலிகொப்டர் என்று பெரும் வர்த்தக முயற்சிகளும் உண்டு. இவர் பற்றி ஒரு தடவை இந்திய ஸ்போர்ட்ஸ் ஸ்டாரில் நடுப்பக்க படத்துடன் கூடிய கட்டுரை வந்திருந்தது.

இவரது தற்போதைய மரணம் பிரேசிலில் பெரும் துயரத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

★ ★ ★

சென்னா எப்போதுமே போட்டிகளில் அவதானமாக இருப்பவர். 'என் தொழில் மீதான எனது வேட்கை உயிர்த்துடிப்புடன் இருக்கும்வரை, எனது கனவு உயிர் தப்புவதுதான். இந்த வேட்கை பலமிழக்கும் போது, எனது கனவும் முடிவுக்கு வரும். போர்முலா ஒன்று போட்டிகளில் பலமிழந்தவர்கள் உயிர் தப்பி வாழ முடியாது. கிறேூ பிறியில் உயிர் தப்பி வாழ, நீங்கள் பயப்பட்டே ஆக வேண்டும். பயம்தான் இங்கே கொண்டிருக்கவேண்டிய முக்கியமான விசயம். நீங்கள் ஒன்றாக இருப்பதற்கு அது உதவுகிறது. அது நீண்ட காலவும் பந்தயத்தில் கலந்து கொள்ளவும், நீண்ட காலம் வாழவும் உதவுகிறது' இதுதான் சென்னா சொன்னது.

★ ★ ★

பயம் கூட ஒரு வகையில் உதவத்தான் செய்கிறது. அஞ்சுவது அஞ்சாமை பேதமை. இருந்தாலும் 'அஞ்சி அஞ்சிச் சாவார். இவர் அஞ்சாத பொருளில்லை பூமியிலே' என்று அச்சம் காரணமாக எதையும் செய்யாமல் விடுவதும் மௌனமாக இருப்பதும் அர்த்தமில்லாதது.

சென்னா இறந்த அதே வாரம் தான் சபாலிங்கமும் இறந்திருக்கிறார். இருவருமே தாங்கள் செய்தவற்றில் பூரண நம்பிக்கை கொண்டிருந்தார்கள். அதனால் வரும் ஆபத்துக்களை உணர்ந்திருந்தார்கள். இருந்தாலும் தங்கள் முயற்சிகளை இதற்காக விட்டு விடவில்லை.

கியூறியஸும் அவ்வாறே என் க. கியூறியஸ்க்கு கார் ரேஸ்களில் போட்டியிடும் இலட்சியக் கனவு நிறைவேறாது போனதில் எந்தக் கவலையும் இல்லை. கார் பந்தயங்களில் மட்டும்தான் மரண ஆபத்து உண்டு என்றில்லையே. இதுவரை காலமும் கார் பந்தயங்களில் இறந்தவர்களை விட, புலிகளால் கொல்லப்பட்ட தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். அதுவும் புலிகளை விமர்சிப்பவர்களுக்கான ஆபத்து இன்னமும் அதிகம்.

தமிழனாய் இருப்பதும் எழுதுவதும் கார்ஓட்டத்தில் வருகின்ற உயிராபத்தை விட அதிக ஆபத்தைக் கொண்டு வரும்.

நீண்ட காலம் வாழவும் நீண்ட காலம் போட்டியில் ஈடுபடவும் பயம் தேவைப்படுகிறது என்று சொன்ன சென்னாவுக்கு சுமார் என் வயதிலேயே மரணம் வந்து விட்டது. இவருக்கு இதுதான் முடிவு என்று 'எம் பெருமான்' 'தலையில் (நெற்றியில்) எழுதி' விட்டால் யார் தான் மாற்ற முடியும்? இதற்காக பயந்து கொண்டு செய்ய வேண்டியவற்றை செய்யாமல் விடத்தான் முடியுமா?

வெறும் கனவுகளுக்காக தியாகியாவதை விட, கருத்துக்களுக்காக துரோகியாவது மேல்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கார் ஓட்டும் கியூறியஸும் கிறே(ன்) பிறியும்

**அறுஞர் போராசிரியர் கல்லாநிதி கியூறியஸ் ஜீ**

**'எதையோ எழுத வேண்டும் என்பதற்காக புத்திசாலிகள் எழுதுகிறார்கள். எதையாவது எழுத வேண்டுமே என்பதற்காக முட்டாள்கள் எழுதுகிறார்கள்'**

நக்கீரர்கள்

சென்ற வாரங்களில் என் மனதை நெகிழ வைத்தவை இரண்டு மரணங்கள். ஒன்று சபாலிங்கத்தின் மரணம். மரணத்திற்கான அச்சம் இன்றி, தனது 'கருத்துக்களை தயங்காமல் கூறியிருந்தவர் அவர். கடந்த இலக்கிய சந்திப்பு பற்றிய அவரது கருத்துக்கள் (இவர் எழுதிய கருத்துக்கள் என் கண்களுக்கு அகப்படவில்லை. அதற்கு பதிலாக வந்த விடயங்களைக் கண்டேன்.) ஐரோப்பிய இலக்கிய சஞ்சிகைகளில் விவாதத்திற்கு ரியதாக இருந்தது. அவர் தாயகத்திற்கு எழுதியிருந்த கட்டுரை பற்றி சென்ற வாரம் குறிப்பிட்டிருந்தேன். இவ்வாரம் தராக்கி ஐலண்டில் தனது கட்டுரையில் சபாலிங்கம் பற்றி எழுதிய போது, தாயகத்தில் வந்த கட்டுரை பற்றி எழுதியதுடன் தாயகம் பற்றியும் குறிப்புகள் எழுதியிருக்கிறார்.

சபாலிங்கத்தின் முயற்சிகள் சபாலிங்கத்தின் மரணத்துடன் அஸ்தமிக்கக் கூடாது என்பது அனைவரதும் விருப்பும் கூட. உணர்வுபூர்வமான இலட்சியத்துக்கு உயிரைக் கொடுப்பதை விட, அறிவுபூர்வமான கருத்துக்காக உயிரைக் கொடுப்பது உண்மையில் பெரிய தியாகம்.

தனது முயற்சிகளில் மரணம் பெரும சாதத்தியமானது என்றும் தெரிந்து கொண்டு துணிச்சலாக இறங்குபவர்கள் என்றைக்குமே கியூறியஸின் மதிப்புக்குரியவர்கள்.

★ ★ ★

என் மனதை நெகிழ வைத்த அடுத்த மரணம் ஏட்டன் சென்னுவின் மரணம். இது யார் என்று உங்களில் அனேகருக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லை. கார் ஓட்டப் பந்தயத்தில் மூன்று முறை சர்வதேச சாம்பியனாக தெரிவு செய்யப்பட்ட சென்னு என் அபிமானத்திற்குரியவர்களில் ஒருவர்.

உங்களில் பலருக்கு பேஸ்போலில், ஹொக்கியில் அபிமானம் இருக்கும். அதன் வீரர்கள் பெயர்கள் எல்லாம் சொல்வீர்கள்.... குதிரைப் பந்தயத்தில் பணம் கட்டுபவர்கள் மாதிரி.. கொழும்பிலிருந்து காலை ஆறு மணி புகையிரதம் பிடித்து வந்தீர்கள் என்றால்.. அற்புதமாக இருக்கும். மலைகள் தூரத்தில் புகை மண்டலமாய் தென்பட, வயல் வரம்புகளில் யூனிபோர்முடன் செல்கின்ற பள்ளிப்பிள்ளைகள் உட்பட எல்லாமே மனதை விட்டு அகலாதவை. அதுவும் காதல் பண்ணும் வயது என்றால்.. கற்பனை சிறகு கட்ட, அந்த வயல்வெளிகளில் டுயட் பாடாத குறையாக ஜொள்ளுவீர்கள்.

இந்தப் பயணத்தின் போது பார்த்தீர்கள் என்றால் பெருவயல்வெளியில் புகையிரதம் போக, இடையில் நிற்பவர்களுக்காக இந்த குதிரைப் பந்தயப் பத்திரிகைக்காரர்கள் பத்திரிகைக் கட்டுக்களைத் தூக்கி எறிவதையும் காணலாம். பத்திரிகையைப் பிரித்தால் மடக்கை வாய்பாடு மாதிரி இருக்கும். ஒன்றுமே விளங்காது. ஆனால் பந்தயம் பிடிப்பவர்களைக் கேட்டால் குதிரையின் பாட்டன், பூட்டன் எந்த பந்தயங்களில் வென்றன என்பதும் அந்தக் குதிரைகளை ஓட்டுகின்ற ஜொக்கிகளின் பூர்வீகம் என்ன என்பதும் தண்ணி பட்டபாடு. அது மாதிரி ஆர்வம் இருப்பதால் உங்களுக்கு இந்த விளையாட்டு நெருக்கமாகி விடுவார்கள்.




மல்யுத்தம் செய்பவர்கள் பலர் எங்களவர்களுக்கு நெருக்கமானவர்கள். 'உவன் சந்தானம் இண்டைக்கு விளையாடுறானும்'. யார்? சண்ராஞ என்ற பெயர் தான். மச்சமான், கல்கோவன் என்ற இனிய தமிழ் பெயர்களைச் சூட்டி 'அவன், இவன், டா' போட்டு பேசுவார்கள். ஒருவருக்கு செவிடன் என்று பட்டம். என்னவென்று விசாரித்தால்.. மல்யுத்த நேரத்தில் காதில் இயர்போன் பூட்டி நிகழ்ச்சி தொகுப்பு செய்கின்ற மொட்டையருக்கு காது கேட்காது என்ற ஊகத்தில் வைத்த பெயராம்.

★ ★ ★

இதைப் போன்றே கியூறியஸிற்கு பிடித்தமான விளையாட்டு கார் ரேசிங்! (அல்லது அதை டி.வியில் பார்ப்பது!) இதற்கு காரணமே இருக்கிறது. மூணும் வகுப்பு படிக்கும் காலத்தில் கியூறியஸின் அம்மா, தன் கடைக்குட்டிக்கு ஒரு ரேசிங் கார் பொம்மை வாங்கித் தந்தது தான் இதன் காரணம். பின் காலங்களில் எங்கள் தோட்டத்தில் கத்தரி நடுவதற்காக கொத்திய போது அங்கு இந்த காரின் சில்லுகள் அகப்பட்டது வேறு பிரச்சனை.

இந்த ஆர்வம் காரணமாக தற்போது எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூல் நிலையத்தில் கார் பந்தயங்கள் பற்றிய எல்லாப் புத்தகங்களையும் எண்பதுகளின் நடுப்பகுதியில் கியூறியஸ் வாசித்து முடித்திருந்தான் என்றால் பாருங்களேன். (என்ன, ஒரு நாலு புத்தகம்தான்!)

அன்று முதல் இன்று வரை குதிரைப் பந்தய சூதாடிகள் மாதிரி, எனக்கும் இந்த பந்தயங்களில் பங்குபற்றுவோர் வெல்லுவோர் பற்றிய சகல விடயங்களும் அத்துபடி.

★ ★ ★

ஒரு காலத்தில் வாழ்க்கையின் இலட்சியமே கார்ப் பந்தயங்களில் கலந்து கொள்ள வேண்டும் என்று தான் இருந்தது. வெற்றிக்காக மரணத்தின் ஓரங்களைத் தொட்டு விடுகின்ற விளையாட்டு என்றாலும்

www.tamilarangam.net

# அறு(சு)வை

அதில் உள்ள துணிச்சல், செலுத்த வேண்டிய கவனம், வேகமாக முடிவுகளை எடுக்க வேண்டிய தேவை போன்ற விடயங்கள் எனக்குப் பிடிக்கும். இவ்வளவு கனவுகளை வைத்திருந்தும் இன்னமும் கார் லைசன்ஸ் எடுக்க முடியாமல் நாலைந்து தடவைகள் பெயிலானது இங்கு குறிப்பிடற்பாலது.

★ ★ ★

கார் பந்தயங்களில் பல வகைகள் உண்டு. அதில் ஒன்று Formula One Grand Prix. இந்த சொல் கிராண்ட் பிறிக்ஸ் என்று உச்சரிக்கப்படுவதில்லை. பிரெஞ்சு மொழி மூலத்தின்படி கிரே(ன்) பிறி என்று தான் உச்சரிக்கப்பட வேண்டும். மற்றது Indianapolis 500. இன்னொன்று NASCAR. Rally என்றொரு ரகம். Le mans இல் நடைபெறும் போட்டி இன்னொரு ரகம்.

இதில் NASCAR என்பது National Association of Stock Car Racing எனப்படுவது. இது சாதாரண கார்களை பந்தயங்களுக்காக மாற்றியமைத்து நடத்தப்படுவது. ஒரு வட்டப் பாதையில் மரதன் ஓட்டம் மாதிரி சுற்றிச் சுற்றி ஓடுவார்கள். அமெரிக்க கார் நிறுவனங்கள் பெரும்பாலும் கலந்து கொள்வது இதில்தான்.

மற்றது இன்டி தொடர்கள். இது இண்டியானாப்பொலிஸில் நகருக்குள் நடத்தப்படுவது. இதைப் போல ரொறன்ரோ போன்ற முக்கிய நகர்களில் வழமையாக கார்கள் செல்லும் தெருக்களில் இந்த பந்தயம் நடத்தப்படும். வட அமெரிக்காவில் மட்டுமே இந்தப் பந்தயம் நடக்கும். இந்த பந்தயங்களில் மரியோ அன்ரட்டி, மைக்கல் அன்ரட்டி என்று தந்தையும் மகனும் இன்னொரு சிறிய தந்தையும், மற்றது பொபி அன்சர், அல் அன்சர் என்று பல குடும்ப அங்கத்தவர்கள் கலந்து கொள்வார்கள்.

Rally என்பது நீண்ட தூர பந்தயம். நீண்ட நாட்களுக்கு நடக்கும். பாரிஸிலிருந்து அல்ஜீரியாவின் டாக்கார் வரை நடக்கும் பந்தயம் உலகப் புகழ் பெற்றது. இதில் எந்த வகை கார்களும் பங்குபற்றலாம். ஜீப், கார், லொறி, மோட்டார் சைக்கிள் என்று எல்லாமே பங்குபற்றும். செல்பவர்கள் கதிர்காமத்திற்கு மாட்டு வண்டியில் போவது போல தங்கி தங்கி செல்ல வேண்டியதுதான். பெரும் பாலைவனங்கள், ஆறுகள், மலைகளைத் தாண்டி முடிவிடத்தை அடைய வேண்டும். இதைப் போன்றே இந்தியாவில் இமயமலைத் தொடர் அடிவாரத்திலும் ஒரு போட்டி நடத்தப்படுகிறது.

Le mans இல் நடப்பது இன்னொரு ரகம். இதில் 24 மணி நேரம் இரண்டு சாரதிகள் மாறி மாறி கார் ஓட்டுவர்.

மற்றது தான் இந்த போர்முலா ஒன்று தொடர். இதில் தான் உலக சாம்பியன் தெரிவாவது. ஜப்பான், இத்தாலி, ஜேர்மனி, அவுஸ்திரேலியா, பிரேசில், மெக்சிக்கோ என பலவேறு நாடுகளிலும் அமெரிக்காவில் டெட்ரோயிட் நகரில் மட்டும் இந்தப் போட்டிகள் நடைபெறும். இந்தப் போட்டிகளில் கலந்து கொண்டு வெல்பவர்களுக்கு புள்ளிகள் வழங்கப்படும். ஒரு வருடத் தொடரில் அதிக புள்ளிகள் பெறுபவர் அந்த வருட உலக சாம்பியனாக தெரிவு செய்யப்படுவார்.

மொனாகோவில் மொன்ரே கார்லோவில் நடைபெறும் பந்தயத்தில் ஒன்றரை மைல் சுற்றளவான பந்தய பாதையில் ஒரு சுற்று சுற்றி வருவதற்குள் 1200 தடவைகள் கியர் மாற்ற வேண்டும் என்றால் பாருங்களேன். கார்கள் ஓடி முடிந்து டயர் மாற்றவும் பெற்றோல் நிரப்பவும் வரும் போது சுமார் பத்து செக்கன்களுக்குள் எல்லாம் செய்து முடிக்கின்ற டீம்கள் உண்டு

★ ★ ★

இதை விட go karting என்று ஒரு வகை கார் ரேஸ் உண்டு. ஒரு நிறுவனம் முன்பு புல் வெட்டுவதற்கு ஒரு இயந்திரம் ஒன்றைச் செய்தது. அது விற்பனையாகாமல் தேங்கிப் போக, அவர்கள் அதற்கு திருத்தங்கள் செய்து ஒரு கார் போன்ற அமைப்பை உருவாக்கினர். இது சிறிய சில்லுகளுடன் உள்ளது. இவற்றுக்கான பந்தயமும் பிரபலமானது. பல புகழ் பெற்ற சாரதிகள் இந்த வாகனங்களை ஓடிய பின்னர் தான் பெரிய ரேஸ்களில் கலந்து கொள்வார்கள்.

★ ★ ★

நுவரெலியாவிலும் தற்போது கார் ரேஸ்கள் நடைபெறுகின்றன. முன்பு பிரி பொன்னம்பலம் என்பவர் அடிக்கடி பரிசுகள் பெறுவார். கொத்மலையில் மோட்டார் சைக்கிள் பந்தயம் நடைபெறும். இப்போதும் தமிழர்கள் கலந்து கொள்வது பற்றி பத்திரிகைகளில் கண்டிருக்கிறேன்.

சென்னையிலும் சோழாவரம் ரேஸ் பிரபலயமானது. அங்கும் நிறைய தமிழர்கள் கலந்து கொள்வார்கள்.

★ ★ ★

நம்ம தமிழர்களும் சிலர் காரில் ஏறிக் கொண்டால் பெரிய சாம்பியன் என்ற நினைப்பு வந்து விடும். அந்த மாதிரி அமத்துவார்கள். இதில் ஏற்படுகின்ற திறிலை விட, காட்டுகின்ற விலாசம் பெரிதாக இருக்கும். முக்கியமாக சனநடமாட்டம் உள்ள கோயில்கள், கலைவிழாக்கள், தியேட்டர்களில் நிகழ்ச்சிகள், வழிபாடுகள் முடிந்ததும் சனங்கள் வெளியே நிற்கும் போது கார்கள் உறுமிக்கொண்டு ஓடும்போது இந்த விலாசகாரரைக் காணலாம். பயங்கரமாய் வெட்டி எடுத்து, பிரேக் அடித்து, ஹோர்ண் அடித்து கன்னிப்பெண்களுக்கு வலை வீசுகின்ற இந்த சாம்பியன்கள் பலர் கொஞ்ச நாளில் வேலை போய் கார் பறிமுதலாக.. நடை மெலிந்தோருர் நண்ணும்போது சிரிப்பாய் இருக்கும்

★ ★ ★

பந்தயக் கார்களில் சாரதி உட்கார்ந்தே இருப்பார். இது cockpit எனப்படும். விமானங்களின் விமானிகள் இருக்கும் பகுதிக்கும் இதுதான் பெயர். cockpit என்றதுதான் ஞாபகம் வருகிறது. ஒரு கேள்வி.. நகைச்சுவையானது. 'விமானத்திலும் பெண்ணிலும் இருக்கின்ற பொதுவான அம்சம் என்ன?' இதற்கான பதிலை நான் சொல்ல... மாட்டேன்!

கியூரியஸ்! எளிய வடுவா! நீ பகிடி பகிடியா இதுகளைச் சொல்லிப் போட்டுப் போயிடுவாய்.

★ ★ ★

சிறிய saucer அளவில் ஸ்டியரிங். சாரதியைச் சூழ பெற்றோல் தாங்கி. எரியும் பட்சத்தில் தாங்கிக் கொள்வதற்காக தீப்பற்றாத, வெப்பத்தைத் தாங்கக் கூடிய ஆடைகளுடன் சாரதி இருப்பார்.

இந்த கார்களில் பின்னால் ஒரு தலைகீழ் ப எழுத்து வடிவில் கொம்பு போன்ற ஒன்று இருப்பதைப் பார்ப்பீர்கள். அது இருப்பதற்கு காரணமே இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கார்கள் பந்தயத்தில் ஓடும்போதுகிட்டத்தட்ட விமானங்கள் பறப்பதற்கு முன்னர் ஓடுபாதையில் ஓடுகின்ற வேகத்திலேயே ஓடுகின்றன. இந்த வேகத்தில் ஓடும்போது கார்கள் மேலே தூக்கப்பட சந்தர்ப்பங்கள் உள்ளன. இதனுல் காரிற்கு அழுத்தம் ஒன்றைக் கொடுப்பதற்காக இந்த ப வடிவில் உள்ள பகுதியின் மேல் தட்டு ஓடும்போது தட்டையாக எழும். காற்று இதனூடாக செல்லும் போது ஏற்படும் அழுத்தம் ஐந்து தொன் வரை இருக்குமாம். இந்த அழுத்தம் காரணமாக கார் நிலத்திலேயே தொடர்ந்து நிற்கும்.

★ ★ ★

இந்த சம்பியன்களில் முக்கியமானவர் நிக்கி லவுடா. ஆஸ்திரிய ஜேர்மன்காரரான இவர் ஜேர்மனியில் நியுரன்பேர்க்றிங் என்ற இடத்தில் (இந்த இடத்திற்கும் நியுரன்பேர்க்குக்கும் சம்பந்தமில்லே. இந்த இடம் ஜேர்மனியின் பொன் நகருக்கு சமீபமாக உள்ளது) நடைபெற்ற பந்தயத்தில் கார் மோதியதில் எரிந்தவர். தலைமயிர், காது போன்றன கருகி, பிளாஸ்டிக் சிகிச்சையின் புதுத் தோற்றம் பெற்றவர். 82ல் உலக சாம்பியனுகி, பின்னர் எரிந்த பின்னர் மீண்டும் வந்து திரும்பவும் சாம்பியனுனுர்.

இவருக்கு சொந்தமாக விமான நிறுவனம் ஒன்றுண்டு. இந்த விமானங்களில் ஒன்று தான் பாங்கொக்கில் ஒரு தடவை விழுந்து நொருங்கியது.

★ ★ ★

இன்னொருவர் அலன் புரோ(ஸ்ட்) என்ற பிரெஞ்சுக்காரர். புகழ் பெற்ற கார்ப் பந்தயக்காரர். கியூறியஸ் போலன்றி இவர் உண்மையாகவே பேராசிரியர் என்று அழைக்கப்படுபவர். நான்கு தடவைகள் சாம்பியனுனவர். இவருக்கு பிரான்ஸ் ஜனதிபதி பிரான்சின் அதியுயர் விருதைக் கொடுத்திருந்தார். 82ம் ஆண்டளவில் இவரது ஹெலமட்டில் 'அக்காய்' நிறுவன ஸ்டிக்கர் ஒட்ட கொடுக்கப்பட்ட தொகை இரண்டரை லட்சம் டொலர்கள். இப்போது கார் பந்தயங்களே விட்டு ஓய்வு பெற்று பிரான்சின் றெனே கார் கம்பனிக்கு பொது தொடர்பாளராக வேலே செய்கிருர்.

★ ★ ★

இங்கிலாந்துக் காரரான ஜக்கி ஸ்ருவாட் பழைய பிரபலமானவர்களில் ஒருவர். இவர் ஒருவர்தான் கிரேு பிறி, இன்டி, லு மான் போட்டிகள் மூன்றிலும் சாம்பியன் பட்டம் பெற்றவர். பந்தயங்களில் பாதுகாப்புகள் பற்றி மிகவும் அக்கறை கொண்டவர். ஒரு தடவை றீடர்ஸ் டைஜஸ்டில் எழுதிய கட்டுரை ஒன்றில் எழுதியதை வாசித்திருந்தேன். எந்த போட்டிக்கு சென்ருலும் தன் செலவில் ஒரு வைத்தியரை அழைத்துச் செல்வாராம். அந்த வைத்தியர் இருதயத்தை செயற்பட வைப்பதில் நிபுணர். காரணம், விபத்து ஏதாவது நடந்தால் வைத்தியசாலே செல்லும் வரைக்கும் உயிர்த்துடிப்புடன் வைத்திருப்பதற்காக.

★ ★ ★

இன்னெருவர் நெல்சன் பிக்கே. இவர் பிரேசிலியர். உலக சம்பியனுனவர். சென்ன, இன்டி பந்தயங்களில் போட்டியிடும் எமர்சன் பிற்றிப்பால்டி போன்ரோர் பிரேசிலில் நட்சத்திர அந்தஸ்து பெற்றவர்கள். பிரேசிலின் உதைபந்தாட்ட நட்சத்திரம் பெலேயிற்கு அடுத்து புகழ் பெற்றவர்கள் இவர்கள்.

★ ★ ★

சென்ற வாரம் இத்தாலியில் சான் மரினோ பந்தயத்தில் நடந்த விபத்தில் சென்ன கொல்லப்பட்டார். விபத்து நடந்து நான்கு மணி நேரத்தின் பின்னர் வைத்தியசாலேயில் இறந்தார். 299 கிலோ மீற்றர் வேகத்தில் கொங்கிறீட் சுவரில் மோதினுல் எப்படி இருக்கும்? இந்த போட்டிக்கு முதல் நாள் ஆஸ்திரிய புதிய சாரதியான ரோலண்ட் றற்சன்பேர்கர் விபத்தில் இதே இடத்தில் மரணமானுர்.

34 வயதான சென்ன மூன்று தடவைகள் உலக சாம்பியனுனவர். இதுவரையும் நூறு மில்லியன் டொலர்கள் வரை இவர் பந்தயத்தில் சம்பாதித்திருக்கிருர். ஒருதடவை ஒரு வருடத்தில் மட்டும் 24 மில்லியன் டொலர்கள். இவர்களுக்கு பந்தயத்தில் வெல்லும் போது கிடைக்கும் பரிசை விட, வர்த்தக நிறுவனங்கள் விளம்பரத்திற்காக கொடுக்கும் பணமே அதிகம்.

பிரேசிலில் அவுடி கார்கள் வினியோகம், சிறுவர்களுக்கான சித்திரக்கதை வெளியீடு, சொந்தமாய்

**33ம் பக்கம் பார்க்க..**

***This newspaper is published by Georgicka communications.***
***A member of Ethnic Press Council Of Canada.***
***Editor: George R.Ckrhushchev***
***இப்பத்திரிகை ஜோர்ஜிக்கா தொடர்பு நிறுவனத்திஞல் வெளியிடப்படுகிறது.***
***ஆசிரியர்: ஜோர்ஜ் இ. குருஷ்சேவ்***

**தொடர்புகளுக்கு**
**Georgicka communications**
**P.O.Box 1031, Station "F",**
*Toronto, Ont, M4Y 2T7.*
***Tel: (416) 920 9081***
***Fax: (416) 963 5738***
***E mail:71650.3216***
***@Compuserve.com***

**வாசகர்களின் வசதி கருதி தொலேபேசி பதிவு சேவை ஒன்றை தொடங்கியுள்ளோம். வெளிவந்த ஆக்கங்கள் பற்றிய உங்கள் கருத்துக்கள், முனியின் கேள்வி பதில்களுக்கான கேள்விகள், ஆக்கபூர்வமான கருத்துக்களே வெள்ளி மாலே முதல் ஞாயிறு நள்ளிரவு வரையில் 963 5738 என்ற இலக்கத்துடன் தொடர்பு கொண்டு ஒலிப்பதிவு செய்யலாம். தொடர்புகளுக்கு உங்கள் தொலேபேசி இலக்கத்தையும் பதிவு செய்ய மறக்காதீர்கள்.**

**உங்கள் ஆக்கங்கள். பத்திரிகை பற்றிய உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்கள் என்பவற்றை வரவேற்கிறோம். உங்கள் கருத்துக்களே எழுத்து மூலமாக அனுப்புங்கள். உங்கள் கருத்துக்கள் எதுவாயினும் பிரசுரிக்க முயற்சிப்போம். ஆக்கங்கள் தரங்கண்டு பிரசுரமாகும். ஆக்கங்களின் கருத்து சிதையாமல் மாற்றங்கள் செய்ய ஆசிரியருக்கு உரிமை உண்டு. ஆக்கங்களுடன் உங்கள் தொலேபேசி இலக்கங்களேயும் விலாசங்களேயும் குறிப்பிடுங்கள். படைப்புகளில் சொல்லப்படும் கருத்துக்களுக்கு எழுதியவர்களே பொறுப்பு. படைப்புகளில் வரும் கருத்துகள் ஆசிரியரின் கருத்தாக இருக்க வேண்டிய அவசியமில்லே.**

## தாயகம்
## சந்தா விபரம்

**கனடா ஆறுமாதம் $30**
**வெளிநாடுகள் ஆறு மாதம் US$60**
**வெளிநாட்டு வாசகர்களின் காசோலேகளின் இலக்கம் encoded செய்யப்பட்டிருக்க வேண்டும். காசோலேகள் அனைத்தும் Georgicka communications பெயருக்கு எழுதப்பட வேண்டும். (தாயகத்தின் பெயருக்கு அல்ல)**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒரே இடத்தில் உங்கள் அனைத்து இலங்கை, இந்திய, கனடிய
உணவுப் பொருட் தேவைகளுக்கும் நாட வேண்டிய இடம்

# அன்ரனி பிறதர்ஸ்

**1472 QUEEN ST WEST (QUEEN/LANSDOWNE),**
**TORONTO, ONT. M6K 1M4**

வாரத்தில் ஏழு நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 11 மணி வரை

உடன் மீன்,
இறைச்சி,
மரக்கறி, பழவகைகள்
மலிவு விலையில்

தமிழக, இலங்கை
வாரப்பத்திரிகைகள்,
சஞ்சிகைகள் உடனுக்குடன்

முத்திரை, சிகரெட்,
TTC Tickets, Lottery Tickets


★ போட்டோக்கொப்பி,
ஃபாக்ஸ் வசதிகள்

★ தமிழ், ஹிந்தி, மலையாள
வீடியோக்கள்
வாடகைக்குப் பெறலாம்

★ லேசர்
இசைத்தட்டுக்கள்
மலிவு விலையில்

# ANTONY BROTHERS

**TEL:(416) 588-0733**
**TEL/FAX:(416) 516 3903**




சிங்கப்பூரில் இருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
உடைகள்,
பரிசுப் பொருட்கள்,
அலங்காரப் பொருட்கள்
அனைத்தும் மலிவு விலையில்
பெற்றுக் கொள்ள

# ANTONY BROTHERS FASHION HOUSE

**1484 QUEEN ST WEST**
**Tel:(416) 588 0310**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

SIVA'S TRADING CO LTD 321-2739

## ஸ்காபரோ நகரின் தன்னிகரற்ற தமிழ் வியாபார நிலையம்

**அனைத்துப் பொருட்களும் மலிவு விலையில்**

★ இலங்கை, இந்திய உணவுப்பொருட்கள்
★ உடன் இறைச்சி,கடலுணவு,
★ பசுமையான மரக்கறி வகைகள்
★ தயாரிக்கப்பட்ட உணவுவகைகள் (இடியப்பம்,தோசை,அப்பம்)
★ சமையல் உபகரணங்கள்
★ இலங்கை, இந்திய சஞ்சிகைகள்

## சிவாஸ் ரேடிங் கோ லிமிட்

**3852 FINCH AVE EAST (KENNEDY/FINCH)**
**TEL:(416) 321 2739**

---

## P.S.T.T

**5210 FINCH AVE EAST #23**
**(FINCH/MIDDLEFIELD)**
**TEL:609-0141**

**வீடியோ ஒலிப்பதிவு நாடாக்கள், இந்திய உணவு வகைகளின் மொத்த விற்பனையாளர்**

சகல புதிய, பழைய தமிழ், இந்தி, மலையாளப் படங்கள் வாடகைக்கு கிடைக்கும்

**VIDEO TRANSFER (ANY SYSTEM) $8.99**